
# தமிழரசு

1-9-1983 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஆவணி 16








மாண்புமிகு முதல்வர் அவர்களை 25.8.'83
அன்று காலையில், இலங்கைக்கு இந்தியப் பிரதமரின்
சிறப்புத் தூதுவராகச் செல்லும் திரு ஜி.பார்த்தசாரதி
சந்தித்து உரையாடினார்.

"டான் இந்தியா வேட்டில் எக்ஸ்டிராக்ட் நிறுவனம்"
சார்பில் திரு.ராஜ்கபூர், திரு.ராஜேந்திரகுமார்,
திரு எஸ்.எஸ்.எம்.சவுண்டப்பன் ஆகியோர் இலங்கைத்
தமிழர் உதவி நிதிக்காக மாண்புமிகு முதல்வர்
திரு எம்.ஜி.ஆர் அவர்களிடம் ஓர் இலட்ச ரூபாய்க்
கான காசோலையை வழங்கினார்கள்.(25.8.83)



# நினைவில் நிறுத்துக!

இலங்கையில் இப்போது நடைபெறும் சம்பவங்கள் பெரிதும் வேதனை தருவதாக உள்ளன.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைகளைத் தீர்க்க நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். இந்த வாய்ப்பை இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே தவறவிட்டால் இலங்கை சுதந்திர நாடாக இருக்க முடியாது. ஆத்திரத்தில் அவர் வேறு நாட்டைத் துணைக்கு அழைத்தால், அந்நாடு இலங்கையில் காலூன்றுவதன் மூலம் இலங்கை அடிமை நாடாக ஆகக்கூடிய நிலைகூட உருவாகும்.

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைகள் தொடர்பாகத் தமிழக மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். அங்குள்ள தமிழர்களைக் கூண்டோடு அழிக்க மேலும் முயற்சிகள் நடைபெறுமானால், இலங்கை மோசமான விளைவுகளுக்கு அழைப்பு விடுப்பதாகவே அது அமையும்.

—மாண்புமிகு தமிழக முதல்வர்

[21.8.83 அன்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியதிலிருந்து]



தமிழரசு

மலர் : 14 இதழ் : 5

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — ஆவணி 16

1—9—1983

# சமத்துவ இலட்சியம் வெல்க!

## மாண்புமிகு முதல்வர்

என்னை வாழவைக்கும் தாய்மார்களே! என்னுடைய நல்ல செயல்களுக்கு எப்போதும் ஆதரவு தரும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

நமது தாய்த்திருநாடு விடுதலை பெற்று 36 ஆண்டுகள் நிறைவுற்று 37-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விடுதலைத் திருநாளை நாம் உள்ளத்தின் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றிக் கொண்டாட வேண்டிய கடமை உடையவர்கள் ஆனாலும், நம்முடைய கவனமெல்லாம் அண்மையில் உள்ள இலங்கைத் தீவில் கொடுமைகளுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கும் நமது சகோதரர்களைச் சுற்றியே வட்டமிட்டு வருகிறது.

தமிழக மக்களின் மனவுணர்வுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில் தமிழக அரசும், அரசின் அழைப்பை ஏற்று அனைத்துக் கட்சிகளும் செயல்பட்டன என்பதையும், அதன் காரணமாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவாக ஒரு தேசிய கருத்து எழுந்திருப்பதையும், இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இலங்கைத் தமிழர் துயர் தணிய உரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் அனைவரும் அறிவார்கள்.

இலங்கைத் தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளோடு கவுரவமான முறையில் வாழ்ந்திடவும், இலங்கையில் தமிழ் பேசும் மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும், மானத்துக்கும் பாதுகாப்பு கிட்டிடவும், பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு வகை செய்யப்படவும் மத்திய அரசின் வாயிலாகத் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்க நாம் தொடர்ந்து கடமை ஆற்றுவோம்: இதில் நமக்குள்ள பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றுவோம் என்று நாம் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

பாதுகாப்புக்கும், வழிகாட்டுதலுக்கும் தகுதிவாய்ந்த தலையான இடத்தைப் பெற்றுள்ள நம் நாட்டை மேலும் வலிமை மிக்கதாகவும், கட்டுக்கோப்புமிக்கதாகவும், ஆக்க வேண்டிய பொறுப்பை நாம் உணர்ந்து பணி





புரிய வேண்டிய கட்டாயத்தைக் காலம் நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அனைத்துமக்களுக்கும் சம உரிமை, சம வாய்ப்பு, மதச்சார்பற்ற தன்மை ஆகிய கோட்பாடுகள் ஒரு நாட்டுமக்களாலும், ஆட்சியினராலும் கடைப்பிடிக்கப்படவேண்டும். பிளவுமனப்பான்மையும், குறுகிய நோக்கமும் கொண்ட வன்முறைச் சக்திகளை ஒடுக்கி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கடமையை ஆட்சியில் உள்ளவர்கள் செம்மையுடன் நிறைவேற்றவேண்டும். இந்த அம்சங்களை ஒரு நாடு கடைப்பிடிக்கத் தவறினால் அதன் காரணமாக மக்களுக்கு எத்தகைய இன்னல்களும் இழப்புகளும் ஏற்படும் என்பதற்கு இலங்கை நிகழ்ச்சிகள் ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளன.

வருங்காலத் தலைமுறையினர் உரிமையுடன் இன்பமான விடுதலை வாழ்வு வாழ்ந்திட தங்களது இன்னுயிரைக் காணிக்கையாக்கிய தீரமிக்க தியாகத் திலகங்களை இன்று நன்றியுடன் வணங்கக் கடமைப்பட்டுள்ளோம். பெயர் தெரிந்தும் தெரியாமலும் விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட வீரப்பெருமக்கள் பெற்றுத் தந்த விடுதலையை என்ன விலை கொடுத்தாகிலும் காத்தே தீருவோம் என்று உறுதி ஏற்போம்.

விடுதலைப் போரை நடத்திய பாங்கு; வேற்றுமையில் ஒற்றுமை காத்திடும் நமது தனிப்பண்பு; மாபெரும் நாட்டை மக்களாட்சித் தத்துவ அடிப்படையில் செலுத்திக் கொண்டுவருகிற சிறப்பு; அமைதியான திட்டமிட்ட வழிகள் வாயிலாக முன்னேற்றத்தை அடையும் நமது பயணம் - இவற்றால் இந்தியத் திருநாடு உலக நாடுகளின் வரிசையில் தனியானதோர் இடத்தையும், மதிப்பையும் பெற்றுள்ளது. இத்தகைய தருணத்தில் இந்தியாவின் உண்மையான வலிமை தன் மக்களுடைய சீரான முன்னேற்றத்தில் தான் அடங்கியிருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

எந்த ஒரு நாடும் சலியாத உழைப்பின்றி, குறிக்கோளின்றி முன்னேற இயலாது. நாம் விடுதலை பெற்று 37 ஆண்டுகள் ஆன பிறகும் பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்ற பின்னரும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கை நம் நாட்டு மக்கள் தொகையில் சரி பாதி என்கிற உண்மையை நாம் மறத்தல் கூடாது. அப்படி நலிந்து கிடக்கும் மக்களைக் கைதூக்கி விடவில்லை என்றால், அதற்கான பணிகளை விரைவாகச் செயல்படுத்தவில்லை என்றால், மக்களாட்சித் தத்துவத்திற்குப் பொருளில்லை என்று ஆகிவிடும்.

''முன்னேறாமல் இருக்கிற ஒரு சமுதாயம் பலவீனமுற்றுவிடும். அந்தச் சமுதாயத்தின் ஆக்கப் பணிகள் அனைத்திலும் இந்தபலவீனத்தின் விளைவுகளே இடம் பிடித்துவிடும்'' என்று அமரர் பண்டித ஜவர்ஹர்லால் நேரு அவர்கள் மெத்தப் பொருத்தமாகக் கூறினார்கள். அப்படியானால் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் எவை? வளர்ச்சிப் பாதையில் வைக்கப்பட்டுள்ள தடைக் கற்கள் யாவை? என்பதை உணர்ந்து அவற்றை அகற்றுவதன் வாயிலாகத்தான் நாட்டின் உயர்வை உறுதி செய்ய முடியும்.

வன்முறையும், பிளவுச் சக்திகளுமே இன்றைக்கு எழுந்துள்ள மிகப் பெரிய தடைக் கற்கள். எந்த ஒரு பிரச்சினையிலும் தீர்வு காண வன்முறை வழியை நாடுவதும், நாட்டின் ஒட்டுமொத்த நலனைவிட ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கட்சியின் நலனே பெரிது என்று கருதும் மனப்பான்மையும் நாளடைவில் நம்மைச் சிதைத்துச்சீரழித்துவிடும். வன்முறைக்கும், பிளவு மனப்பான்மைக்கும் இடம் இல்லாத, இடம் தராத ஒரு உன்னதமான பொது வாழ்வை உருவாக்குவோம். அடித்தள மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற திட்டங்களுக்கு முதலிடம் தருவோம். சமுதாய ஒற்றுமைக்கான முயற்சிகளை விரைவுபடுத்துவோம். இந்த அடிப்படையான தேவைகளை நிறைவேற்றுவதன் வாயிலாக நமது நாட்டின் வலிமையைப் பெருக்குவோம். வலிமையும், ஒற்றுமையும் கட்டிக்காக்கப்படுகிற நிலையில் நம் நாடு திகழ்ந்திடுமானால் அதுவே வாழ்வற்று ஏங்கித் தவிக்கும் பிற மக்களுக்கு நல்லதொரு பாதுகாப்பாக இருக்கும் என்பதை அண்மைக்கால நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

தன்னுடைய உரிமைகளுக்காகப் போராடுவதிலும் எந்தக் கட்சி அல்லது தலைவருக்கும் அறவழியில் செல்ல உரிமை உண்டு. ஆனால் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற பொதுச் சொத்துக்களை அழிக்கவோ அல்லது உயிர்களைப் பலி வாங்கவோ எந்த ஒரு தலைவருக்கும், கட்சிக்கும், அமைப்பிற்கும் உரிமை கிடையாது என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். அப்படிப்பட்டவர்கள் மக்களின் நல்வாழ்வுக்கு எதிரான சமூக விரோதிகள் ஆவர். எவ்வளவு உன்னதமான கொள்கையாயிருப்பினும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காத செயலில் ஈடுபடுகிறவர்கள்தான் தேசப்பற்று உள்ளவர்கள், சமூகத்தைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள்.

இப்படிப்பட்ட உன்னதக் கொள்கைகளைக் கொண்ட நல்லவர்கள்தான் புதிய சமதர்ம, சமுதாயக் கொள்கைகளை மக்களுக்குத் தரமுடியும்.

''அத்தகைய புதிய இந்தியாவை, புதிய தமிழகத்தை சமதர்ம சமத்துவப் பாதையில் உறுதியோடு செலுத்த அயராது உழைப்போம். இந்த தூய நோக்கம் கொண்ட அனைவரையும் ஒரே அணிவகுப்பாகக் கொண்டு வருவோம்'' எனும் குறிக்கோளுடன் தொண்டாற்ற இந்த ஆண்டின் விடுதலைத் திருநாள் நமக்கெல்லாம் உணர்வூட்டும் திருநாளாக அமைந்திடும் என்று நம்புகிறேன்; அமைந்திட வேண்டும் என விரும்புகிறேன்.

இந்திய விடுதலை வாழ்க!.

நமது ஒற்றுமை முயற்சிகள் வெல்க!


சமத்துவ இலட்சியம் வெல்க!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித் திருநாடு!

வாழ்க அண்ணா நாமம்!

— மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்களின் சுதந்திர நாள் செய்தி (15-8-83)



# திரு.வி.க.வும் தேசியமும்

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர்
சிலம்புச் செல்வர்
டாக்டர். ம.பொ. சிவஞானம்

இந்தியாவில் கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை தேசிய எழுச்சி ஏற்பட்டது 19ஆம் நூற்றாண்டிலேதான் என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுகின்றனர். இந்த எழுச்சிக்கு இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகிய மூவரையும் அவர்கள் காரணமாக்குவதுண்டு. இது உண்மையானால், அந்த மூவரோடு வள்ளற்பெருமானையும் சேர்ப்பது, வரலாற்றை முழுமை படுத்துவதாக இருக்கும். ஆனால் அவர்கள் தோற்றுவித்ததுகூட கலாச்சார ரீதியான தேசிய எழுச்சிதான்! அதை முன்னோடியாகக் கொண்டு இருபதாம் நூற்றாண்டில் முதற் பத்தாண்டுக் காலத்திலே, அரசியல் ரீதியான தேசிய எழுச்சி தோன்றியது. அதிலே, தேச விடுதலை ஆவேசமும் சிறிதளவு கலந்து இருந்தது.

அதனை எழுப்பியவர்கள் லோகமான்ய திலகர், லாலாலஜபதிராய், அரவிந்த கோஷ் ஆகியோராவர் என்கிறார்கள் வரலாற்றுப் பேராசிரியர்கள். அந்த மூவருடன் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரையும் சேர்த்துச் சொன்னால் வாய்மை முழுமைபெறுவதாக இருக்கும்.

இந்திய தேசிய எழுச்சியானது அகிம்சை ரீதியான புரட்சி வடிவத்தைப் பெற்றது, காந்தியடிகள் இந்திய அரசியலில் புகுந்த காலத்திலேதான். சரியாக, 1919-ஆம்ஆண்டில் தேசாவேசமுடைய வன்முறையாளரை அடக்கிஒடுக்குவதற்கென்று, ''ரௌலட் சட்டங்கள்'' என்னும் பெயரில் இருவேறு சட்டங்களை பிரிட்டிஷ் ஆட்சி இந்திய சட்டசபையில் பிரேரணை செய்தது. அந்தக் கொடிய சட்டங்களை எதிர்த்து காந்தியடிகள் போர்முரசு கொட்டினார்.

இதற்கு முன்னே தியோசாபிகல் சங்கத்தின் தலைவரான அடையாறு பெசன்ட் அம்மையார் அவர்கள் ''ஹோம் ரூல்'' கிளர்ச்சி என்னும் பெயரிலே இந்திய சுயாட்சிக் கிளர்ச்சியைத் தோற்றுவித்தார்.

பெசன்ட் அம்மையாரின் எழுச்சிமிக்க பேச்சுக்களைக் கேட்டும், காந்தியடிகளின் அகிம்சை அரசியலிலே கவர்ச்சியுற்றும் திருவாரூர் விருதாச்சலனார் பெற்றெடுத்த கல்யாணசுந்தரனார், அரசியலில் புகுந்தார். அதன்பின், ''திரு.வி.க.'' என்னும் மூன்றெழுத்து மந்திரமான அவரது பெயர் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உள்ள தமிழர் நெஞ்சங்களிலே நிலைபெற்றது.

சென்னை இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த திரு.வி.க. தேசியவாதியாக மாறலானார். ஆம்; தமிழ் இலக்கியங்களில் வரும் பழந்தமிழர் வீரம் பற்றிய செய்திகளையெல்லாம் மாணவர்களுக்கு பாடம் சொல்வதையே தொழிலாகக் கொண்டிருந்த திரு.வி.க. அந்தத் தொழிலைத் துறந்து, தம் காலத்து தமிழ் மக்களுக்குப் புறநானூறு வீரத்தைப்போதித்து போதித்து, நாட்டுக்கு விடுதலை தேட இந்திய தேசிய காங்கிரசிலே இணைந்துகொண்டார்!

ஆம்; தீந்தமிழ்ப் பண்டிதர் தேசியவாதியானார்!

அன்றைய தேசியம் தாய்மொழிப்பற்றுக்குநெடுந்தொலைவில் இருந்தது. தேசிய காங்கிரசிலே புலவர்களைக் கண்டிராத காரணத்தால். அந்த நிலையில் தான் நிறைபுலமை பெற்ற பேராசிரியரான திரு.வி.கல்யாணசுந்தரனார், தேசிய அரசியலில் பிரவேசித்தார். அந்த நாள், தாய்மொழிப்பற்றும் தாய்நாட்டுப் பற்றும் பிணைந்தநன்னாளாகும்.

நல்ல தமிழிலே, ஆவேச அரசியலைப் பேச தேசிய மேடைக்கு திரு.வி.க. கிடைத்துவிட்டார். அவர் முதல்வரல்ல என்றாலும், வ.உ.சி., வ.வெ.சு. அய்யர் போன்ற முன்னணியில் இருந்த தமிழ்ப் புலவர்களிலே முக்கியமானவராவார். அன்றைய தேசியம் வகுப்புவாதத்தை அறியாதது மத வெறியை விரும்பாதது-ஏன் மாநில வேற்றுமையையும் மறந்தது!

அதனால்தான் ''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு'' என்று பாடினார் பாரதியார். ''எந்தையும் தாயும் மகிழ்ந்து என்று பாடினார் பாரதியார். ''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே'' என்றும் அவரை இதய எழுச்சியோடு இசைநயம் தோன்றப் பாடினார்.

அந்தப் பாட்டுக்குப் பொருள் உரைக்கும் பண்டிதப் பெருமானார் திரு.வி.க. அரசியல் மேடையில் ஏறினார். ''தாய்நாட்டை

வணங்குகிறேன்'' என்ற பொருளுடைய '' வந்தேமாதரம் '' என்னும் திருமந்திரச் சொல்லானது தமிழர் ஒவ்வொருவருடைய நாவிலேயும் நர்த்தனமாடிய காலம் அது. அந்த மந்திரத்தின் பொருளை விளக்கும் விரிவுரையாளராக திரு.வி.க. அரசியல் மேடையில் ஏறினார். அந்த மாமுனிக்கு ' 'தமிழகம் என்பது தாய்வீடு! ''பாரதம் ''என்பது தாய் நாடு''. '' வீடின்றி நாடில்லை; நாடின்றி வீடில்லை'' என்கிறார் தமது நூல் ஒன்றிலே!

காந்தியடிகள் 1919ல் சென்னைக்கு வருகை தந்தபோது, அவருடைய வாய்மை கலந்த ஆங்கிலப்பேச்சை தூய்மைகலந்த தமிழ் மொழியிலே பெயர்த்துச் சொன்ன பெருமை திரு.வி.க.வுக்கு உண்டு. ஆம்; வாய்மையாளர் சொல்லின் பொருளை தூய்மையாளர்கள் தானே உணர முடியும்!

திரு.வி.க. பெரும்புலவர்தான் எனறாலும், கல்லூரியிலிருந்து வெளியேறியவுடன் பாட்டாளிக்கும் புரியக்கூடிய வகையிலே பழகு தமிழிலே பேசலானார். அந்த நாளிலே விடுதலை ஆவேசத்தை ஊட்டுவதற்கென்று அரசியல் மேடையேறிப் பேசும் எவரும் தொல்காப்பியத் தமிழைத் தொட முடியாது! புறநானூற்றுத்தமிழை அணுக முடியாது. பழகு தமிழையே பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆயினும் பண்டிதத் தமிழுக்கும், பழகு தமிழுக்கும் பாலமாக அமைந்தார். திரு.வி.க. வின் பழகுதமிழிலேசங்கத் தமிழின் சுவை உண்டு. அவர் வாய்திறந்து பேசினால், தேசியமும் தமிழும் கலந்து மணக்கும். மற்ற தலைவர்கள் எல்லாம் அரசியல் கலைச் சொற்களை ஆங்கிலத்திலே வழங்கிய காலத்திலே, அவற்றை எளிய தமிழிலே வடித்துக் கொடுத்த பெருமை திருவாரூர் தந்த முனிவருக்கு உண்டு.

''காந்தியம்'' என்னும் தத்துவம் தோன்றிய காலத்திலே, உலக வரலாற்றில் அதற்கு இணை சொல்ல இன்னொரு தத்துவம் இருக்கவில்லை. ''ஆன்மீகமும் அரசியலும் கலந்தது காந்தியம்'' என்கிறார் திரு.வி.க. ''காந்தியடிகள் போதித்தது, மனிதாபிமானத்தோடு கலந்த தேசாபிமானம்! இன்னொரு வகையில் சொல்வதானால், தேசாபிமானத்தோடு கலந்த மனிதாபிமானம்'' என்று திரு.வி.க. அடிக்கடி சொல்வது உண்டு.

''காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்'' என்னும் தமது நூலிலே, அப்போதுதான் தோன்றியிருந்த காந்திய நெறியை இராயப்பேட்டை முனிவர் வியாக்கியானப் படுத்தி இருக்கிறார். ''காந்தி பஞ்சகம்'' என்னும் பெயரில் கவிதை நடையிலே, ஐந்து செய்யுட்களைப் பாடி காந்தியத்திற்கு வரவேற்பு கூறினார் பாரதியார். அவர் பாடிய அந்த ஐந்து செய்யுளுக்கு வியாக்யானமாக, ''காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்'' என்னும் உரைநடை நூலைப் படைத்தார் திரு.வி.க.

மொழிப்பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்கும் பிரித்தெடுக்க முடியாபடி பிணைப்பை ஏற்படுத்திய பெருமை பாரதியாருக்கும் திரு.வி.க.வுக்கும் உண்டு. இவர்களிலே பாரதியார் கவிஞர்! திரு.வி.க. அறிஞர்.

திரு.வி.க. கவிதைகளையும் படைத்திருக்கிறார்.

சித்தாந்த, வேதாந்த தத்துவங்களைப் பற்றிய நூற்களையெல்லாம் திரு.வி.க. கற்றுத் தேர்ந்திருந்தார். அவர் பழுத்த சைவர்; ஆயினும், கனிந்த மனமுடைய சமய சமரசவாதி! தேசபக்தியுடைய இந்தியர்! அத்துடன், சர்வதேச நெறியில் நம்பிக்கையுடைய உலகாபிமானி. நெஞ்சாலும் வன்முறையை நினைக்க அனுமதிக்காத காந்தியவாதி'. அத்துடன், கொள்கையளவில் பொதுவுடைமைப் புரட்சியைக் கூறும் மார்க்கீசியத்திலும் நம்பிக்கையுடையவர். இந்த இரண்டு தத்துவங்களையும் பிணைத்துப் புது உலகம் காண விரும்பியவர்; காண முடியும் என்றும் நம்பியவர்.

திரு.வி.க. எளிய வாழ்க்கை வாழ்ந்தார். அன்றைய தேசியம் ஆடம்பரத்தை வெறுத்தது, எளிய வாழ்க்கையை ஏற்றது. ''உண்பது நாழி, உடுப்பன இரண்டே; பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே'' என்ற புறநானூற்றுப் போதனையே காந்தியத்தின் சாதனை. திரு.வி.க. உடையாலும், உணவாலும், உள்ளத்தாலும், வாழ்க்கைநடையாலும், வாய்மைமொழியாலும் காந்தியடிகளின் மறுவடிவமாக தமிழ் நாட்டிலே நடமாடினார்! அவரை நான் நேரில் பார்த்த போதெல்லாம் காந்தியடிகளாகவே நினைத்து கையெடுத்துக் கும்பிட்டு வணங்கினேன்.

நெற்றி நிறைய திருநீறு; உச்சிக்குடுமி; தாமே துவைத்து கட்டிக் கொண்ட பழுப்பு நிறமுடைய கதராடை; கணத்திற்கு கணம் மூடித் திறக்கும் கண்கள். இது, அந்தப் புனிதரின் தோற்றம்.

வாயைத் திறந்து பேசினாரானால், தமிழ், தென்றலாக வீசுகிறதோ எனக் கேட்போருக்கு ஐயம் தோன்றும்.

பிறர் கருத்துடன் மாறுபட்டுப் பேசும்போதும் அவர் வாக்கு தென்றலாகத்தான் இருக்கும். மாற்றார் கருத்தை மறுத்து வாதிடும்போதும் அவரது கருத்து தென்றலின் இனிமையையே காட்டும். அதனல், ''தமிழ்த் தென்றல்'' என்ற சிறப்புப் பெயருக்குரியவரானார், திருவாரூர் கலியாணசுந்தரனார்.

அவரை ''தேசியவாதி''என்று சொல்லும்போது, என் வாய் மணக்கிறது. 'தமிழ்த்தென்றல்' என்று எழுதும்போது, எனது எழுத்து மணக்கிறது.

எங்களைப்பிணைத்தது காந்தியடிகள்பாலும் வள்ளற்பெருமான்பாலும் எங்களுக்கிருந்த பற்றுதல்தான். மொழிப்பற்றுக்கும் நாட்டுப்பற்றுக்குமிடையே துரதிருஷ்டிவசமாகபோராட்டம் உருவாகியிருந்த காலத்திலே அந்தப் பெருமகனார் வாழ்ந்தார். அந்த நிலையிலும் தமிழையும் தேசியத்தையும் பிணைக்கும் பாலமாக அவர் விளங்கினார்.

தமிழ்ப் பண்டிதராக வாழ்க்கையைத் தொடங்கி, தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடும் தேசியவாதியாக அரசியலில் புகுந்த திரு.வி.க. அடுத்த கட்டத்திலேயே தொழிலாளர் வர்க்கத்தின் தோழரானார்! வர்க்கப் புரட்சியிலே அவருக்கு நம்பிக்கை உண்டு. இந்தியாவிலேயே முதன் முதலில் தோன்றிய தொழிற் சங்கம் எனப்படும் சென்னை தொழிலாளர் சங்கத்தின் செவிலித்தாய் அவர்தாம்!

1920ல் அப்போதைய வில்லிங்டன் ஆட்சி நடத்திய அடக்குமுறைக் கொடுமையை தாங்கிக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்தின் தலைவராகத் திகழ்ந்தார்.

தேசிய காங்கிரசை விட்ட பின்னரும், அவர் தேசியக் கொள்கையை விடவில்லை. கட்சி அரயலைக் கைவிட்ட பின்னரும், தொழிற்சங்கத் தொடர்பை துறக்கவில்லை. தமது மூச்சு முடியும்வரை தொழிற்சங்கத்தோடு தொடர்பு கொண்ட தேசியவாதியாகவே அவர் திகழ்ந்தார்!

வாழ்க, திரு.வி.க.!



# தென்றலாக வீசும் தமிழ்!

மாண்புமிகு நிதி அமைச்சர்

## டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

என்ற திருவள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி இலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியமாய்த் திகழ்ந்து, தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரின் அன்புக்கும், அரவணைப்புக்கும், நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் வாழ்த்துக்கும், வரவேற்புக்கும் உரியவராய்த் திகழ்ந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. சான்றோராவார்.

கருத்துக்களை ஒழுங்காகச் சொல்ல வேண்டும், கோவையாகச் சொல்லவேண்டும், இனிமையாகச் சொல்ல வேண்டும், அப்படிப்பட்ட வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும், அப்படி ஒருவர் பெற்றிருந்தால் அவரது கட்டளைகளைக் கேட்டு, அவற்றின்படி நடக்க, உலக மக்கள் விரைந்தோடி வருவார்கள் என்பது மேற்குறிப்பிட்ட குறள் உணர்த்தும் கருத்தாகும்.

திருக்குறள் வகுத்துரைக்கும் நெறிக்கு ஏற்பத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் சொற்பொழிவில், ஒழுங்கு இருக்கும். கருத்துக்கள் கோவையாக அமையும், இனிமையும் எளிமையும் கொஞ்சும், அழகு மிளிரும், ஆற்றல் ஒளிரும், உறுதி தென்படும், உயர்வு காணப்படும், அருமை துலங்கும், சிறப்பு திகழும். எனவே தான் அவரைத் தமிழ்கூறு நல்லுலகம் ‘தமிழ்த் தென்றல்’ என்று சிந்தை இனிக்க, செவி இனிக்க, சொல்லினிக்க வாயார விரும்பி அழைத்தது.

தமிழகத்தில் வீசுகின்ற காற்றுக்கள் வாடைக் காற்று, கோடைக் காற்று, கொண்டல் காற்று, தென்றல் காற்று என்று நான்கு வகையினவாக வகுத்துக் கூறப்படும். வட பகுதியிலிருந்து வீசுகின்ற காற்று வாடைக் காற்று எனப்படும். வாடை எப்பொழுதும் கடுங்குளிரையும், வேதனையையும், நோய்ப்பாட்டையும் அளிக்கவல்லது. எனவே தான் தமிழ் மக்கள் வடக்கே இருந்து வருகின்ற வாடையை எப்பொழுதுமே, எல்லாவகையிலும் எதிர்ப்பார்கள். கோடைக் காற்று, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மழையைப் பொழிந்துவிட்டு, வறட்சிக் காற்றாய்த் தமிழகம் நோக்கி வீசும். இந்தக் காற்றையும் தமிழ்மக்கள் விரும்பமாட்டார்கள். கொண்டல் காற்று, கருமேகங்களோடு கிழக்குப் பகுதியிலிருந்து தமிழகத்தில் நுழைந்து மழையைப் பொழிவிக்கும். தமிழ்மக்கள் இந்தக் காற்றின் பயனை விரும்புவார்கள் என்றாலும், பெருமழையைப் பொழிவிக்கும்போது வேதனைப்படுவார்கள். தென்றல் காற்று, தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள பொதிகை மலைப்பக்கமிருந்து தமிழகம் நோக்கி ஆடி, அசைந்து, தவழ்ந்து, அருமையாகவும், மென்மையாகவும், இனிமையாகவும், உடலுக்கு இன்பம் பயப்பதாகவும் வரும். தென்றல் காற்றைத் தமிழ்மக்கள் வியந்து, பாராட்டிப், போற்றி, வாழ்த்தி, வரவேற்று நிற்பர். தமிழ்மக்களின் உடலுக்குத் தென்றல் காற்று எப்படிப்பட்ட இன்பத்தை வழங்குகிறதோ, அப்படிப்பட்டதொரு இன்பத்தைத் திரு.வி.கவின் பேச்சு, அதாவது மேடைகளிலே அவர் வீசிய மெல்லிய தமிழ்ப் பூங்காற்று, தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளத்திற்குஅளித்தது.

ஆகையினால்தான் திரு. வி. க. அவர்களைத் தமிழ்ப் பேரறிஞர்கள் அனைவரும் ‘தமிழ்த் தென்றல்’ என்னும் அன்பு அடைமொழி கொடுத்து விரும்பி அழைத்தனர். ‘மகாத்மா’ என்றால் அண்ணல் காந்தியடிகளையும் ‘பெரியார்’ என்றால் பகுத்தறிவுத் தந்தை ஈ.வெ. இராமசாமி அவர்களையும் ‘அறிஞர்’ என்றால் அன்பு அண்ணன் அண்ணா அவர்களையும் குறிப்பதுபோல், ‘தமிழ்த்தென்றல் என்றால், அந்தச் சொற்றொடர் திரு. வி. க. அவர்களைத்தான் குறிக்கும் என்ற மரபு நிலை நாட்டப்பட்டு விட்டது.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் பேச்சில் ஆரவாரமோ, அதிகாரமோ, அதட்டலோ, உருட்டலோ, மிரட்டலோ, பகட்டோ, பாவனையோ இருக்கா. அவர் எந்த ஒரு பொருள் பற்றியும் பேசுவார். உண்மையாகப் பேசுவார்; உறுதியோடு பேசுவார். அவரது பேச்சில் ஆர்வம் இருக்கும், அழுத்தந்திருத்தம் இருக்கும்; தெளிவு மிளி

ரும்; திட்பம் துலங்கும்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டிலும் சிறுசிறுசொற்றொடர்கள் தாம் காணப்படும். மூன்று, நான்கு சொற்களுக்குமேல் ஒருசொற்றொடர் அமையாது. எளிய-இனிய-அழகிய-உயர்ந்த, சிறந்த நடையைத்தான் அவர் எப்பொழுதும் கையாள்வார். அவர் எந்த ஒரு கருத்தையேனும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறார் என்றால், அதற்கான சொல்லை மூன்று தடவை சொல்லி வலியுறுத்துவார். 'மக்களின் வளர்ச்சிக்கு எது அடிப்படை? அன்பு! அன்பு! அன்பு!'' என்றும், 'மக்களிடம் நாடு எதை எதிர்பார்க்கிறது? கடமை! கடமை! கடமை!' என்றும் வலியுறுத்துவார்.

1938ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தந்தை பெரியார் அவர்கள் தண்டனை பெற்று, இரண்டாண்டு கடுங்காவல் சிறைசென்றபோது, தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள், தமது 'நவசக்தி' ஏட்டில், ''வெள்ளிய தாடி அசைய, பரந்த நெற்றி ஒளிர, விரிந்த முகம் மலர, முதுமை ஒழுக, தாங்கிய தடியுடன் எனது கெழுதகை நண்பர் பெரியார் இராமசாமி சிறைபுக்க காட்சி அவரது நண்பர், பகைவர், நொதுமலர் ஆகிய அனைவர் உள்ளத்தையும் உறையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அவர் ஒரு சிறைப்பறவை. சிறைக்கோட்டம் அவருக்கு அறக்கோட்டம் ஆகியது போலும்!'' என்று உள்ளத்தை உருக்கும் வகையில் எழுதினார்.

தமிழால் திரு. வி. க. உயர்ந்தார். திரு. வி. க. அவர்களால் தமிழ்த்தென்றல் வீசிற்று.

வாழ்க தமிழ்த்தென்றல் திரு. வி. க.வின் பெயர்! வளர்க அவர் தம் புகழ்!

## பெரிய காரியம் செய்தவர் பெரியார்



பெரியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது 35 வருடங்களுக்கு மேற்பட்டது. 'வைக்கம் வீரர்' என்பதை இந்த அடியேன் கைப்பேனாதான் சூட்டியது.

திருவிதாங்கூரிலே தீண்டாமையை ஒழிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பெரியாருக்கே அந்தப் பெருமை; ஆனால் அந்தப் புகழ் யாருக்கோ போயிற்று.

பெரியாரது அந்த வீரத்தியாகம் எனது வாழ்க்கைக் குறிப்பிலுள்ளது. எனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லை. நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் ராமசாமியாகத் தான் இருக்கமுடியும்.

இந்த நாட்டில் பெரிய காரியம் செய்தவர் பெரியார் ஒருவர்தான்!

—திரு. வி. க.

## திரு. வி. க.வின் ஆத்திசூடி



அருகன் அருளறம் பொருளறம் வேண்டும்
ஆக்கத் தொழிலில் ஊக்கம் வேண்டும்
இறப்பையும் பிறப்பையும் மறத்தல் வேண்டும்
ஈரம் சுரக்கும் வீரம் வேண்டும்
உலகொரு குலமெனும் உணர்வுவேண்டும்
ஊனைக் கொலைபுலை உறங்கல் வேண்டும்
என்றும் பணிநினைந் தியற்றல் வேண்டும்
ஏசு பொறுமையில் நேசம் வேண்டும்
ஐயம் அறியா ஆட்சி வேண்டும்
ஒப்புர வுலகம் உயர்தல் வேண்டும்
ஓதா துணர்த்தும் ஓவியம் வேண்டும்.
ஔவை உலவும் அகிலம் வேண்டும்.

''பொருளும் அருளும்'' என்ற நூலிலிருந்து

'திரு.வி.க. வாழ்ந்த வாழ்வும் ஆற்றிய தொண்டும் நாமெல்லாம் பின்பற்றக்கூடிய பெருமையுடையது' என்றார் தந்தை பெரியார். இவ்வாறு தமிழ்ப் பெருமக்களால் மதிப்போடு பாராட்டப்பட்ட அத்தகு சிறப்புடைய அந்தச் செந்தமிழ்ச்செல்வருக்கு நூற்றாண்டுக் காலமிது (1883-1983).

நாடு நலம் பெறவும் நன்மை பல விளைந்திடவும் நாளும் உழைத்த நல்ல பல அரசியல் மேதைகளைக் கண்ட அருமை பெருமையுடையது நமது தமிழ்நாடு. அரசியலைச் சிலரைப் போலச் சொந்த லாபத்திற்குப் பயன்படுத்தாமல் பொதுநலம் கருதிப் புதுவழி காட்டிய பெருமகனார் திரு. வி. கலியாணசுந்தரனார்.

தமிழ்த் தென்றல், தமிழ் முனிவர், சாது முதலியார் என்றெல்லாம் போற்றிப் புகழப்பட்ட அவர்கால அரசியல், பண்பாடு பரிமளிப்பதாக இருந்தது. தன்னிகரற்ற தமிழ்ப் புலவராக, தலைசிறந்த மேடைப் பேச்சாளராக, இணையற்ற எழுத்தாளராக, ஏற்றமிகு சீர்திருத்தச் செம்மலாக, சிறந்த தேசபக்தராக மட்டுமல்ல; ஒவ்வொருவரும் பின்பற்றிடத் தக்க ஒழுக்க சீலராகவும் வாழ்ந்து காட்டியவர் திரு.வி.க.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரான அவர், அரசியல் மீதுற்ற காதலால் தாம் பார்த்த தமிழாசிரியர் பணியினின்றும் விலகி 'தேசபக்தன்' ஏட்டிலும் பின்னர், 'நவசக்தி' ஏட்டிலும் ஆசிரியராகப் பணியாற்றி நாடு மதிக்கத்தக்க நல்ல அரசியல் கருத்துக்களைத் தொடர்ந்து எழுதி வந்தார். மேடைகளிலே ஆங்கிலத்தில் பேசுவது, அல்லது ஆங்கிலம் கலந்து பேசுவது அலங்காரம் எனக் கருதப்பட்டுவந்த அக்காலத்தில், காங்கிரசுக் கட்சியிலே தன்னை இணைத்துக் கொண்டிருந்த திரு.வி.க. தமிழே மேடைகளில் பேசப்பட வேண்டும் என்ற கட்டாய நிலையை உருவாக்கியவராவார். தணியாத விடுதலை வேட்கையைத் தமிழாலே உண்டாக்கியவராவார்.

'தமிழ்நாட்டிலே நல்ல தமிழிலே மேடையில் பேசமுடியும் என்பதை முதன் முதலில் பேசிக்காட்டியவர் திரு.வி.க. அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுதமுடியும் என்பதை முதலாவதாக எழுதிக் காட்டினார் திரு.வி.க. அரசியலில் புயலாகவும், தமிழில் தென்றலாகவும் இருப்பவர் நம் திரு.வி.க.' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவருக்குப் புகழாரம்சூட்டியதுண்டு.

இந்திய நாடு முழுவதும் விடுதலைக் கனல் மூண்டெழுந்த அந்நாளில் ஒத்துழையாமை இயக்கத்திலும் உப்புச் சத்தியாக்கிரகத்திலும் முன்னின்று எழுச்சிக் குரலெழுப்பியவரென்றாலும் தமிழகத் தொழிலாளர் நலனில் தன்னலம்கருதாது தோழமை கொண்டிருந்தவர் அவர். அது மட்டுமல்ல; இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொழிலாளர் இயக்கம் தோன்றியதெனில், அது திரு.வி.க. அவர்கள் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' என்ற பெயரில் 1918 ஏப்ரல் 27ல் தோற்றுவித்ததேயாகும்.



# திரு.வி.க.வின் அரசியல் வாழ்வு

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்

## திரு. இராம. வீரப்பன்

தமிழ்ச் சுரங்கமான திரு.வி.க. அவர்கள், தமிழ்ச்சமயமாம் சைவசமயத்திலே பற்றுமிகக் கொண்டவரென்றாலும்-வைணவம், சமணம், கிறித்தவம், பௌத்தம், இசுலாமியம் போன்ற பிற மதங்களின் மீது காழ்ப்புணர்ச்சி அற்றவராகவே இருந்தார் என்றால் அது உண்மை-வெறும் புகழ்ச்சியில்லை.

எழுபதாண்டுக் கால வாழ்வில் ஐம்பதுக்கும் மேலான பெரிய எழுத்தோவியங்களை எழுதி நமக்களித்த பெருமகனார் அவர். பிறமொழி கலவாத தனி நடை அவர் நடை. 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' 'மார்க்சியமும் காந்தியமும்', 'இந்தியாவும் விடுதலையும்' போன்ற தலைப்புகளில் திரு.வி.க. எழுதிய சில நூல்கள் அன்னாரின் அரசியல் வாழ்வின் அரிய படப்பிடிப்புகளாகும்.



திரு. வி. க அவர்களின் உருவப்படத்தைத் தந்தை பெரியார் அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சி.

காந்தியம் அவரைக் கவர்ந்தபோதிலும் மார்க்சியத்தின் மீதும் அவருக்குப்பெருமதிப்பு இருந்தது. 'காந்தியமும் மார்க்சியமும் இணைய வேண்டும்' என்ற புரட்சிக் கருத்தின் வெளிப்பாடாகவே அவருடைய எழுத்தும் பேச்சும் அமைந்திருந்தன. காந்தியம் உயிர் என்றால் மார்க்சியம் உடல் என்றேகூட அவர் குறிப்பிட்டதுண்டு. அந்த இரண்டும் இணைந்தால் தான் இந்நாட்டிலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீங்கும் என்று தெரிவித்த தெளிவு மிக்க சிந்தனைக்குச் சொந்தக்காரரர் அவர்.

திலகரின் அரசியல் வேகமும், விவேகமும் திரு.வி.க.வை ஆட்கொண்டன. எனவே, அவரது அரசியல் சிந்தனைகள், பெரிதும் திலகருடைய கொள்கை முழக்கத்தின் எதிரொலியாகவே அமைந்தன. அன்னி பெசன்ட் அம்மையார் காட்டிய பரிவும் அவர் தம் அரசியல் பயிர் வளர்ச்சிக்கான ஆதாரமாக அமைந்தது.

இவ்வாறு அரசியல்மேல் அவருக்கு இருந்த் பற்றும் பாசமும் பல்வேறு காரணங்களினாலே காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டிற்குப் பிறகு பலவீனப்படலாயிற்று.

''மக்கள் வாழ்க்கை நலனுக்குரிய துறைகள் பல. அவைகளுள் ஒன்று அரசியல்...!'' என்றெல்லாம் எழுதிய அவருக்கு அரசியல் கசந்ததேன்? என்ற வினா எழலாம். பதிலை நாமெழுதத் தேவையில்லை; அவரே தெரிவிக்கிறார் இப்படி—

'உயிரனைய அரசியல் ,பண்டை நாளில் உண்மை நெறி என்னும் கடவுள் நெறி நின்று இயங்கிற்று....பின்னை, அரசியல் உண்மை நெறியினின்றும் பிறழ்ந்து வீழ்ந்தது....' என்றெல்லாம் எழுதும் திரு.வி.க., தனது வாதத்திற்கு ஆதாரமாக 'யான் அரசியல் வாதியல்லன்' என்று பன்முறை காந்தி அடிகள் 'யங் இந்தியா'வில் எழுதியிருக்கிறார்' என்று எடுத்துக்காட்டி வலிவு சேர்த்திருக்கிறார்.

1917ஆம் ஆண்டுதொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தவரான அவர் நாட்டு நலம் கருதியே அது நேர்ந்ததெனச் சொல்கிறார்.

அப்போது நாடு இருந்த நிலையில், ஒரு கட்சியே போதுமென்றிருந்ததால், பல்வேறு அரசியல் கட்சிகள் பட்டம் பதவிகளே நோக்கமாக உருவாவதையும் செயல்பட்டதையும் கண்டிக்கும் அறிவு முதிர்ச்சி அவருக்கிருந்தது.

இளைஞர்கள் அரசியலைத் தெரிந்து கொள்ளலாமே தவிர, அதிலே முழுமையாக ஈடுபட்டுக் கருகிவிடக் கூடாது என்பது அவர் கருத்து. அரசியலைத் தெரிந்து கொள்ளும் இளைஞர்கள் கிளர்ச்சி எனும் எரிதழலில் வீழாமலும் கட்சிச் சேற்றில் நெளியாமலும், நாட்டிலுள்ள குறைபாடுகளைப் போக்கவல்ல சீர்திருத்தத் தொண்டில் தலைப்பட்டு உழைக்கலாம் என்றார் திரு.வி.க.

**சாதிக் கட்சிகள் தோன்றுவதையும், சாதி மாநாடுகள் கூடுவதையும் வன்மையாகக் கண்டித்த அவர், பகை வளர்க்கும் முயற்சிகளே அவை என்றும் குறிப்பிட்டார்.**


யாரிடம் குறை கண்டாலும் சரி; இடித்துரைக்க அவர் தவறினாரில்லை. தான் சார்ந்த கட்சி என்பதனாலே காங்கிரசுக் கட்சியின் நடவடிக்கைகள் யாவும் உயர்ந்தவை என்றோ, அதன் குறைபாடுகளை மறைத்தோ அவர் எழுதியதோ பேசியதோ இல்லை.

தான் எண்ணிச் செயல்படும் அறச்செயல்களைக் காங்கிரசுக் கட்சியிலிருந்து கொண்டு ஆற்றுவது அரிது என்ற எண்ணம் வந்தபோது, அவர் கொடுத்த விலகல் கடிதம் இங்கே குறிப்பிடத் தக்கதாகும். ஒரு கட்சியிலிருந்து விலகுவோர் அக்கட்சியினரின் மனம் புண்படும்படி எழுதுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ள இந்நாளில், அரசியல் நாகரிகத்தோடு அன்று (9.7.1926) அவர் எழுதிய விலகல் கடிதம் எடுத்துக் காட்டத் தக்கதாகும். இதோ அது—

'தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்
சென்னை.

'அன்பார்ந்த ஐய,

'ஒத்துழையாமையே நாட்டுக்கு உரிமை நல்க வல்லது என்பது எனது அடிப்படையான கொள்கை. ஒத்துழையாமைக் கெனக் காந்தியடிகள் கோலிய திட்டம் இப்பொழுது காங்கிரசு நிகழ்ச்சி முறையில் இல்லாதொழியினும், அதன்கண் ஒத்துழையாக் குறிப்பு வேறு பொருளில் இருத்தல் கண்டு, அதை யாதல் நாடு நெகிழவிடாது காத்தல் சாலுமென்றும் ஒத்துழையாமை என்பது அறவே பட்டொழியாதவாறு அதை உணர்வளவிலாதல் ஒருபுடை ஓம்பிவரின் பின்னை அஃது ஆக்கம் பெறுதற்குரிய துறை தோன்றுமென்றும், ஒரு பெரு நோக்கம் கொண்டு கான்பூர் காங்கிரசுத்



மறைமலை அடிகளுடன் திரு. வி. கவும் மற்றப் பெருமக்களும்.

தீர்மான வழி நின்று யான் தொண்டாற்றத் தலைப்பட்டேன். இதுபோழ்து காங்கிரசு அபேட்சகர்களிற் சிலர் ஒத்துழையாமை உணர்வே நாட்டில் வேரூன்றாதவாறு கல்லி வருவது கண்கூடு. அவர்கள் நோக்கோடு எனது நோக்கு எங்ஙனே அரண்செய்யும்? காங்கிரசுக் கூட்டத்திலிருந்துகொண்டு அவர்களுடன் பிணக்குற்றுப் போரிடுதலுஞ் சால்புடைத்தன்று.

'நாட்டிலோ சாதிசமயப் பூசல், வகுப்புரிமையுணர்வு முதலியன காட்டுத் தீப்போல் பரவி வருகின்றன. இக்கொடுமைகளைத் தொலைக்க உழைக்க வேண்டுமென்னும் அவா என்னைப் பிடர்பிடித்து உந்தாத நாளில்லை. இதற்கு அரசியல் கிளர்ச்சியும், அரசியல் கட்சியும், தேர்தல் பிரச்சாரமும் பெருமுட்டாக நிற்பதும் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

நாட்டிற்கன்ன்றெரியும் வகுப்புப் பிணக்கைத் தணிக்கவல்லது சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள காந்தியமெனுந் தண்புனல் என்பதை எனது மனச்சான்றெனுங் கடவுள் நன்கு அறிவுறுத்துகிறது. அம் மனச்சான்று வழிநின்று தொண்டாற்ற வேண்டுமேல், காங்கிரசுக் காரியக்கமிட்டி கூட்டத்தில் அங்கம் பெற்றிருத்தல் அறமாகாது. அதனின்றும் விலக வேண்டுமென உறுதி கொண்டேன்.

'தயைகூர்ந்து எனது விலகுதலை ஏற்குமாறு வேண்டுகிறேன். இது முடிந்த மொழியன்றி மீண்டும் உன்னுமொழியன்று என்பதையும் தங்கட்கு வணக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

—இவ்வாறு காரியக் கமிட்டியிலிருந்து விலகக் கடிதம் தந்து, தன் எதிர்பார்ப்பிலிருந்தும் கட்சி நடவடிக்கைகள் வேறுபட்டதால் சிலநாளில் அதிலிருந்தும் விலகி அரசியல் துறவறம் பூண்டார் திரு.வி.க.

அரசியல்வாதி என்பதனாலே அல்ல; 'தமிழ்த் தென்றல்' என்பதனாலே திரு.வி. கலியாண சுந்தரனார் புகழ் தமிழ் உள்ளவரை தமிழ் நிலமுள்ளவரை நீடித்திருக்கும்; நிலைத்திருக்கும் என்பது உறுதி. அவர் வாழ்ந்து காட்டிய அரசியல் வாழ்வு அரசியல்வாதிகளுக்கெல்லாம் அவசியப்பாடமாக என்றும் அமையத்தக்கதாகும்.

திரு. வி. கவின் முயற்சியால் ராயப்பேட்டையில் உருவாகிய பாலசுப்ரமணிய பக்த ஜன சபை.





# முன்னாள் அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் மறைவு

தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சராகவும், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவராகவும், மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவராகவும் இருந்த திரு கே.ஏ. மதியழகன் அவர்கள் 17.8.83 அன்று காலை 9.45 மணிக்குக் காலமானார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் அண்ணனான திரு கே, ஏ. மதியழகன், சிறுநீரகக் கோளாறு காரணமாகச் சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

16.8.83 காலையிலிருந்தே திரு கே. ஏ. மதியழகன் அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது. அன்று மாலை மாண்புமிகு முதல்வர் அவாகள் மருத்துவமனைக்குச் சென்று திரு மதியழகனைப் பார்த்தார். அவரது உடல் நலம் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணாமி அவர்களிடமும் மருத்துவர்களிடமும் கேட்டறிந்தார்.

17.8.83 காலையில் திரு மதியழகன் உயிர் பிரிந்தது. அவரது உடல் நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.


மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலை 11.40 மணிக்கு திரு. மதியழகன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

திரு மதியழகன் துணைவியார் திருமதி ராஜசுந்தரிக்கும் குடும்பத்தினருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு கே.ஏ கே அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அரசியல் கட்சித் தலைவர்களும் திரு கே. ஏ. மதியழகன் மறைவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கோவை மாவட்டம் கணியூரில் 1926-ஆம் ஆண்டு பிறந்த திரு மதியழகன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். மாணவப் பருவத்திலேயே திராவிடர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு தந்தை பெரியார் அவர்களுடனும் பேரறிஞர் அண்ணா அவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு பொது வாழ்வில் ஈடுபட்டார்.

திரு மதியழகன் அவர்களுக்கு மனைவியும், மூன்று பெண்களும், ஒரு மகனும் உள்ளனர். மறைந்த தலைவருக்கு நமது அஞ்சலியைச் செலுத்துவோம்!



# இலங்கைத் தமிழர்க்கு நிதி உதவி

இலங்கையில் கடுமையான சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகித் திண்டாடும் தமிழர்களுக்கு உடனடித் தேவையான உணவு மற்றும் உடை ஆகியவைகளை வழங்க முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பில்ரூ-3 இலட்சம், தமது சொந்தப் பொறுப்பில் ரூ. 2 இலட்சம், மத்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தவுடன், அமைச்சர் பெருமக்களும் சட்டப்பேரவைத் தலைவர்-துணைத் தலைவர்_சட்டமன்ற மேலவைத் தலைவர்-துணைத் தலைவர் ஆகியோரும் நிதி வழங்கினர். அவர்களைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள்-திரைப்பட நடிக, நடிகையர், தொழில் முனைவோர், அரசு அலுவலர்கள், மற்றும் பொதுமக்கள் நிதிக் குவியலை அள்ளி வழங்கத் தொடங்கினர்.



# இலங்கைத் தமிழர் உதவி நிதி அனுப்பவேண்டிய முறை



இலங்கைத் தமிழர்கள் படுகொலையுண்டு சொல்லொணாத பல துயரங்களுக்குத் தொடர்ந்து ஆளாகிக் கொண்டு இருந்து வரும் இந்நிலையில், அனைத்துக் கட்சிகளுடனும் கலந்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பொதுமக்கள் அறிவார்கள்.

மக்களிடமிருந்து தமிழக அரசுக்குப் பெறப்படும் உதவித் தொகைகளை "இலங்கைத் தமிழர் உதவி நிதி" என்ற நிதியில் தமிழக அரசு சேர்த்து வருகிறது. காசோலையை அனுப்புவோர் இந்த நிதியின் பெயருக்கே எழுதி காசோலையை அனுப்பலாம். முதலமைச்சராலும், மற்ற அமைச்சர்களாலும் பெறப்படும் இப்படிப்பட்ட காசோலைகள் இந்த நிதியில் சேர்க்கப்படுகின்றன. இனிமேல் இப்படி காசோலை அனுப்ப விரும்புபவர்கள் மாவட்ட அளவிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது கோட்ட ஆட்சித் தலைவர் அல்லது வட்டாட்சியர் ஆகியோரிடமே காசோலையைச் செலுத்திவிடலாம்.

காசோலை தவிர பணமாகவும், பொருளாகவும் உதவி செய்ய விரும்புவோரும் தாங்கள் கொடுக்கும் பணத்தினையும், பொருள்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது கோட்ட ஆட்சித் தலைவர் அல்லது வட்டாட்சியர் அவர்களிடமோ அளிக்கலாம்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடமிருந்து பெறப்படும் உதவித் தொகைகள் அந்தந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி முதல்வர் ஆகியோர் ஒன்று சேர்த்து தத்தம் பள்ளி/கல்லூரி சார்பாகச் சென்னையிலுள்ள பள்ளி/கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் அவர்களுக்குக் காசோலை மூலம் இந்த நிதிக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒரு சில இடங்களில் மக்களுடைய அனுதாபமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சில விஷமிகள் தவறான எண்ணத்தோடு மக்களை ஏமாற்றி, மக்கள் வழங்கும் நிதியைக் கையாடல் செய்வதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளது. அத்தகவல்களின் பேரில் அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் விடுக்கும் ஒரு முக்கிய வேண்டுகோள் என்னவென்றால், தமிழ்நாடு அரசின் "இலங்கைத் தமிழர் உதவி நிதி" தமிழக அரசால் செயல்படுத்தப்படுவதொன்றாகும்; இந்த விஷயத்தில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்; அவதியுறும் இலங்கைத் தமிழர்களுக்கு அரசு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கே மக்கள் பெருவாரியாக அன்புடன் ஈந்து உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# இந்தியாவில் அமிர்தலிங்கம்

இந்திரன்

இலங்கைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரும், இலங்கை நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் 13-8-'83 சனிக்கிழமை இரவு சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், திரு அமிர்தலிங்கத்திற்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராஜாராம், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ராஜாமுகமது, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு புலவர் புலமைப்பித்தன் முதலியோர் வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து திரு அமிர்தலிங்கம் நேராக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இல்லம் சென்று சந்தித்து, அங்கு முதல்வருடன் ஒரு மணி நேரம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் சேப்பாக்கம் விருந்தினர் இல்லத்திற்குத் திரும்பினார்.


சென்னை-சேப்பாக்கம் விருந்தினர் இல்லத்தில், தமிழ்நாடு அரசின் விருந்தினராகத் தங்கியிருந்த திரு. அமிர்தலிங்கம் மாண்புமிகு முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து 14-8-83 காலையில் அழைப்பின் பேரில் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைச் சந்திக்கப் புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.

புதுடில்லியில் தலைமையமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து 90 நிமிடங்கள் இலங்கைப் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார் திரு அமிர்தலிங்கம். இந்தப் பேச்சு வார்த்தையின் போது மாண்புமிகு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவும் உடனிருந்தார்.

அதற்கு முன்னதாகத் தலைமையமைச்சரின் வெளிநாட்டுறவுக் கொள்கை ஆலோசகர் திரு. ஜி. பார்த்தசாரதி, தலைமை அமைச்சரின் முதன்மைச் செயலாளர் திரு. பி. சி. அலெக்சாண்டர், வெளிநாட்டுறவு அமைச்சகத்தின் செயலாளராக உள்ள திரு. கே. எஸ். வாஜ்பாய் ஆகியோருடன் திரு. அமிர்தலிங்கம் இரண்டு மணி நேரம் பேசினார்.

பின்னர் ஆங்கிலச் செய்தி நிறுவனங்களுக்கு அவர் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியில் கூறியதாவது;

''இலங்கையில் உள்ள தமிழர்களின் விருப்பங்களை உணரச் செய்வதில் உதவிட இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தலையிட்டது நிலவரத்தில் ஒரு முக்கிய மாறுதலை ஏற்படுத்தியது. இந்தியா இலங்கைக்கு அண்மையில் உள்ள பெரிய நாடு. அது இலங்கையுடன் நெருக்கமான கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இலங்கையில் கணிசமாக உள்ள சிறுபான்மையினரான தமிழர்கள் இந்திய மக்களின் இனத்தைச் சேர்ந்த



வர்கள். எனவே, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க இந்தியா முயற்சிகளை மேற்கொள்வது நியாயமானது ஆகும்'' என்று கூறிய அவர்- ''இலங்கைப் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் அவர்கள் மிகுந்த அனுதாபம் காட்டுவதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்றும் குறிப்பிட்டார்.

புதுடெல்லியில் மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் மற்றும் மத்திய அரசு அமைச்சர்கள், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலியோரைக் கண்டு பேசிய திரு. அமிர்தலிங்கம், மீண்டும் இரண்டாவது முறையாக மறுநாளே பிரதமரைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் சென்னை திரும்பிய அவரை 19-8-83 அன்று செய்தியாளர்கள் சந்தித்தனர்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும், மக்களும், பத்திரிகைகளும் காட்டிவரும் ஆதரவு எந்தக் காலத்திலும் மறக்க முடியாதது'' என்று கருத்தறிவித்த அவர், இலங்கைப் பிரச்சனைத் தொடர்பாகப் பிரதமரோடு பேசிய பேச்சுக்கள் பயனுள்ள வகையில் அமைந்திருத்ததாகக் குறிப்பிட்டார்.

அன்று மாலை காமன்வெல்த் நாடாளுமன்றத் தமிழ்நாடு கிளையின் சார்பில் சென்னை-கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராஜாராம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட திரு. அமிர்தலிங்கம், இலங்கைவாழ் தமிழர்களுக்குப் பல்லாண்டு காலமாக இலங்கை அரசினால் இழைக்கப்படும் இன்னல் குறித்து உருக்கமிகு உரையாற்றினார்.

''சர்வதேச உறவு என்பது சிக்கலான விஷயம் இதில் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை நன்குணர்ந்த சிறந்த ராஜதந்திரியாகப் பாரதப் பிரதமர் விளங்குகிறார். அவரது ராஜதந்திர அணுகுமுறை காரணமாக எங்களுக்குப் புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தமிழக மக்கள் இந்திய அரசுக்குப் பக்க பலமாக இருந்து, உந்துசக்தியாக ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும்'' என்று அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்ட முடிவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் நன்றி கூறினார்.



தமிழகத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திரு.வி.க. போன்றவர்களின் சிலைகள் தோன்ற வேண்டும். அரசு மட்டும் செய்யாமல் வசதி படைத்தவர்களும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

தமிழைக் காத்து, வளர்த்து, பெருமை சேர்த்து- மொழியால் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள் இது.

**— மாண்புமிகு முதல்வர்**

(29.8.82ல் வெஸ்லி மேனிலைப் பள்ளியில் நடைபெற்ற திரு.வி.க. சிலை திறப்பு விழாவில்.)

**அட்டையில்**

1983 ஆகஸ்ட் 26-ஆம் நாள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் நூற்றாண்டு நிறைவு பெறுவதையொட்டி, சென்னை பி அண்டு சி ஆலை அருகில் உள்ள திரு.வி.க அவர்களின் முழு உருவச் சிலையும், இராயப்பேட்டை வெஸ்லி மேனிலைப் பள்ளியில் 29.8.82ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற சிலையும் இடம் பெற்றுள்ளன.

தியாகமறவன் குட்டிமணி, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு.கே. ஏ. மதியழகன் ஆகியோரின் மறைவு குறித்து அவர்கள் இல்லங்களுக்குச்சென்று திரு. அமிர்தலிங்கம் அந்தந்தக் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறினார்.

20-8-83 அன்று திருச்சி சென்ற அவர், அங்கு வந்திருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இரண்டாம் முறையாகச் சந்தித்து, டில்லிப் பயணம் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். முத்தமிழ்க்காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களையும் மற்றும் அரசியல் தலைவர்களையும் சந்தித்தார்.

அங்கு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது-''இலங்கைக்கு இப்போது இந்தியா இராணுவம் அனுப்பத் தேவையில்லை. எனினும் அங்கே தமிழர்களுக்கு எதிராக மீண்டும் கலவரம் மூண்டால், நாங்கள் இந்தியாவின் இராணுவத் தலையீட்டைக் கோர வேண்டியிருக்கும்'' என்றார் அவர்.

22.8.83 அன்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரும், மாண்புமிகு மேலவைத் தலைவரும் இணைந்து திரு. அமிர்தலிங்கத்திற்கு விருந்தளித்தனர்.

25.8.83ல், இலங்கைக்கு இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதராகச் செல்லும் திரு. பார்த்தசாரதி அவர்களைச் சென்னையில் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர், 26.8.83 அன்று இலங்கையில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டி, இந்தியத் தூதர் அழைப்பின் பேரில் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்தார் திரு. அமிர்தலிங்கம்.

# திரு.வி.க.வின் கவித்திறன்



சிலம்பொலி சு.செல்லப்பன்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. உள்ளங்கவர் உரைநடையாளராகத் திகழ்ந்ததொப்பவே சிந்தனையில் தேன் பாய்ச்சும் செந்தமிழ்க் கவிஞராகவும் விளங்கி வந்தார். அவருடைய அரசியல், பத்திரிகை, தொழிலாளர் முன்னேற்றப் பணிகட்குப் பெருமளவில் உரைநடையே தேவைப்பட்டது. ஆதலின் கவிதை எழுதுவதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லை. ''யான் பாடுந் தொழிலை ஏற்றிருப்பவன் அல்லன். எனது வாழ்நாள் பெரிதும் பேச்சிலும் உரைநடை எழுதுவதிலும் கழிந்து வருவது தமிழ்நாட்டார்க்குத் தெரியும்'' என அவரே குறிப்பிட்டுள்ளார். எனினும் ''சில புலவர் தமது நூல்களுக்குச் சாற்றுக் கவிகள் விழைந்த போதும், கெழுதகை நண்பர் சிலர் இவ்வுலக வாழ்வை நீத்த போதும்'' பாடல் எழுதும் இன்றியமையாமை அவருக்கு நேர்ந்திருக்கின்றது. அவ்வாறு அவர் வடித்துள்ள கவிதைகள் அவரைச் சிறந்த கவிஞர் என எடுத்துக் காட்டுவனவாய் மிளிர்கின்றன.

பாம்பனடிகள் பற்றி அவர் பாடிய கையறுநிலைப் பாடலின் ஒரு பகுதி வருமாறு;

'பாம்பனெனும் பதிமுளைத்த பவளக் குன்றே!
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே!
பண்பார் இல்லத்
தீம்பயிரே! அன்புகொழி திரையே! தெய்வத்
திறங்கண்ட அறநிலையே! செகத்திலுற்ற
கூம்பலற எழுகதிரே! குழந்தை வேலன்
குகன்நெறியே நெறியென்ற குருவே! நீதி
ஓம்புகவென் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே! போற்றி!'

பாம்பனடிகளைப் பவளக் குன்றாகவும், தமிழ்ப் பொழிலாகவும், பண்புப் பயிராகவும், அன்புத் திரையாகவும், அறநிலையாகவும், எழுகதிராகவும் கண்டுபோற்றுகின்ற திறத்தை இங்கே காண்கிறோம்.

பேரறிஞர் அண்ணாவை வாழ்த்தித் திரு.வி.க. ஒரு வெண்பாப் பாடியுள்ளார்.

''அண்ணா துரையென்னும் அண்ணல்
தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில்,
வாய்மொழியில்-பண்ணாவான்:
சிற்பனெழுத் தோவியத்தில்; செவ்வரசு;
நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமிஎன் றாடு.''

நாட்டு அழுக்ககற்றும் அண்ணல், இசையினிமைச் சொற்பொழிவாளர், எழுத்துச் சிற்பி, செம்மை நல அரசு, நாட்டுக் கலத்துக்கு நல்ல மாலுமி என அண்ணாவைக் கண்டு களிக்கிறார். எதுகை, மோனைகள் திரு.வி.க.வின் ஏவல் கேட்டு ஒழுகுவதை இவ்வெண்பாவால் அறிய முடிகிறது.

மன அமைதி குலையும்போது, மனத்தை அமைதிப் படுத்த திரு.வி.க. பாட்டெழுதுவதுண்டு. ''மன அமைதி எனக்கு எளிதில் குலைவதில்லை...கொந்தளிப்பு நுழையாதவாறு ஒல்லும்வகை மனத்தைக் காப்பது என் இயல்பு. மனிதப் பிறவி குறைபாடுடையது; வழுக்குதற்குரியது. பிறவிக் குறைபாடு ஒவ்வொருபோது சிறிதாதல் அமைதியைக் குலைத்து வழுக்கி விழச் செய்கிறது. குலைந்த அமைதியை மீண்டும் பெறவேண்டிக் காடு, மலை, கடற்கரைகட்குச் செல்வேன்; சென்று இயற்கைக் கோலங்களை ஊன்றி நோக்குவேன்; இயற்கைக் காவியங்களைப் படிப்பேன்; அமைதி கூடிவிடும். அங்கேயும் அவைகளிலும் அமைதி கூடாத வேளையில் மனத்தை ஒருமைப்படுத்துதற்குப் பாடல் எழுதப் புகுவேன்; அப்பொழுது என் மனம் பாட்டில் அமைதியுறும்'' எனத் திரு.வி.க. குறிப்பிடுகிறார்.

1949இல் அவருக்கு ஒரு கண்ணில் படலம் தோன்றியது. அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. எனினும் அக்கண் பார்வை மறைந்தது. 1950இல் மற்றொரு கண்ணும் பார்வை இழந்தது. தாளெடுத்துத் தானே எழுத முடியாத அந்நிலையில், தான் சொல்லிப் பிறரை எழுதச் செய்தார். அவ்வாறு சொல்லுதற்கு உரைநடையினும் செய்யுளே ஏற்றதெனத் திரு.வி.க. கண்டார். உரைநடையில் சொன்னதை மீண்டும் அவ்வாறே நினைவுபடுத்திச் சொல்லுதல் அருமை. பாட்டு ஒரு கட்டுக் கோப்புக்கு உட்பட்டதாதலால் சொன்னது மனத்திலே ஓவியமாக உருவெடுத்து நிற்கவும், அதனை மீண்டும் சொல்லவும் எளிதாகிறது. ஆதலாற்றான் தாம் சொல்லிப் பிறரெழுதுவதற்குத் திரு.வி.க. கவிதையைத் தேர்ந்தெடுத்தார். இதனை முதுமை உளறல் என்னும் நூலில்,

'பொழுது படுக்கையில் கழிக்க நேர்ந்த
பின்

கடிதில் உரைநடை முடிதல் கண்டேன்;
பாவின் அமைப்போ ஓவியம் ஆகி
உருண்டும் புரண்டும் திரண்டும் நிற்கும்
மொழிந்த பின்னும் அழிதல் அரிதாம்!
ஆதலின் பாவால் ஓதலைக் கொண்டேன்!

என்னும் அவர்தம் பாட்டுமொழியால் அறி கின்றோம்.

கண்ணொளி மறைந்த பிறகு அவர் வெளியிட்ட கவிதை நூல்களின் பட்டியலையும் 'முதுமை உளறல்' என்னும் நூலினில் அவரே தருகிறார்.

'இரண்டு கண்ணொளி வறண்ட இந் நாளினில்
'இருளில் ஒளியைக் குறள்வெண்பாவால்;
'இருமையும் ஒருமையும்', 'அருகன் அருகே',
'பொருளும் அருளும்-மார்க்கிஸ் காந்தி'
'சித்தந் திருத்தல்-செத்துப் பிறத்தல்'
என்னும் நூல்களைப் பன்ன னன் அகவலால்.

**யாப்பு**

வெண்பா, விருத்தம் முதலிய வகைகளிலும் பாடியிருப்பினும் யாப்பைப் பொறுத்தவரை திரு.வி.க. ஆசிரியப்பாவையே பெரிதும் கையாண்டிருக்கிறார். ''கண்கள் படலத்தால் மறைக்கப் பெற்ற நாள்தொட்டுக்கருத்தொளியில் விளங்கும் பொருள்களைப் பெரிதும் அகவற்பாவால் வாய்மொழி வாயிலாக வெளியிட்டு வருகின்றேன். அவ்வெளியீடு எனக்கு எளிமையாகிவிட்டது. அகவற்பா பழந்தமிழர் கொண்ட ஒருவித உரைநடை'' என்பது திரு. வி.க. கூற்று.


**பாட்டுக் கொள்கை**

பாட்டு எத்தகையதாதல் வேண்டும் என்பது குறித்தும் திரு.வி.க. சிறந்ததொரு கொள்கையைக் கொண்டிருந்தார். பாட்டென்பது சொல்லடுக்கன்று; அணிச்செருக்கன்று; யாப்புக் கட்டுமன்று; இயற்கையோடு இரண்டறவியைந்த மனத்தினின்றும் விரைந்தெழும் மகிழ்ச்சியின் பொங்கல் பாட்டாகும்.'' என்று அவர் குறிப்பிடுகிறார். இயற்கையோடு இயைந்து உள்ளத்திலிருந்து பெருக்கெடுக்கும் இன்ப ஊற்றே பாட்டு என்பது திரு.வி.க.வின் கருத்து.

இயற்கையை இறையாகக் காணுதல், பெண்மையைப் போற்றுதல், உரிமையில் நாட்டம், தொழிலாளர் பெருமையும் நலமும் பேசுதல் ,தமிழ்மொழிபாற் காதல் கொள்ளுதல், புதுமை விரும்புதல், பொதுமை வேண்டுதல், சாதி சமயமற்ற சமுதாயம் காணல், சமரச சன்மார்க்க நாட்டம் ,எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுதல் முதலியவை அவர் தம் பாடல்களில் அமுத ஊற்றாய்ப் பெருகி வெளிப்பட்டிருப்பதை உணர்கிறோம். இக் கருத்துக்கள் கவித்துவத்தோடு கூறப்பட்டு நம் நெஞ்சைப் பிணித்து நீங்கா இடம் பெறுகின்றன.

**பாடல்வழி திரு.வி.க.**

இயற்கையே இறை. இதனைத் திரு.வி.க ''இறைவனே இயற்கையுடல் என்றே கொண்டாய்'' என்பார். திரு.வி.க. பெண்மைக்கு மதிப்பளிப்பவர். சிவன் அருளை



1912-ல் திரு.வி.க.வின் தோற்றம்

வேண்டுகின்ற நூலில் பெண்மைக்குச் சிறப்பு மிக வேண்டுமென அவர் இறைவனிடம் வேண்டிக் கொள்வது கொண்டு அவர்தம் பெண்ணுரிமை நாட்டத்தை நாம் நன்கறியலாகும்.

'பெண்ணினை இழித்துக் கூறும்
பேய்க்கதை சாகச் சாக
கண்ணினை விழிக்கச் செய்யாக்
கருங்கதை மாய்க மாய்க
புண்ணினை வளர்க்குந் தீய
புன்கதை போக போக
கண்ணுதல் கொண்ட தேவே
கருணைசெய் இன்னே இன்னே'

எனப் பெண்ணுக்கு இழிவு தேடும் புராணக் குப்பைகள் ஒழிய வேண்டுமென இறைவனிடம் வேண்டுகின்றார்.

தமிழ்மொழியின் இனிமையை,
''கனியினிமை கரும்பினிமை காதலிலே இனிமைபெருந்
தனியரசில் இனிமையென்பார் தமிழினிமை உணராரே''
எனும் திரு.வி.க. வின் கன்னல் வரிகளில் துய்த்து மகிழலாம்.

தொழிலாளர் நிலையையும் அவர்கள் முன்னேற வேண்டிய இன்றியமையாமையையும் பலர் பாடியுள்ளனர். ஆனால் திரு:வி.க.வோ தொழிலாளர்களைத் தெய்வமாகவே மதித்துப் பாடுகிறார்.


''ஆக்குவன் காப்பன் அழிப்பன் தொழிலாளன்
பார்க்குள் அவன்செயல்கள் பாடு''

எனத் தொழிலாளர்களை முத்தொழில் செய்யும் இறைவனுக்கு நிகராக்குகின்றார். உலகம் உயர்வது தொழிலாளர்களால்தான் என்பதை அவர்,

''தொழிலாளன் கையினில்தூய்புதுஞாலம்
வழியாய் மலர்ந்துவரும் வாழ்த்து''

என நிலைநிறுத்தி, அத்தகைய தொழிலாளர் முன்னேற்றத்துக்கு அனைவரும் பாடுபட வேண்டுமென வலியுறுத்துகிறார். நாம் காண விரும்பும் உலகப் புதுமையைத் தொழிலாளர்களே நல்க முடியும் என்பது திரு.வி.க.வின் அசைக்க முடியாத நம்பிக்கை.

தொடர்ச்சி 39-ஆம் பக்கம்.



# தென்புலத்துக் காவலர் திரு.வி.க.

பூவிருந்த வல்லிக்குள் பூத்த பூவே!
புன்மைதனை ஒழிப்பதற்குப் புயலாய் மாறி
காவியத்தே ரேறிநிதம் மாநிலத்தில்; என்றும்
காலைபகல் பாராது கடமை யாற்றி
ஓவியம்போ லானவரே! ஒருநூற் றாண்டு
ஓடினாலும் ஓடாத ஒருமைப் பாடே!
நாவினிக்க நற்றமிழை நாட்டில், ஏட்டில்
நல்கிவந்த நாயகனே! வாழி, வாழி!

அடியார்க்கு அடியாராய் மாறி; நாளும்
அன்பருக்கு நண்பராகி அருந்தொண் டாற்றி
விடிவெள்ளிக் கவிதைகளை விதைத்து; அன்று
வெளிச்சத்தை உம்மைப்போல் விதைத்தோ ருண்டா?
கொடியாகி இந்நாட்டுக் கொழுகொம் பாகிக்
கொட்டியபூ கொள்கைப்பூ கொஞ்சந் தானா?
மடியாமல் இருந்துவந்த மடமைப் பேயை
மண்ணுக்குள் புதைத்திட்ட மறையே வாழி!


தென்புலத்துக் காவலரே! திரு.வி.க.வே!
தேடிவரு வோரைநிதம் தேடிச் சென்ற
கண்மலரே! இந்நாட்டுக் கலையே—உன்போல்
கண்விழித்துத் தொழிலாளர் நலனைக் காத்த
மண்புகழும் மனிதர்யார்? மறைந்தும் வாழும்
மணியேஎன் ஒளியேஉன் பெருமை என்றும்
வெண்ணிலவு! தெவிட்டாத வெண்பா; ஞாலம்
விரைந்தேற்றுப் புகழ்கின்ற மறைநூ லாகும்

ஓராண்டு; நூறாண்டு; பலநூ றாண்டு
ஓடிடினும் ஓடாமல் உயர்ந்து நிற்கும்
சீரான உன்படைப்பு செகத்தோர் மெச்சும்
சிகரம்தான்! இமயத்துச் சிறப்புக் கீடு!
ஊராளும் பேராளர் உளத்தில் வாழும்
உத்தமனே! பெண்மைக்கு உயிரைத் தந்த
சீராளன் பாரதியைச் சிரசில் ஏற்றிச்
சீர்செய்த தமிழ்முனியே, என்றும் வாழி!



கவிஞர். வே. கபிலன்

# ஞாலத்தின் இருளை நாடு கடத்தியவர்





## மலையமான்

மாந்தருக்குள் தெய்வ வடிவினைக் கூடத்
தாங்கித், தமிழகம் வாழ்ந்தவர் திரு.வி.க;
இலக்கியம் அரசியல் தொழிலர் பெண்மை
நிலைகளில் இங்கே தலைமையை ஏந்தி
நான்கு முகத்துப் பிரம்மா வுக்கும்
சான்றாய்த் தொண்டினை நிகழ்த்தினார் அவர்தான்;
சரணம் புகுந்த வாளாய்ப் படிந்து
மரணத் திசைகாண் காத்த முள்ளாய்
சோர்ந்து கிடந்த சைவத் திற்குச்
சீர்மை அழைத்தது இவர்நாக்கு ஊசி;
மேடையில் மிதந்த ஆங்கில வாடையை
வாயிதழ்ப் பொதியம் வழங்கிய தென்றல்
வழித்துத் துடைத்து வாழும் தமிழின் முப்
பழச்சுவை வாசம் முதன்முறை தெளித்தது;
'பெண்கள் அடிமையே' என்ற நடைமுறை,
விழுது ஊன்றிக் கொழுத்த அந்நாளில்
'பெண்மை இறைமையே' என்னும் நுண்மையை
எண்ணத்தில் செதுக்கின இம்மூலவர் விரல்கள்;

சமுதாய உடம்பின் எலும்புத் தொழிலாளி,
உரிமை வாழ்வில் எலும்புக் கூடாய்
இருத்தல் சரியோ? எனும் வினாக் கருவியால்
சிதறிக் கிடந்த மானுடம் திரட்டி
உதிரிப் பூக்களை ஒருமாலை யாக்கி
ஆற்றலின் கழுத்தில் சூட்டின கைகள்;
சங்கம் என்றால் வயோதிக ஞானம்
தங்கித் தூங்கும் படுக்கை அறையெனும்
நினைப்பை மாற்றி, செயல்வல் லோரின்
உரிமை ஈட்டியைக் கடமைச் சம்மட்டியால்
சரிசெய் கின்ற சிந்தனைப் பட்டறை
எனும்சிறப் புக்கு வழிகாட்டின சுவடுகள்;
"திருமால் புத்தன் முருகன் ஏசு
அருகன் முகம்மது அத்தனை பேரும்
உயர்வு என்ற பூச்செண்டு பிடிக்கும்
இயற்கையின் விரல்கள்" இவர்சொல் வேதாந்தம்;
பேச்சு கட்டுரை கவிதை என்ற
ஞாயிறு நிலவு நட்சத் திரத்தால்
ஞாலத்தின் இருளை நாடு கடத்தியவர்!



# திரு.வி.க. சில நினைவுகள்

கே. அப்பன்ராஜ்

தமிழ்த்தென்றல்

தமிழ்முனிவர்,

தொழிலாளர் இயக்கத் தந்தை

என்று பல்வேறு அடைமொழிகளால் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களுடன் பழக, பேச வாய்ப்புக் கிடைத்தது என் வாழ்க்கையின் பெரும்பேறு என்று நினைத்து, நினைத்து மனம் திளைக்கின்றேன்.

இராயப்பேட்டையில் சாது அச்சுக் கூடத்தில்; தோட்டத்தை ஒட்டிய 'வெராண்டா'வில் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கும் அந்த மெல்லிய, எளிய உருவம் இன்னும் என் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதிந்திருக்கிறது. புன்னகை மாறாத முகம், ஒளி மங்கிய புறக்கண்கள் தீட்சண்யமான அறிவு கொழுந்து விட்டெரியும் அகக் கண்கள், கதராடையால் அலங்கரிக்கப்பட்ட அந்த ஞானியின் திருவுருவத்தை யாரும் எளிதில் போய் அணுகலாம். அவர் இருந்த இருப்பிடத்திற்குக் கூட அவருடைய இறுதி நாட்களில் இடைஞ்சல் வந்துவிட்டது. எத்தனையோ பேர் தங்கள் மாளிகையில் வைத்து அவரைப் பூஜிக்கத் தயாராக இருந்தார்கள். வீடு வாங்கப் பணம் அனுப்பினார்கள். அத்தனையும் அவரால் அன்போடு மறுக்கப்பட்டன.

''இந்த வீட்டிற்கு இத்தனை முக்கியத்துவம் ஏன் கொடுக்கிறீர்கள்?'' என்று ஒரு நாள் நான் கேட்டேன்.

''ஒன்றுமில்லை தம்பீ, என் கண்பார்வை மங்கிவிட்டது. இந்த வீடாக இருந்தால், யாருடைய உதவியும் இல்லாமல், யாருக்கும் சுமையாக இல்லாமல், நான் நடமாடமுடியும். பல வருடங்களாகப் பழகிவிட்ட வீடு. வாசற்படி, நிலைப்படி, மாடிப்படி மற்றும் ஒவ்வொன்றும் எங்கே இருக்கிறது என்பது எனக்கு அத்துபடி. ஆகவேதான் இந்த வீட்டைவிட்டு அகல என் மனத்திற்குத் துன்பமாக இருக்கிறது'' என்று கூறினார். கடைசியில் அந்த வீட்டை விட்டு மாறி, எதிரே உள்ள ஒரு வீட்டில் குடி போக வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. இந்த வேதனையே அவருடைய வாழ்நாட்களைக் குறைத்துவிட்டது.

திரு.வி.க.அவர்களுக்குச் சென்னைத் தொழிலாளர் சங்கம் மணிவிழா கொண்டாடிய நேரம். அழகான அவருடைய திருவுருவப் படத்தை யாரைக் கொண்டு திறந்து வைக்கலாம் என்று யோசித்தோம். தந்தை பெரியாரைவிட யார் பொருத்தமாக இருக்கமுடியும்? அவரை அணுகினோம்.

''உயிரோடு இருப்பவர்கள் யாருடைய படத்தையும் நான் திறந்து வைக்க ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்று ஆரம்பித்தார் அய்யா அவர்கள். எங்களுக்குத் 'திக்' என்றது. ஆனால் அடுத்து அவர்கள் கூறிய வார்த்தைகள் எங்கள் காதில் தேனாகப் பாய்ந்தன. ''ஆனால் திரு.வி.க.வின் படத்தைத் திறந்து வைக்கக் கண்டிப்பாக வருகிறேன். அது என்னுடைய கடமை'' என்றார்கள். யாருக்கும் கொடுக்காத மரியாதையைத் திரு.வி.க.வுக்குப் பெரியார் அவர்கள் ஏன் கொடுத்தார்கள் என்பதற்கு நாங்கள் வெளியிட்ட மலருக்கு அவர் எழுதியனுப்பியதே சான்று பகரும்.

''அவர் பொதுத் தொண்டுக்காகவே தன் வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டவர். ஆனாலும் மற்ற 100க்கு 90 பொதுத் தொண்டர்களைப்போல் அல்லாமல் தன்னைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்வதில் சிறிதுகூடப் பற்றில்லாதவர். மற்றும் பொதுத் தொண்டின் மூலம் எவ்வித சுயநலத்தையும் கருதாமல் தொண்டுக்காகவே தொண்டு செய்து வந்தார். அவர் ஏழையாகவே பொதுத்தொண்டுக்கு வந்தார். யாரும் அடையாத மதிப்பும் பெருமையும் அவரை வந்தடைந்தது என்றாலும் அவர் ஏழையாகவே முடிவெய்தினார்.

''இந்தத் தன்மையில் இவருக்கு இணையாகவோ, இவருக்கு அடுத்தபடியாகவோ சொல்லுவதற்குத்தமிழ்நாட்டில் எவருமே இல்லை. பொதுத் தொண்டின் பேரால் இறுதிவரை வாழாதவர்கள் என்றும், தனது நலத்தைப் பெருக்கிக் கொள்ளாதவர்கள் என்றும், செல்வம் சேர்த்துக் கொள்ளாதவர்கள் என்றும் சொல்லப்படுவதற்கு நமது நாட்டில் திரு.வி.க. அவர்களைத் தவிர வேறு யாரையுமே சொல்ல முடியாது என்பது எனது உறுதியான கருத்து.

''யாரிடத்திலும் எந்த உதவியையும் பெற மிக மிக வெட்கப்படுவார். யார் வலியச் சென்று செய்தாலும் மறுத்து விடுவார்.''

தந்தை பெரியார் அவர்கள் திரு.வி.கவைப் பற்றி இத்தகைய உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தமையால்தான், திரு.வி.க. அவர்களிடம் தந்தை பெரியார் அவர்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்கள்.

திரு.வி.க. அவர்கள் இயற்கை எய்தி, இறுதி ஊர்வலம் சூளையில் உள்ள சென்னைத் தொழிலாளர் சங்கத்திலிருந்து பல்லாயிரம் மக்கள்புடைசூழப் போய்க் கொண்டிருந்ததுசிந்தாதிரிப்பேட்டையில் மரண ஊர்வலம் வந்து கொண்டிருக்கும்போது, தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்தில் எங்கோ ஒரு மூலையில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர், தமது நிகழ்ச்சிகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு ஓடோடியும் வந்து கலந்து கொண்டார்.

கலந்து கொண்டது மாத்திரமல்ல, அந்தத் தள்ளாத வயதில் நடந்தே வந்தார். பெருமழை கொட்டத் தொடங்கியது. மக்கள் முகங்களில் எல்லாம் கண்ணீர் வெள்ளம். சென்னைத் தெருக்களிலே தண்ணீர் வெள்ளம். தண்ணீரில் நனைந்து, பெரியாரின் காலணி அறுந்துவிட்டது. வெறுங்காலோடு அய்யா அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள். உள்ளத்து வேதனை கால் வேதனையை மூழ்கடித்து விட்டது போலும். அவர் வெறுங்காலோடு தட்டுத் தடுமாறி நடந்து வருவதைப் பார்த்த மனம் பொறுக்காத கூட்டம் கெஞ்சிக் கதறி அவரை ஒரு 'ரிக்ஷாவில்' ஏறி வரும்படி செய்தது.

அய்யா அவர்கள் வெறுங்காலோடு நடந்து வந்த காட்சியைக் கண்டு கதறிய எனக்கு ஒரு பழைய சம்பவம், அதே மாதிரி திரு.வி.க. அவர்கள் வெறுங்காலோடு நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

1947ல் சென்னை பக்கிங்காம் கர்நாடிக் மில் தொழிலாளர்கள் தோழர் அந்தோணிப்பிள்ளையின் தலைமையில் சில பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக ஆறு மாத காலம் வீரப் போராட்டம் நடத்தினர். சங்கத் தலைவர் கைது செய்யப்பட்டால் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த ஒரு போராட்டக்குழு தொழிலாளர்களால் அமைக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் தலைவர் திரு. வி.க. அவர்கள் ஆவார்கள். போராட்டத்தின்போது தோழர் அந்தோணிப்பிள்ளையும் மற்றும் நூற்றுக்கணக்கான சங்க முக்கியஸ்தர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையிலே அடைக்கப் பெற்றனர். போராட்டக்குழு கூடி, போராட்டம் பற்றிய பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவேண்டும். போராட்டக்குழு கூடும் விஷயம் வெளியானால் காரியம் அத்தனையும் கெட்டுவிடும். ஆனால் போராட்டக்குழு கூடியே ஆகவேண்டும்.

ஒருநாள் போராட்டக் குழு தற்போது 'டிரைவ் - இன் உட்லாண்ட்ஸ்' சிற்றுண்டி நிறுவனம் இருக்கும் தோட்டத்தில் கூடுவதாக முடிவு எடுத்தது. இந்தத் தோட்டம் அப்போது சுற்றிலும் நெருக்கமாக மரங்கள் அடர்ந்ததாய், வெளியே இருந்து பார்த்தால் உள்ளே இருப்பவர்கள் யாரும் தெரியாத வண்ணம் இருந்தது. கூட்டம் பகல் 12 மணிக்கு.

அக்கமிட்டிக் கூட்டத்திற்கு ரகசியமாக திரு.வி.க.வை அழைத்துவரும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. எப்படி அழைத்து வருவது? திரு.வி.க.வின் வீட்டைச் சுற்றி ரகசியப் போலீஸ், கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு, கண்காணித்து வருகிறார்கள். மூன்றாம் பேருக்குத் தெரியாத மனுஷன் என்றால் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அழைத்துச் செல்லலாம். திரு.வி.க.வை எப்படி ரகசியமாக அழைத்துச் செல்வது?

அன்று இரவு பூராவும் எனக்குத் தூக்கமில்லை. கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் செயல்படத் துவங்கினேன். பகல் பன்னிரண்டு மணிக்கூட்டத்திற்குக் காலை பத்து மணிக்கே ஒரு வாடகைக் காரை எடுத்துக் கொண்டு திரு.வி.க. வீட்டின் முன்போய் நின்றேன்.

போகும்போதே சுற்று முற்றும் பார்த்து நிலைமையை ஒருவாறு கணித்துக் கொண்டேன். சாதகமான சூழ்நிலை இருப்பதைக் கண்டு மனத்திற்குள் மகிழ்ச்சி அடைந்தேன். வேகமாக வீட்டிற்குள் நுழைந்தேன். சாய்வு நாற்காலியில் அந்த அமைதியின் திருவுருவம் சாய்ந்து, சிந்


## மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் புதிய 20 அம்சத் திட்டத்தை மதுரை மாவட்டம் சீரிய முறையில் அமல் நடத்தி வருகிறது. நடப்பு நிதியாண்டில் (1983-84) ஜூன் மாதம் முடிய மாவட்டத்தின் சாதனைகள் வருமாறு :

பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தின் கீழ் 450.41 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. 1983-84-க்கான குறியீட்டு அளவு 2,795 எக்டேர்.

உபரிநில ஒதுக்கீடு இலக்கு அளவு 1,600 ஏக்கர், ஜூன் மாதம் வரை 115 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிணைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இதுவரை 13 தொழிலாளர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். ஆதிதிராவிடர் வளர்ச்சிக்கான திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டு 1,935 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.(இலக்கு அளவு 17,721 குடும்பங்கள்).

பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் 102 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 16 கிராமங்கள் குடிநீர் வசதி பெற்றுள்ளன.

ஜூன் மாதம் முடிய 9,693 குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.

தனையில் ஆழ்ந்திருந்தது. திடீரென நான் போய் முன்னால் நின்றதும், உற்சாகம் மேலிட்டவராய் ''வந்துவிட்டீர்களா? எப்படி வந்தீர்கள்? என்ன செய்தி?'' என்று எழுந்து என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

அப்போது அவருடைய பார்வை பழுதடையாமல் இருந்த நேரம். ''போராட்டக் கமிட்டி கூடுகிறது. தாங்கள் வர இயலுமா?'' என்று கேட்டேன். ''ஓ அதற்காகத் தானே நான் காத்துக் கொண்டிருக்கிறேன்; இதோ உடனே வருகிறேன்'' என்று சட்டையைத் தூக்கிப் போட்டுக் கொண்டு என்னுடன் கிளம்பி விட்டார். நான் ஒரு சிறு தவறு செய்தாலும், கூண்டோடு கைலாசம் என்பதுபோல, போராட்டக் கமிட்டி அப்படியே போலீஸார் கையில் சிக்கி விடும் ஆகவே மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியிருந்தது அதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுப்பது போல, திரு.வி.க.வும் துரிதமாகச் செயல்பட்டார்.

## தமிழ்நாட்டில் கூடுதல் தொலைக் காட்சி மையங்கள்

கொடைக்கானலில் 10 கிலோவாட் சக்தியுள்ள தொலைக்காட்சி அஞ்சல் மையத்தை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதைத்தவிர சேலம், வேலூர், தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் நெய்வேலியில் குறைந்த சக்தி டிரான்ஸ் மிட்டர்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்குத் தொலைக் காட்சி வசதி வழங்குவதற்காக ஏலகிரி மலைப்பகுதியில் அஞ்சல் டிரான்ஸ்மிட்டர் ஒன்றை நிறுவுமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரமான வேலூரில் குறைந்த சக்தி டிரான்ஸ் மிட்டர் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பெங்களூரில் 10 கிலோவாட் தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர் மூலம் தர்மபுரி மாவட்டத்தின் பகுதிகள் தொலைக்காட்சி வசதி பெறும்.

திரு.வி.க.வின் இல்லத்திற்கும் கூட்டம் நடக்கும் இடத்திற்கும் சில பர்லாங்குகளே இருக்கும். இருந்தாலும் அவரைக்காரில் ஏற்றிக் கொண்டு பாரிமுனைக்குச் சென்றேன். அங்கே நாங்கள் வந்த காரிலிருந்து இறங்கி, அந்தக் காரை அனுப்பிவிட்டு, யாரும் பின்தொடர்கிறார்களா என்பதை நன்கு கவனித்துவிட்டு, வேறு ஒரு வாடகைக் காரை அமர்த்திக்கொண்டு தியாகராய நகருக்குச் சென்றேன். அங்கு தான் திருமதி. அந்தோணிப் பிள்ளை குடியிருந்தார். அவருடைய வீட்டில் திரு.வி.க.வைத் தங்க வைத்துவிட்டு, வந்த காரை அனுப்பிவிட்டேன். ஒரு சில நிமிடங்களில் அங்கிருந்து புறப்பட்டு, யாரும் பின்தொடரவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு திடீரென ஒரு 'சிட்டி பஸ்'சில் ஏறினோம். சன் தியேட்டர் முன்னால் வந்து இறங்கி நடந்தோம்.

மே மாதத்து உச்சி வெயில், தார் ரோடு. காலை கீழேவைக்க முடியாத அளவுக்குச்சூரிய வெப்பம். திரு.வி.க. அவர்களுக்கோ காலணி இல்லை. கொதிக்கும் தார் ரோட்டில் முதியவரின் வெறுங்கால்கள் நடைபோட்டன. நான் என் காலணியைக் கழட்டிக் கொடுத்தேன் ''இதை அணிந்து கொண்டு வாருங்கள்'' என்று மன்றாடினேன். ''வேண்டாம். நான் காலணி அணியமாட்டேன். அப்படியொரு சபதம்'' என்றார்கள். தலையிலே துணியைப் போட்டுக்கொண்டு, ''வாருங்கள் போவோம்'' என்று முன்னாலே நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். என் கண்கள் கலங்கின.

''உங்களை மிகவும் துன்பப் படுத்திவிட்டேன்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினேன்.

அதற்கு அந்தச் சாந்த மூர்த்தி என்ன பதில் கூறினார் தெரியுமா?

''இதற்காகவா கலங்குவது! இது எனக்குப் பழக்கம். இதிலே எனக்கு உற்சாகமும் கூட. வாருங்கள் போவோம்,'' என்று என் தோளில் கைவைத்து ஆறுதல் சொன்னார்.

பிறகு அவரைப் பூங்காவிற்குள் அழைத்துச் சென்றேன். மூலைக்கு ஒருவராக இருந்த போராட்டக் கமிட்டியினர், எங்களைப் பார்த்து, ஒவ்வொருவராக வந்து கூடினர். தொடர்ந்து நடக்க வேண்டிய வேலை பற்றி விவாதிக்கப்பட்டது. சில முடிவுகள் எடுக்கப்பட்டன. திரு.வி.க. மீண்டும் அமைச்சரவையை அணுகிப் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் முடிந்ததும் தனியாகப் புறப்பட்டுவிட்டார் பெரியவர், அவர் இல்லம் நோக்கி.

''எனக்கு இனி யாரும் துணையாக வரவேண்டாம். வண்டியும் வேண்டாம். நான் நடந்தே போய்விடுவேன். நீங்கள் தாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து. ஆகவே நீங்கள் எல்லோரும் இங்கிருந்து உடனே சென்று விடுங்கள்'' என்று கூறிவிட்டு, விடுவிடுவென நடந்தார். அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த எனக்கு காந்திஜி நடந்து போவதுபோல் ஒரு வண்ணச் சுவரொட்டி ஒட்டியிருக்குமே, அது தான் நினைவிற்கு வந்தது. அதில் காந்திஜி காலணி அணிந்திருந்தார். இங்கே இவர் காலணியில்லாமல் நடக்கிறார்.

திரு.வி.க. அன்பும் பாசமும் கொண்டவர். தனக்கு உற்றாரிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

1950-ல் எனக்கு முகவை மாவட்டம் மானாமதுரையில் திருமணம். தலைமைதாங்க திரு.வி.க. அவர்கள் இசைவு அளித்திருந்தார்கள். அழைப்பிதழும் அச்சாகி விநியோகிக்கப்பட்டு விட்டது. ஆனால் திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன் போய் அவருடைய பிரயாணத்திற்கு எப்படி வசதி செய்யலாம் என்பதைப் பேச முற்பட்ட எனக்கு ஒரே அதிர்ச்சி.

வழக்கமாக அவர் அமர்ந்திருக்கும் சாய்வு நாற்காலி காலியாக இருந்தது. விசாரித்ததில், அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருப்பதாகவும், பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் கூறினார்கள். நான் செய்வதொன்றும் அறியாமல், அவர் தலைமை வகிப்பதாக அச்சிட்ட அழைப்பிதழை மட்டும் அவரிடம் காண்பிக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

அடிகளார் ஒருவர் காவி உடை

அணிந்து திரு.வி.கவுடனேயே இருப்பார். அவர் அழைப்பிதழை எடுத்துக் கொண்டு மேலே போனார். ஆம். மாடியில் அவரு டைய இருப்பிடம் மாற்றப்பட்டு விட்டது. சில நிமிடங்களில் கீழே வந்து என்னை அழைத்துக் கொண்டு போனார்.

பெரும் செல்வந்தர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் அனு மதி மறுக்கப்பட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் நான் மட்டும் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். எலும்பும் தோலுமாய் 'முதுமையின் உள றல்' எழுதிக் கொண்டிருந்த சாந்த சொரூபன் அங்கே படுத் திருந்தார்.

என்னை உட்காரச் சொல்லி விட்டு, மிகுந்த துயரத்தோடு, தன் இயலாமை பற்றிக் குறிப் பிட்டார். எனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தின் வேதனையைத் தானும் அனுபவிப்பதாகக் கூறி னார். கூட இருந்தவர்கள் தடுத் தும், சிரமப்பட்டு எழுந்து, உட் கார்ந்து, தன் இரண்டு கைகளை யும் என் சிரசில் வைத்து,

''திருமண நிகழ்ச்சியின் போது வாழ்த்த வேண்டியதை, இப் போதே, இங்கேயே வாழ்த்துகின் றேன். உங்கள் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்து, உங்கள் இல் வாழ்க்கை இனிதே நடைபெற என் இதயத்தின் அடித்தளத்தி லிருந்து வாழ்த்துகின்றேன்'' என் றார்கள். அவருடைய வாழ்த்து வீண்போகவில்லை. இன்றளவும் என் திருமண வாழ்க்கை இன்பத் திலும் துன்பத்திலும் உறுதியாக நின்று சான்று பகருகிறது.

திருமணத்திற்கு திரு.வி.க.வுக் குப் பதில் யாரைத் தலைமை தாங்கச் செய்வது? வழக்கமான புரோகிதர் சடங்கெல்லாம் கூடாது என்று சீர்திருத்தத் திருமணம் செய்ய என் வீட்டா ரிடத்தும் என் மனைவி வீட்டா ரிடத்தும் அனுமதி வாங்கி இருந் தேன். இப்போது அதிலே மாற்றம் என்றால் தலைகுனிவு தானே!

திருமணத்திற்கு முதல் நாள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மதுரையில் வந்து தங்கி யிருந்தார். எனக்கு அவரிடத் திலே அதிக சடுபாடு உண்டு.

கவிஞர் மதுரையில் தங்கியி ருந்த இல்லத்துத் தலைவர் என் னுடைய உயிர்த் தோழர். ஆகவே நாங்கள் புரட்சிக் கவிஞரை அணுகி, நிலைமையை எடுத்துச் சொல்லி, அவரைத் தலைமை தாங்கும்படி தயக்கத்துடன் வேண்டினோம். அழைப்பிதழை யும் காட்டினோம்.

''திரு.வி.கவுக்குப் பதில் நான் தலைமை தாங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கண்டிப் பாக நான் வந்து தலைமை வகிக் கிறேன்'' என்றார்கள். திரும ணத்தின்போது ஏராளமான வாழ்த்துத் தந்திகளும் கடிதங் களும் வந்திருந்தன. அவற்றை நண்பர்கள் முதலில் வாசிக்கத் துவங்கினர். அதிலே ஒரு தபால் கார்டு.

திரு.வி.க. அவர்கள் கையெ ழுத்திட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். பாவேந்தர் அவர்கள் ''அதை முதலில் படி யுங்கள்'' என்றார். திரு.வி.க. விடத்து எத்தகைய மதிப்பும் மரி யாதையும் புரட்சிக் கவிஞர் வைத்திருந்தார்கள் என்பதை அது எடுத்துக் காட்டிற்று. சிறி யேனாகிய என் திருமணத்தை மறக்காமல் திரு.வி.க. அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியது என் வாழ்நாளிலேயே மறக்க முடி யாத நிகழ்ச்சி.

## மனிதனின் கடமை



நமது தமிழ்நாட்டிற்குப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தழைத்து வளர்ந்து வரும் வரலாற்றுப் பெருமை உண்டு. என்றாலும், எவ்வளவு தொன்மையான சிறப்பைப் பெற் றிருந்தாலும் மாற்றங்கள் சமுதாயத்தில் இன்றி யமையாதவை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது நமது தமிழ் இலக்கணம். அதே நேரத்தில் எந்த மரபுகளையும் பண்பாடுகளையும் நல்லவை யென்று காலங்காலமாகப் போற்றி வந்தோமோ அவற்றை உதறிவிட்டு, புதுமை என்ற பெய ரில் போலித்தனத்தை நாடி அலைவதும் நமக்கு உகந்ததல்ல. ஆனால் அதே சமயத்தில் பழமையிலேயே சிறைப்பட்டுப் புதிய சூழ்நிலை களை உணர மறுத்தால் தேக்கம்தான் மிஞ்சி நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலும் சிக் குறாமல், பழைமையை ஆதாரமாகக் கொண்டு புதுமையிலே ஆர்வம் காட்டி, நம்து பழைய மரபுகள், பண்பாட்டு நெறிகள் இழையோடு கின்ற சமூகப் பொருளாதார அமைப்புதான் நமது நாட்டுக்கு ஏற்றதாகும். மாறுதலைக் கண்டு அஞ்சாமல் அறிவுடைமையோடும் ஆண்மையோடும் நின்று, எதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து, காலத்திற்கும் அவசியத் திற்கும் தக்க வண்ணம் தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும்.

—மாண்புமிகு முதல்வர்
(மதுரைகாமராஜர்பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையிலிருந்து— 18.12.82)



# சென்னை நகரக் காவல் துறையின் சிறப்புப் பயிற்சிகள்

அ. மருது

உலகத்திலேயே ஸ்காட்லண்டு யார்டு காவல் துறைக்கு அடுத்த படியாக தமிழ்நாடு காவல்துறை புகழ்பெற்றுச் செயலாற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் தலைநகரிலுள்ள சென்னை நகரக் காவல் துறை பல அரிய சாதனைகளைப் புரிந்து மற்ற மாவட்டங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுரைப்படி காவல்துறையில் பணி ஆற்றும் அனைவரும் உடலைக் கட்டுப்பாடாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக, ஒழுங்காக-கவனத்துடன் வாரம் தவறாமல் உடற்பயிற்சி செய்து வருகின்றனர்.

சென்னை மெரினா கடற்கரையில் சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் திரு.ஸ்ரீபால், துணை ஆணையாளர் திரு எம். பாலசந்திரன் ஆகியோரது மேற்பார்வையில், திருவல்லிக்கேணி சரக உதவி ஆணையாளர் திரு. வி.சுந்தரவரதன் அவர்களின் தலைமையில் உடற்பயிற்சி செய்து வருகிறார்கள்.

கடந்த 12.8.83 அன்று காலை நடந்த உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றி பெற்ற காவலர்களுக்கு, சென்னை நகரக்காவல் துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அவர் பேசுகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடிப் பார்வையில் செயல்பட்டுவரும் காவல்துறையைச் சார்ந்த அனைவருக்கும் செய்துள்ள நன்மைகள், வீட்டுவசதி மலிவு விலையில் உணவுப் பண்டங்கள் வழங்குதல், வாகனவசதி மருத்துவ வசதி ஆகியவற்றைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறி, காவல்துறையினர் மேலும் பல நல்ல காரியங்களைச் செய்து, பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.




குதிரை ஓட்டுநர், குதிரையின் மீது அமர்ந்து, திறமையாக ஓட்டுவதற்கு அவர்கள் முட்டுக்கால் பலத்தினால் குதிரையை இறுக்கிப் பிடிக்கவேண்டும். அதற்குண்டான பலம் காவலருக்கு இருக்கிறதா என்று சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அவர்கள் சோதனை செய்கிறார். திரு ஸ்ரீபால் அவர்கள் குதிரைச் சவாரி செய்வதில், இந்தியாவிலுள்ள வல்லுநர்களில் ஒருவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.





# சிங்கவால் குரங்கு

டி. அச்சையா, வனத்துறைத் தலைவர்

தமிழகத்தில் காணப்பெறும் குரங்கினங்களில் மிகவும் அழகானதும் அரிதானதும் ஆகும் சிங்கவால் குரங்கு என்பது. சங்க இலக்கியங்களில் குரங்குகளைப் பற்றி மிக அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலையில் பெய்த மழையில் நனைந்து நனைந்து தன்னுடைய குட்டிகளுடன் ஒரு தாய்க் குரங்கு நடுங்குவதாகக் கூறும் குறுந்தொகைப் பாடலை இங்கு காண்போம்.

''இன்மயிலகவு மரம்பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்
குன்ற நோக்கி னென் தோழி
பண்டை யற்றோ கண்டி சின்நுதலே''

என்று சிங்கவால் குரங்கு நரைமுக ஊகமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மேலும் புறநானூற்றில்-

''குறுமலைக்கலமரும் பாலார் வெண்மதி
நரைமுக ஊக்மொடுக்கும் வரையாமல்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இக் குரங்கு சங்க இலக்கியங்களிலும் மற்றும் மலைவாழ் மக்களிடையேயும் அரக்கன், சிங்காளன், முசு, நரைமுகவூகம் என்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டு வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அரக்கன் சோலை என இக்குரங்குகள் வாழும் வனங்கள் அழைக்கப்படுகின்றன. இதுதலையும் உடலும் சுமார் இரண்டடி நீளமும், வால் ஒரு அடி நீளமும் நுனியில் சிங்கவால் நுனி ஒத்த கற்றை முடிகள் கொண்டு கட்டையான உறுதியான உடல் கட்டுடையது. பெண்ணினம் சற்றே சிறியது, மற்ற குரங்கினங்களிலிருந்து இதனை வேறு படுத்திக் காட்டுவது, ஆகும். இதன் தாடியும், கிருதாவும் நீண்ட ரோமங்களால் முகத்தைச் சுற்றி அமைந்திருப்பது, இதனுடைய கரிய உடலினின்று தனித்துக் காட்டுகின்றது.

இவ்வினம் வாழும் இடம் மஞ்சுகள் கொஞ்சும் மலைமுகடுகளைத் தழுவி நிற்கும் சோலைகளும், பள்ளத்தாக்குகளில் அடர்ந்து செறிந்துகாணப்படும் வனங்களுமாகும். இக் குரங்குகள் தரையில் இறங்குவதே இல்லை. இவை வாழும் கானகத்து மரங்களோ சுமார்



100 முதல் 150 அடி வரை உயரமுள்ளன. இச்சோலை மரங்கள் அநேக அடுக்குகளாக அமைந்திருக்கும். சுமார் 30 முதல் 50 அடி வரை உயரமுள்ள சில வகை மரங்கள் ஒரு அடுக்காகவும், அதற்கு மேல் 50 முதல் 90 அடி வரை வேறு வகையான மரங்கள் ஒரு மாடியாகவும், இவ்வாறு 15 அடி முதல் இவ் வனங்கள் மாடி மாடிகளாக அமைந்திருக்கும். இம்மரங்களெல்லாம் பசுமைமாறா இலை யுதிராத் தன்மையன. அதாவது ஒரு பொழு தும் மரத்தில் இலைகள் அனைத்தும் உதிர்ந்து மொட்டையாக மரங்கள் காணப்படமாட்டா. இலைகள் உதிரும் பொழுதே புதிய இலைகள் உடனுக்குடன் தோன்றி விடுவதால் பசுமை மாறாத தன்மையைக் கொண்டுள்ளன. சிவப்பு, பழுப்பு நிறப் புதிய தளிர்களும் கற்பனைக் கெட்டாத பலவகைப் பச்சை நிறங்களையும் இலைகள் பெற்று அழகாகக் காணப்படும். மேடுதாழ்வு, பள்ளத்தாக்கு ஆகிய நில அமைப்பைப்பெற்றிருப்பதால் இவ்வனங்களில் உச்சிகளும் சமமாக இல்லாமல் உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும்.

இதனால் சூரிய ஒளி இவ்விலைகளின் மேல் பரவலாகப்படர்வதற்கு வாய்ப்புள்ளது. பருவக்காற்றுகள் சூல்கொண்டு மழை மேகங் களாக வானத்தில் படர்ந்து வரும் பொழுது சோலைக் காடுகளின் குளிர்ச்சி,இச்சூல் மேகங் களைஈர்த்து மழையாகப் பொழியச் செய்கின் றது என்பது அனைவரும் அறிந்த விஞ்ஞான உண்மை. இம்மரங்கள் தொடர்ந்து நெருங்கி அவற்றில் கிளைகளும் இலைகளும் ஒன்றுடன் ஒன்று செறிந்து, பிணைந்து இருத்தலால் எல்லா இலைகளின் பரப்பின் அளவைப் பொறுத்தே இலைகள் வெளியேற்றும் ஆவி நீரின் அளவு அமையும். இந்த ஆவி நீரின் அளவைப் பொறுத்துத் தான் வனச் சூழலின் தண்மைநிலை இருக்கும். எனவேதான் மழை மேகங்கள் சோலைக் காடுகளில் மழையைப் பொழிகின்றன. இவ்வாறு பெய்த மழை அடுக்கடுக்கான இலை, கிளைப் படுக்கைகளின் மீது விழும் பொழுது அவற்றின் வேகம் குறைந்து மரங்களின் கிளைகளின் வழியாக மெதுவாக இறங்கித் தரையை அடைகின் றன.

தரையிலோ பல நூற்றாண்டுகளாக வீழ்ந்த மக்கிப்போன, மக்கி மாறும் பல்வேறு நிலைகளிலுள்ள கடற்பஞ்சு போன்ற இலை மெத்தைகள் இருப்பதால் மழைநீரை உறிஞ்சி சிறிது சிறிதாகத் தாழ்வான மலைப்பகுதிகளி லுள்ள சிற்றருவிகளுக்கு அனுப்புகின்றன. எனவே தெள்ளத் தெளிந்த நீர்ச்சோலைகள் நிறைந்த மலைகளில் உள்ள ஆறுகளில் ஓடு வதைப் பார்க்கலாம்.

இத்தகைய வனங்கள் மின்சார வளர்ச் சிக்கென அமைக்கப்பட்டுள்ள அணைக் கட்டு கள் கட்டப்பட்ட காலத்தில் அதிகமாக அழிக் கப்பட்டன. எங்கெங்கே அணைகள் கட்டப் பட்டனவோ அங்கெல்லாம் ஐந்தாயிரம், பத் தாயிரம் வேலை ஆட்களின் தற்காலிகக் குடி யிருப்புத்தோன்றி அம்மக்களின் அன்றாட விற குத் தேவைகளுக்கென, காடுகள் சிறிது சிறி தாக அழிக்கப்பட்டன. மேலும் நம்முடைய பல்வேறு தேவைகளுக்கென இவ்வரிய வனங் கள் அழிக்கப்பட்டன. மனிதனால் தங்களது வாழ்க்கைச் சூழல் குறைக்கப்பட்டு வாழ்க்கைத் தேவைகள் மறுக்கப்பட்ட காரணத்தால் இவ் வினம் சிறிது சிறிதாக அழிந்து அறவே அற் றுப் போகும் நிலையை அடைந்துள்ளது.

முற்றிலும் அழிந்து போகும் முன்னர் இவ்வினம் காப்பாற்றப்பட வேண்டியதன் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்ட தமிழ்நாடு அரசு இவ்வினம் அதிகமாகக் காணப்படும் திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு சரணாலயத்தை 1976 ஆம் ஆண்டு அமைத்துள்ளது. வேறுதேவைகட்கெனக்களக் காடு வனங்கள் அழிக்கப்பட இருந்ததைத் தமி ழக அரசு தடுத்து, இந்த அரிய உயிரினம் தொடர்ந்து வாழ வகை செய்துள்ளதை நம் நாட்டில் மட்டுமல்ல, பிற நாடுகளில் வன விலங்கு புரத்தலில் ஆர்வம் உள்ளவர்களி டையேயும் குறிப்பாகக் குரங்கின ஆராய்ச்சி வல்லுநர்களிடையேயும் மகிழ்வையும் மன நிறைவையும் தந்துள்ளது.

## வாழ்க்கைத் தன்மை

மனிதர்களைப்போலவே இது குடும்பமாக வாழும் பாங்குடையது. பிற வனவிலங்குகள் இனவிருத்திக் காலங்களில் மட்டும் ஆணும் பெண்ணும் ஒன்றியிருந்து இனவிருத்திக் காலம்

முடிந்த பின்னர் பெரும்பாலும் தனித்தனியாக வாழும் தன்மையுடையன. ஆனால் குரங்கினங்களோ குடும்பமாகப் பெண்கள், குட்டிகளுடன் 5 முதல் 30 வரை எண்ணிக்கையுள்ள குடும்பக் கூட்டங்களாக வாழ்கின்றன. ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை நெருங்கிய உறவினர்களாக இருக்கலாம். ஆண்கள் வளர்ச்சியடைந்து பெரியவைகளாகும் பொழுது கூட்டத் தலைவருடன் போட்டியிட்டு, பொருது பழைய தலைவனை விரட்டி விடலாம் அல்லது விரட்டப்படலாம். பெண்களை, குட்டிகளைப பேணுவதற்கெனத் தலைவன் தன் உயிரையும் அஞ்சாமல் பகைவர்களுடன் சாடுவது உண்டு.

இக்குரங்குகள் முதிர்ச்சியடைய ஆணுக்கு 7 ஆண்டுகளும், பெண்களுக்கு 3 ஆண்டுகளும் பிடிக்கலாம். ஒரு முறை ஈன்று அக்குட்டி வளர்ந்து தனியாகச் செல்லும் வரை பெண்கள் கூடுவதில்லை. அக்குட்டிகள் தனியாகத்தான் தன்னைப் பேணிக் கொள்ளும் வளர்ச்சி பெறக்குறைந்தது மூன்று ஆண்டுகளாகும். அநேகமாக இயற்கையின் போட்டி நிறைந்த சூழலில் 12 முதல் 15 ஆண்டுகட்கு மேல் இவை உயிருடன் இருக்க முடியாது.

எனவே ஒரு பெண் சிங்காளம் தன் வாழ்வில் பிற தேவைகள் சரியாக அமைந்திருந்தால் 3 குட்டிகளை ஈன முடியும். அக்குட்டிகள் நோயுறாமல்–எதிரிகளால் கவரப்படாமல் முழு வளர்ச்சியடைவது எளிதல்ல. ஒரு வேளை ஐந்து குட்டிகளில் ஒரு குட்டியே முதிர்ந்த பருவ நிலையை அடையலாம். இவ்வாறு குறைந்த வாழ்வுள்ள ஒரு குட்டியே ஈனும், இக்குரங்கினத்தைப் புரத்தில் உயிரியல் வல்லுநர்களுக்கு, அருகிவரும் இச்சூழலில் கடினமான ஒரு செயல் ஆகும்.

## உணவு

இவை தளிர்கள், மொட்டுகள், பூக்கள், பழங்கள், கொட்டைகள், பூச்சிகள், பல்லிகள், சிறு உயிரினங்கள், பறவைகள், முதலியவற்றை உணவாகக்கொண்டு வாழ்கின்றன. காட்டுப்பலா, முள்பலா, காட்டு ஆலம், அத்தி முதலிய பழங்களை விரும்பி உண்கின்றன. எனவே காட்டு அத்தி (அ) காட்டுப்பலா பழுத்திருக்கும் போது அதிக நேரம் அம்மரங்களில் அமர்ந்து இவை கூட்டமாகப்பழங்களை உண்ணும். பழுத்த ஒரு பெரிய மரத்தை நோக்கி பல மைல்கள் காட்டு வழியாக இவை தேடிச் செல்வதும் உண்டு. காட்டுப் பலா (குலினியா எக் சாரிலேடா) எனப்படும் ஒருவகை மரம் ஆண்டுக்குச் சுமார் 200 நாட்கள் பூக்களின் மூலமாகவும், இளந்தளிர்கள் மூலமாகவும், கொட்டைகள் மூலமாகவும், இக்குரங்கினத்திற்கு உணவாகத் தருகின்றன. டாக்டர் கடாம்பி என்ற அறிஞர் 1954ல் இத்தாவர இனத்தைப் பற்றி ஆராய்ந்து அம்மரம் காணப்படும் இடங்களைக்குறிப்பிட்டுள்ளார். இம்மரம் காணப்பட்ட இடங்களிளெல்லாம் சிங்காளம் என்ற இக்குரங்கு வாழ்ந்துள்ளது என்பதை அறியும்பொழுது வியப்பாக உள்ளது.

இக்குரங்கினங்கள் மக்களின் அறியாமையினால் மக்களுக்கு ஏற்படும் எல்லா நோய்களுக்குமே அவற்றின் இறைச்சியும் இரத்தமும் மருந்தாக அமையும் என்ற தவறான எண்ணம் நிலவி வருகின்றது. இருண்ட காடுகளில் இக்குரங்கினம் வாழ்வதால் மருந்துச் செடிகளையே தேர்ந்தெடுத்து உண்பதாகவும், அதகைய மருந்துச்செடிகளை இவை உண்பதால் இவற்றின் குருதியும், சதையும் மருந்தாக அமையும் என்ற மூட நம்பிக்கையும் இக்குரங்கினங்கள் விரைவில் அழியக்காரணமாக அமைந்தது. வனங்களில் சாலைகள் அமைப்பதால் 50 முதல் 100 அடி அகலமுள்ள அகன்ற மின்சாரக் கம்பங்கள் நடப் பெறுவதாலும் சோலைகள் தொடர்பற்று, சிறு சிறு பாகங்களாக ஆகின்றன. கிளைகள் ஒன்றோடொன்று தொட்டுக் கொள்ளாத நிலையில் இக்குரங்கினங்கள் தரையில் இறங்கி அருகில் உள்ள சோலைகளுக்குச்செல்லவேண்டிய அவசியம் ஏற்படுவதலால் புலிகளுக்கோ அல்லது மற்ற எதிரிகளுக்கோ உணவாகும் ஆபத்தான நிலையை அடைகின்றன. இவ்வினம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் சோலைகள் தொடர்ந்து அதிக அளவில் அமைந்திருந்தாலன்றி, இவற்றின் இயல்பான வாழ்வு பாதிக்கப்படும்.

மனிதனுக்கு ஏற்படக்கூடிய எல்லா நோய்களும், எல்லாக் குரங்கினங்களுக்கும் இவ்வரிய இனத்திற்கும் ஏற்படலாம். மனிதனுடைய உடல் அமைப்பு சில நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மை வர தன் உடலிலேயே அமைந்துள்ளது. ஆனால் குரங்கினங்களோ அவ்வாறன்றி ஒதுங்கி, தொன்று தொட்டு வாழ்ந்துள்ளன. எனவே மனிதனுக்கு ஏற்படும் மனிதனுடைய நோய்கள் ஒரு குரங்குக் கூட்டத்திற்குப் பரவ நேரிடில் அதாவது காச நோய், நிமோனியா போன்றவை நேர்ந்தால் பூண்டோடு அழிந்து விடும்.

சங்க இலக்கியங்களில் இக்குரங்கினங்களைப் பற்றி அரிய செய்திகளும் அவற்றின் வாழ்க்கை ஒழுக்கங்களைப் பற்றிய குறிப்புகளையும் காண்கின்றோம். மலையையும், மலை சார்ந்த காடுகளையும் பற்றிப் பாடப்பட்டுள்ள மலை படு கடாத்தில் நான்கு வகைக் குரங்குகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.



சங்கம் வளர்த்த தமிழ் இலக்கியங்களின் சிறப்பினை அறிந்து, உணர்ந்து பெருமை கொள்கிறோம். பண்டைய கோவில் சிற்பங்களைப் புகழ்ந்து பாதுகாக்கின்றோம். சித்தர்களின் கொள்கைனயயும், சித்தாந்தங்களையும் பரப்ப வகை செய்கிறோம். எனினும் நம்முடைய தனிக் கலைக்கு அடிப்படையாக அமைந்துள்ள இயற்கைச்சூழலையும், அங்கு தோன்றி வளர்ந்த உயிரினங்களையும் நாம் புரத்தற்கு ஆவன செய்வதில்லை. இக்குரங்கினத்தையும், பிற அரிய விலங்கினங்களையும் புரத்தற்கெனத் தனி முயற்சிகள் மேற்கொண்டு அழிவினின்று காப்போம்!

# அறிவுச்சுடர்

உலகத்திலேயே மிகச் சிறிய நாடு வாடிகன் நகரமாகும். இதன் பரப்பளவு 4 சதுர கிலோ மீட்டர். போப்பாண்டவர் வசிக்கும் இந்த நகரத்தின் மொத்த மக்கள் தொகை ஆயிரம் பேர் மட்டுமே.

இன்று உலகிலுள்ள மொத்த சுயேச்சை நாடுகள் 161. மேலும் 62 நாடுகள் பிற நாடுகளின் ஆளுகையின் கீழ் உள்ளன. 26 நாடுகளில் கடற்கரையே கிடையாது!

உலகத்தின் மக்கள் தொகை ஒவ்வொரு வாரமும் 15 இலட்சம் பேர் வீதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

உலகத்திலேயே மக்கள்தொகை நெருக்கம் அதிகமான நாடு மோனாகோ. ஐரோப்பாவிலுள்ள இந்த நாட்டில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 16,938 மக்கள் வீதம் வசிக்கின்றனர்.

உலகத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமான நாடு பிரான்ஸ். இங்கு நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

உலகத்திலேயே மிக உயரமான கம்பம், போலந்திலுள்ள வார்சாவா வானொலிக் கம்பமாகும். எஃகினாலான இந்தக் கம்பம் 2,120 அடி உயரமானது!

பாம்புகளுக்குக் காதுகள் கேட்பதில்லை. பாம்பாட்டியின் அசைவுகளுக்கு ஏற்பவே பாம்புகள் ஆடுகின்றன. ஆனால் தரையில் ஏற்படும் அதிர்வுகளின் மூலம் சுற்றிலும் நடப்பதைப் பாம்புகள் உணர்ந்து கொள்ள முடியும்!

உலகத்திலேயே மிக அதிகமாகப் பூக்கள் விளையும் நாடு நெதர்லாந்து. இங்கு ஆண்டு தோறும் 270 கோடி மலர்கள் பறிக்கப்பட்டுவிற்கப்படுகின்றன.

உலகத்திலேயே மக்கள் தொகை அதிகமான நகரம் மெக்சிகோ சிட்டி. இங்கு 1 கோடியே 20 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

உலகத்திலேயே அதிகமான ஆகாய விமானங்களைக்கொண்ட போக்குவரத்து நிறுவனம் ரஷ்யாவிலுள்ள ஏரோபிளாட் என்ற நிறுவனமாகும். இதனிடம் 1300 விமானங்கள் உள்ளன!

—நன்றி: பூக்கூடை



## நேரத்துடன் பள்ளி செல்வேன்!

காலம் அறிந்தே உணவுண்ணும்
கடமை போலத் தினந்தோறும்
காலம் சிறிதும் தவறாமல்
கல்விச் சாலை சென்றிடுவேன்!

கல்வி அமுதம் தரும்பள்ளி
கடவுள் வாழும் கோயிலடா!
சொல்லிக் கொடுக்கும் ஆசானே
தூய கடவுள் ஆவாராம்!

பள்ளிக் கூட மணியடிக்கும்
முன்னே நானும் உடையணிவேன்
நல்ல புத்தகப் பைதூக்கி
நாளும் செல்வேன் பள்ளிக்கே!

அண்ணன் தம்பி அக்காளும்
அருமை யான தங்கையுமே
கண்ணைப் போலக் காலத்தைக்
கருத்தாய்ப் போற்றி வாழ்ந்திடுவோம்!

நேரம் தவறிப் பள்ளிக்கு
நீயும் நானும் சென்றாலே
யாரும் மதிக்க மாட்டார்கள்
இதனை உணர்வாய் எக்காளும்!

—தணிகை உலகநாதன்

## தெரிந்து கொண்டால் நல்லது...!



# புலி

**பு**லி காட்டு விலங்குகளுள் கடுமையானது. ஆற்றலிலும், அச்சமூட்டுவதிலும் புலியைப் போன்ற விலங்கு சிங்கம் ஒன்று தான்.

விலங்குகளுள் மிகப் பெரிய தான யானையைக்கூட அஞ்சச் செய்யும் புலி, பூனை இனத்தைச் சேர்ந்தது.

புலி வலிய உடல் உடையது. அதன் முன்னங் கால்களில் கூரிய நகங்கள் ஐந்தும், பின்னங்கால்களில் நான்கும் உள்ளன. கண்கள் கொள்ளிக் கட்டையைப் போன்ற ஒளி பெற்றவை. அதனால் புலி இரவிலும் எதையும் தெளிவாகப் பார்க்கும். புலியின் உடலில் சிறிது கரிய அல்லது முற்றிலும் கருமையான குறுக்குப் பட்டைகள் அழகான காட்சி தரும்.

இந்தியாவில் ரேவா என்னும் இடத்தில் வெண்ணிறமுடைய புலிகள் உள்ளன. அந்த வெள்ளைப் புலியே. புலி வகைகளுள் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

புலி கிழக்காசியாவிலேதான் வாழ்கிறது. புலியின் தாயகம் வடக்கு இரஷ்யா என்றும், அங்கிருந்து அது கிழக்கு நோக்கி மஞ்சூரியா, கொரியா, சீனா, பர்மா, தாய்லாந்து, வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்று தங்கியது என்றும் பொதுவாகக் கருதுகின்றனர். புலி பர்மாவிலிருந்து இந்தியாவில் நுழைந்து, இமயம் முதல் குமரி வரை உள்ள பல்வேறு மாநிலங்களில் பரவி வாழ்ந்து வருகிறது.

புலி பெரும்பாலும் தன் இருப்பிடத்தை விட்டுப் பகலில் வெளியே வராது; கதிரவன் மறைந்த பிறகே வெளியில்வரும். குளிர்ச்சி நிறைந்து, மேகம் கனிந்து, மழை பொழிகின்ற காலத்தில் பகலிலும் புலி வெளியே வரும்.

புலி இரவில் வேட்டையாடும். தனித்து வேட்டையாடும் இயல்புடையது; தன் இரையைத் தொடர்ந்து, அதை நன்கு நெருங்கிய பிறகே பாய்ந்து, அதன் கழுத்தின் பின்புறத்தையோ, தொண்டையையோ முதலில் தாக்கும்.

புலி எல்லா விலங்குகளையும் தின்னும்; கோழி முதலிய பறவைகளையும் நீரில் வாழும் மீன்களையும் தின்னும். புலி தானே கொன்ற விலங்கை மட்டுமே சாப்பிடும் என்னும் கருத்து தவறானது. இறந்து கிடக்கும் விலங்கையும் அது தின்னும். பெண் யானை, யானைக் கன்று, காட்டு எருமை, காட்டுப் பன்றி, மான், கரடி ஆகியவை அதற்கு விருப்பமான இரைகளாகும்.

மனிதனை எப்போதேனும் ருசி பார்க்க நேரிட்டால், புலி மனிதனைத் தின்னும்விலங்காக மாறி விடுகிறது; அப்போது ஆடு மாடுகளைத் தாக்காமல் அவற்றை மேய்ப்பவனையேதேடி அடித்துத் தின்னும்

ஆண் புலியின் நீளத்தைவிடப் பெண் புலியின் நீளம் குறைவு.

புலி நீரில் நன்கு நீந்தும். 'புலிக்கு மரம் ஏறத் தெரியாது,' என்னும் கருத்தும் தவறானது. புலிக்கு மரம் ஏறவும் தெரியும். ஆபத்துக் காலத்தில் அது மரத்தில் தாவி ஏறிக் கொள்ளும். காட்டில் வெள்ளம் ஏற்படும் போது புலி மரத்தில் தாவி ஏறித் தன்னைக் காத்துக் கொள்ளும். புலிகளை வேட்டையாடுவதையும், தோலுக்காகப் புலிகளைக் கொல்வதையும் தடுக்கத் தீவிர நடவடிக்கைகள் இப்போது நாடெங்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அறிவியல் உண்மைகள்

☐ "ஹைட்ரஜன்" என்ற சொல் 'நினைவுண்டாக்கும் வாயு' என்ற கிரேக்க சொல்லிலிருந்து பிறந்தது. இந்த சொல்லை உருவாக்கியவர் லவாய்சியேர் என்ற விஞ்ஞானி ஆவார்.

☐ "நியான்" என்ற சொல் 'புதிய' என்ற பொருள் கொண்ட கிரேக்க சொல்லிலிருந்து பிறந்தது. இப்பெயர் ராம்ஸே என்ற விஞ்ஞானியின் 12 வயது மகனால் தேர்ந்தெடுக்கப்பட்டது.


☐ வைரம் மிகுதியாக உள்ள சுரங்கங்களில் கூட 60 டன் பாறைகளில் இருந்து 1 அவுன்ஸ் எடையுள்ள வைரம் தான் கிடைக்கும்.

☐ ஆடைகள் நீர்புகாத் தன்மையை பெறும் பொருட்டு ஸ்காட்லாந்து நாட்டினரான சார்லீஸ் மாக்கின்டாஷ் என்பவர்முதன் முதலாக ரப்பரை துணிகளின் மீது பரப்பினார். இவரது பெயரால் தான் மழைக்கோட்டு இவரது நினைவாக 'மாக்கின்டாஷ் கோட்டு' என்று அழைக்கப்படுகிறது.

☐ ரோமானியர்களின் ஆட்சி காலத்தில் தான் பித்தளை முதன் முதலில் புழக்கத்திற்கு வந்தது.

—திருப்பூர் மோகன்

நன்றி: 'விஞ்ஞானச் சுடர்'



# மேகம் நல்ல மேகம்!

**மாணவர் பக்கம்** தயாரிப்பு : 'கிரிஜா'

தொழிற்சாலைகளிலிருந்து காற்றில் கலக்கும் நச்சுப் பொருள்களை அகற்றுவதற்கு மேகங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகள் பற்றி சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

1980-ல் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகள் நடந்தபொழுது, மாஸ்கோ மீது குவிந்த மேகங்கள் செயற்கைமுறையில் கலைக்கப்பட்டு அங்கு வானிலை இனிமையாக இருக்க வகை செய்யப்பட்டது.

இப்பொழுது காற்றைச் சுத்தப்படுத்த மேகங்களைப் பயன்படுத்தும் முறையில் இந்த விஞ்ஞானிகள் கவனம் செலுத்துகின்றனர்.

தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் நச்சுப் பொருள்கள் காற்றில் கலப்பது உலகெங்கிலும் பரவியுள்ள ஒரு பிரச்சனையாகும். நச்சுப் பொருள்கள் வட துருவப் பகுதியில் வாயுமண்டலத்தில் கலப்பதாக வைத்துக் கொண்டால் 3 அல்லது 4 மாதத்தில் அது தென் துருவப் பகுதிக்கு வந்து விடுகிறது.

சோவியத் நாட்டில் காற்று அதிகச் சுத்தமாக இருக்கிறது. இந்நாட்டின் மேற்கு எல்லைக்கு அப்பாலுள்ள நாடுகளின் தொழிற்சாலைகளிலிருந்து பெரும் அளவில் வெளிப்படும் கந்தகம, மற்றும் நைட்ரஜன் கலந்த வாயுக்கள் காற்றில் கலந்து சோவியத் நாட்டுக்கு வந்து விடுகின்றனவாம். இவற்றை மேகங்கள் உறிஞ்சும் வகையில் அவற்றைத் திசை திருப்பக்கூடிய ஒரு சாதனத்தை உருவாக்க இந்த விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். இவ்விதம் மேகங்களை 'வாயு மண்டல வடிகட்டி'களாகப் பயன்படுத்த முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

# வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா அபார வெற்றி பெற்று வரலாறு படைத்துள்ளது. மேற்கு இந்தியத் தீவுகள் அணியை 43 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா தோற்கடித்து உலகக் கோப்பையை வென்றது.

புருடென்ஷியல் உலகக் கோப்பைப் போட்டியில் 2 முறை சாம்பியன் பட்டத்தை வென்ற மேற்கு இந்திய அணியை, இந்தியா திணறடித்துத் தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

முதலில் பேட் செய்த இந்திய வீரர்கள் 55-வது ஓவரில 183 ரன்கள் எடுத்தனர். இந்த ரன்களை மேற்கு இந்தியத் தீவுகள் எளிதில் எடுத்து வெற்றி பெற்று விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்திய வீரர்கள் அபாரமாகப் பந்து வீசி 140 ரன்களுக்கு 52-வது ஓவரில் சுருட்டி வீசினார்கள். மதன்லால், அமர்நாத் இருவரும் தலா 3 விக்கெட்டுகளையும் சந்து 2 விக்கெட்களையும், கபில்தேவ், பின்னி தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இந்திய வீரர்களின் பந்து வீச்சும், ''பீல்டிங்''கும் வர்ணிக்க முடியாத அளவுக்கு இருந்தன. உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு வந்து புருடென்ஷியல் கோப்பையை வென்றிருப்பது இதுவே முதல் முறையாகும். 1975,79-ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பையை வென்ற மேற்கு இந்திய அணியிடமிருந்து, இந்தி அணி இப்போது இக்கோப்பையை வென்று வரலாறு படைத்திருக்கிறது. இந்தப் போட்டியில் சிறந்த வீரராக மொகிந்தர் அமர்நாத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணிக்கு 30 ஆயிரம் டாலரும் (1 டாலர் என்பது சுமார் 10 ரூபாய்) இரண்டாவது இடம் பெற்ற மேற்கிந்திய அணிக்கு 15 ஆயிரம் டாலரும் கிடைக்கிறது.

உலகக் கிரிக்கெட் கோப்பை இறுதியில் இந்தியா படைத்த வரலாற்றுப் புகழ் வெற்றிக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜைல்சிங் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார். கபில்தேவுக்கு அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச் செய்தியில், ''உலகக் கோப்பையில் வெற்றி பெற்றதற்கு உங்கள் அணிக்குப்பாராட்டுகள். உங்கள் வெற்றி குறித்துப் பெருமைப்படுகிறோம்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இந்தியாவால் முடியும் என்பதுதான் நான் எது பற்றியும் எப்போதும் கூறிவரும் முழக்கமாகும். அதனை நீங்களும் நிரூபித்து விட்டீர்கள். உங்களுக்கு என் நன்றி'' என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்திய கிரிக்கெட் அணியைப் பாராட்டி இருக்கிறார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் வெற்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பின்வருமாறு பாராட்டி இருக்கிறார்:

தமிழக மக்களின் சார்பிலும் அமைச்சரவையின் சார்பிலும், என் சார்பிலும் கபில்தேவுக்கும் அவரது குழுவினருக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றியானது இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரின் வெற்றியாகவும் கருதப்படும் என்பதில் ஐயமில்லை. இந்திய அணி மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகள்''.



வருமான வரி
செலுத்துவோருக்கு
ஓர் நற்செய்தி!
ஒரே கல்லில்
மூன்று மாங்காய்கள்
வீழ்த்த வேண்டுமா?
எப்படி?
தேசீய சேமிப்புப் பத்திரம்
6-வது வெளியீட்டில்
முதலீடு செய்தால்
மூவகைப் பலனைப்
பெறலாம்.
6 ஆண்டுகளில் நீங்கள் செய்யும் முதலீடு இரட்டிப்பு ஆகிறது. ரூ 100-00 முதலீடு செய்தால் 6-வது ஆண்டு இறுதியில் ரூ 201-50 ஐப் பெறலாம்.
இப்பத்திரத்தில் முதலீடு செய்யும் தொகைக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்தச்சலுகை இதற்கு முன்பு கிடையாது. இப்போது புதிதாக வருமான வரி விதிகள் 80 (சி) படி இதில் செய்யும் முதலீட்டையும் சேர்த்துக் கொள்ளலாம்.
இப்பத்திரத்தில் முதலீடு செய்யும் தொகைக்குக் கிடைக்கும் வட்டிக்கு ரூ 7000/- வரை வருமான வரி விதி 80 (எல்) படி விலக்கும் பெறலாம்.
மூவகைப் பலனைத் தருவது ஆறாண்டு தேசீயச் சேமிப்புப் பத்திரம் ஒன்றே. பத்திரங்கள் எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கும். அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள். முந்துங்கள்! முந்துங்கள்! இன்றே முந்துங்கள்!
மேலும் விபரங்களுக்கு
சிறு சேமிப்பு இயக்குநர்
143, அண்ணா சாலை
சென்னை 600 002 அல்லது
உங்கள் அருகாமையிலுள்ள
அஞ்சல் அலுவலகம்.
OIPR/309/85-EP.





# ஆடுகள் வளர்ப்பும் பொருளாதாரமும்

டாக்டர்
செ.அ. கோபாலகிருஷ்ணன்
டாக்டர்
கே.கே. கிருஷ்ணமூர்த்தி
வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
மதுரை.

ஆடுகள் வளர்ப்பு கிராமங்களில் வசிக்கும் சிறு நில, குறுநில விவசாயிகள் மட்டுமின்றி நிலமற்ற விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவுகின்றது. கிராமங்களில் குறிப்பாக விவசாயிகள் 10 முதல் 100 ஆடுகள் கொண்ட மந்தைகளைப் பேணிக்காத்து வருவதன் நோக்கம் தங்கள் நிலங்களுக்கு வேண்டிய உரத் தேவையை ஓரளவு பூர்த்திசெய்வது மட்டுமின்றி, மழைபெய்யாத காரணத்தினால் விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில், இருக்கும் ஆடுகளைச் சந்தையில் விற்றுத் தங்கள் அன்றாடத் தேவைகளுக்கான செலவுகளுக்குச் சரிக்கட்டி வாழ்க்கையை நடத்துவார்கள். இதனால் ஆடுகளைக் கிராமப்புறங்களில் 'செல்லமாக' அடமானம் மீட்கும் அமைப்புக்கள்'' (Mortgage Lifters) என்று கூறுவது வழக்கம். செம்மறி ஆடுகள் கம்பளி ரோமம், தோல், இறைச்சிக்காகவும், வெள்ளாடுகள் பால், தோல், இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுவது அனைவரும் அறிந்ததே. வெள்ளாடுகள் பாலை அளித்து வளர்க்கும் விவசாயியின் தேவையைப் பூர்த்தி செய்வதால் வெள்ளாடுகளை ''ஏழையின் பசு'' ( Poor Man's cow ) என்று கூறுவது வழக்கம்.

செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வளர்ப்பு கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படச் செய்யவும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களில் ( Integrated Rural Development ) முக்கிய அங்கம் வகிக்கிறது. ஊனமுற்றோர், வயதானவர்கள், சிறுவர்கள், கடின உழைப்புக்கு லாயக்கற்றவர்களுக்கு ஆடு வளர்ப்பு முழுத்தொழிலாகவும் அல்லது உபதொழிலாகவும் அமைந்து சமூகத்தில் அவர்களும் மேம்பட உதவுகிறது. ஆடுகளின் இறைச்சிக்கும் தோலுக்கும் நல்ல விலை கிடைப்பதால் ஆடுகள் வளர்ப்பு கிராமங்களில், வசிப்பவர்களின் பொருளாதாரத்தைச் சற்று உயர்த்த உதவுவதுமட்டுமின்றி, ஆடு வளர்ப்பவர்கள் குடும்பத்தினருக்குப்பால், இறைச்சியும் கிடைப்பதால் மாமிசப் புரதச்சத்து பற்றாக்குறையை ஓரளவு தவிர்த்து அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் நல்ல நிலையில் வைத்துக் கொள்ள உதவுகிறது.

ஆடு வளர்ப்பு மற்ற கால்நடை வளர்ப்பினைப்போல் நிலம், கட்டடம் சாதனங்களுக்கு ஆகும் செலவு மிகவும் குறைவேயாகும். ஆடுகளைக்கிடைபோட்டு கிராமங்களில் நிலங்களின் நடுவே வைத்து விடுவதால் நிலத்தின் வளம் ஆடுகளின் சாணம், மூத்திரம் மூலம் பாதுகாக்கப்படுகிறது. மேலும் ஆட்டின் எருவை மாட்டின் எருவுடன் ஒப்பிட்டு நோக்கினால் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆட்டின் எருவில் மாட்டின் எருவைக்காட்டிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஒரு ஆட்டின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 600 முதல் 700 கிலோ வரையில் எரு கிடைக்கும்.

செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை நம் தமிழ்நாட்டில் 5.4 மில்லியன்களாகும். ஏறத்தாழ இந்திய நாட்டின் ஆட்டு எண்ணிக்கையில் 12 சதம் நம் தமிழ்நாட்டில் காணப்படுகிறது. தற்சமயமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகள் 15 ஆண்டுகளிலிருந்த ஆடுகளின் எண்ணிக்கைவிடக் குறைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணத்தை ஆராய்ந்தால் மேய்ச்சல் நிலங்கள் நாளடைவில் துரிதமாகக் குறைவது, கடும் தொத்து வியாதிகளான வெக்கை, ஆட்டு அம்மை மற்றும் வயிற்றில் உண்டாகும் புழுக்கள், வெளிப்புற ஒட்டுண்ணிகளால் ஏற்படும் வியாதிகள் மூலமாக ஆடுகளின் இறப்பு வருடாவருடம் ஏற்படுவது முக்கிய காரணங்களாகும். மேலும் ஆடுகளின் உற்பத்திக்கான வழிமுறைகளைச் செய்யாமல் தொடர்ந்து அதிக எண்ணிக்கையான ஆடுகளை இறைச்சிக்காகக் கொல்லுதல் ஆடுகளின்எண்ணிக்கையில் நாளடைவில் குறைவு ஏற்படக் காரணமாகிறது. செம்மறி ஆடுகள் ஒரு ஈற்றில் ஒரு குட்டியை ஈனுவதால் செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க முடியவில்லை. ஆனால் வெள்ளாடு ஒரு ஈற்றிற்கு இரண்டு மூன்று குட்டிகளை ஈனுவதால் கட்டுப்பாடின்றி வெள்ளாடுகளை இறைச்சிக்காகக் கொன்று குவித்தாலும் வெள்ளாடுகளின் எண்ணிக்கை ஓரளவு அதிகரித்து வரு

வதைக் குறிப்பாக இந்தியாவின் மொத்த வெள்ளாடுகள் எண்ணிக்கை 70 மில்லியனாகவும், செம்மறியாடுகள் எண்ணிக்கை70 மில்லியனாகவும், செம்மறியாடுகளின் எண்ணிக்கை 40 மில்லியனைத் தாண்டாமல் கடந்த 15 ஆண்டுகளாக ஒரே நிலையில் இருப்பதை அறியக்கூடும்

சுமார் பத்து சத ஆடுகளிலிருந்து நம் நாட்டில் கம்பளம் தயாரிக்கப்படுகிறது. நீலகிரி இன ஆடுகள் மூலம் நேர்த்தியான கம்பளம் கிடைக்கிறது. கோயம்புத்தூர் ஆடுகளின் ரோமங்கள் பெரும்பாலும் நேர்த்தியற்ற, தரம் குறைந்த கம்பளங்களைத் தயாரிக்க உதவுகின்றன.

நம் நாட்டில் தொடர்ந்து வறட்சி நிலையிலிருக்கும், 3600 கிராமங்கள் அடங்கிய திருநெல்வேலி, திருச்சி, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, சேலம், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தருமபுரி, கோயம்புத்தூர் பகுதிகளில்தான் அதிக எண்ணிக்கையான ஆடுகள் இருக்கின்றன. தொடர்ந்து வறட்சி மிகுந்த இடங்களில் ( **Drought Prone Area**) வாழும் ஆடு வளர்க்கும் விவசாயிகள் முன்னேற்றமடைய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கியும், ஆடுகளின் தரத்தை உயர்த்த அயல்நாட்டு உயர் இன ஆடுகளின் மூலம் இனச்சேர்க்கை செய்யும், கலப்பின ஆடுகளுக்குமேய்ச்சல் வசதி, உட்புற, வெளிப்புற ஒட்டுண்ணிகள் கடும் தொத்து வியாதிகளிலிருந்து காப்பாற்ற வைத்திய வசதிகள் அளித்தல் திட்டத்தின் குறிக்கோளாகும்.

மேலும், ஆடு வளர்க்கும் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களான ஆடுகள், தோல், கம்பளம் ஆகியவைகளுக்கு நல்ல விற்பனை விலைகள் கூட்டுறவு விற்பனைக் கூடங்கள் மூலமாகக் கிடைக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆடுகளிலிருந்து கிடைக்கும் பொருட்களான தோல், கம்பளம் ஆகியவற்றை, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள கிராம வளர்ச்சித் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி மூலப் பொருட்களிலிருந்து கம்பளி, நூல் நன்கு பதனிடப்பட்ட தோல் உள் நாட்டுத் தேவைகளுக்கும், அயல்நாட்டுக்கு ஏற்றுமதிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆடுவளர்க்கும் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படச் செய்தால், நம் கிராமங்களில் வறுமைக் கோட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள்முன்னேற்றமடைய வழி ஏற்படும்.

செம்மறி ஆடுகள் வளர்ப்பின் பொருளாதாரத்தை ஆராய்ந்து பார்ப்போமானால் 25 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும்கொண்ட மந்தையின் செலவு, வருவாயைத் தெரிந்து கொள்வோம். 25 பெட்டை ஆடு 1 கிடாவின் விலை சேர்ந்து 4000 ரூபாய் ஆகிறது. ஆடுகளுக்கான ஒரு சாதாரண கச்சாப்பட்டி அமைக்கும் செலவு 350 ரூபாய். ஆடுகளுக்கு வேண்டிய சாதனங்கள் மருந்துக்கு 150 ரூபாய் தேவைப்படும். மொத்த செலவு 4500 ரூபாய். சிறு நில விவசாயிகளுக்கு 25 சதம் கடனளிப்புத் திட்டத்தின் கீழ் அளித்தால் கொடுக்க வேண்டிய கடன் ரூ. 3375. இந்தக் கடனை ஆடு வளர்க்கும் விவசாயிகள், முதல் 15 மாத முடிவில் 875 ரூபாயும், 23 மாத முடிவில் 1250 ரூபாயும், 31 மாத முடிவில் 1250 ரூபாயும் திருப்பிக்கொடுத்து கடனை அடைக்கிறார்கள். 25 பெட்டை ஆடு, ஒரு கிடா மந்தை வைத்



திருக்கும் விவசாயிக்கு ஆண்டுக்கு குறைந்தது 25 ஆட்டுக்குட்டிகளாவது, இறப்பு போக நிற்கும். 25 ஆட்டுக் குட்டிகள் விற்பனை கம்பளம், ஆட்டு எரு மூலமாகக் கிடைக்கும் வருமானம் மாதத்திற்கு 90 ரூபாய் வீதம் முதல் 15 மாதத்திற்கும், அடுத்த எட்டு மாதத்திற்கு மாதம் 150ரூபாய் வீதமும் அதற்கடுத்த எட்டு மாதத்திற்கு மாதம் 165 ரூபாய் வீதமும் கிடைக்குமென்று கணக்கிடப்படுகிறது.

வெள்ளாடுகள்பால், இறைச்சி, தோல் அளிப்பதன் மூலம் வளர்ப்பவர்களின் பொருளாதாரத்தை உயர்த்த உதவுகின்றன. வெள்ளாடுகள் 14 மாதத்திற்குள் இருமுறை குட்டிகளைத் தருவதுடன் எட்டு ஆண்டுகளில் குறைந்தது ஏழு பெண் குட்டிகளை ஈனுவது பசு மாடு, எருமைகளால் இத்தனைப் பெண் கன்றுகளை அவைகளுடைய வாழ்நாளில் பெற்றுத் தர இயலாது.

குறிப்பாக, வெள்ளாடுகள் நல்ல பராமரிப்பின் மூலமும், அயல்நாட்டுப் பால் அளிக்கவல்ல வெள்ளாட்டு இனங்களான சானன் ( **Saanen** ) கிடாக்களைக் கொண்டு நம்நாட்டு ஆடுகளின் தரத்தை உயர்த்தினால், பால் பற்றாக்குறையை முக்கியமாக கிராமங்களில் வாழும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, கிராமங்களில் பரவலாக நிலவியிருக்கும் புரதப் பற்றாக்குறையினை ஓரளவு வெள்ளாட்டுப்பால், இறைச்சி உற்பத்தியின் மூலம் தவிர்க்கக் கூடும்.

கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் வருவாயில் குறைந்தது 40 சதம் வெள்ளாடுகளை உபதொழிலாக வளர்ப்பதன் மூலம் கிடைக்கிறது என்று தெரிய வருகிறது. மேலும் வெள்ளாடு வளர்ப்பதினை முழு தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு முக்கிய வருவாய் வெள்ளாடுகள் மூலம் கிடைப்பதுமின்றி, செம்மறி ஆடு, மாடு, எருமை வளர்ப்பவர்களைக் காட்டிலும் வெள்ளாடு வளர்ப்பவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது என்று கணக்கிடப்படுகிறது.

வெள்ளாடு வளர்ப்பதனால் ஏற்படும் பொருளாதாரத்தை ஆராய்வோம். 25 பெண் ஆடுகள் ஒரு ஆண் ஆடு கொண்ட மந்தைக்கு ஆடுகளுக்கு மட்டும் 8000 ரூபாய் ஆகிறது. ஆடுகளுக்கு, குட்டி ஆடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவல்ல கச்சா வீடு, சாதனங்கள், மருந்துச் செலவு 2000 ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 25 பெண் ஆடுகள் ஒரு ஆண் ஆடு கொண்ட மந்தையின் மொத்தச் செலவு ரூ. 10,000 ஆகும்.

ஆடு வளர்ப்பவர்கள் ஆட்டு மந்தைக்காக ஆரம்பச் செலவு 10,000 ரூபாய் மற்றும் வட்டி அன்றாடச் செலவுக்கான கடனை ஐந்து வருடத்தில் திருப்பி அடைத்து விடுகிறார்கள்.

முதல் ஆண்டில் 2735 ரூபாயும், இரண்டாம் ஆண்டில் 2470 ரூபாயும், மூன்றாம் ஆண்டில் 2215 ரூபாயும், நான்காம் ஆண்டில் 1960 ரூபாயும், ஐந்தாம் ஆண்டில் 1730 ரூபாயுமாக மொத்தக் கடனையும் திருப்பி அளித்து விடுகிறார்கள். 25 பெட்டை ஆடுகள் ஒரு ஆண் ஆடு கொண்ட வெள்ளாடு மந்தையை வளர்ப்பதன் மூலம், முதல் ஆண்டில் மாதத்திற்கு 504 ரூபாயும், இரண்டாம் ஆண்டில் மாதத்திற்கு 526 ரூபாயும், மூன்றாம் ஆண்டில் மாதத்திற்கு 547 ரூபாயும், நான்காம் ஆண்டில் மாதத்திற்கு 568 ரூபாயும், ஐந்தாம் ஆண்டில் மாதத்திற்கு 588 ரூபாயும் கிடைக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கிராமங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் குறிப்பாக வறுமைக்கோட்டிலிருக்கும் மக்கள் ஆடுகள் வளர்ப்பதன் மூலம் அவர்களுடைய வருவாய், ஆரோக்கிய நிலையை உயர்த்த வழிவகுக்க முடியும்.

# திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி



எஸ்.டி.காசிராஜன்
ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
சுற்றுலாத்துறை.

"இந்திய நாட்டின் வரலாறு, கங்கைக் கரையிலிருந்து அல்லாமல் காவிரிக் கரையிலிருந்து தொடங்கப்பட வேண்டும். அப்போதுதான் அது உண்மை வரலாறாக அமையும்'' என்றார் வரலாற்றுப் பேராசிரியர் வின்சென்ட் ஸ்மித். ஒரு நாட்டின் வரலாற்றை உள்ளபடி அறிந்து கொள்வதற்கு வரலாற்றுத் தொடக்கமும் பழம் நாகரிகமும் சிறப்பும் மலிந்த பகுதியிலிருந்து அமைதல் சிறப்புடையதென்று கருதல் போன்றே, பெருமக்கள் சிலரின் வாழ்வும் தொண்டும் உரிய வகையில் மாட்சிமைப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய பெருமக்களின் வாழ்க்கை நெறிகள், அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டிகளாய்த் திகழ்கின்றன. எனவேதான், காலத்தை வென்று நின்றிடும் கருத்துக் கருவூலங்களை, அறிவுப் பெட்டகங்களை அளித்துப் போந்த பெருந்தகைகளின் ஆக்கமும் செயல்திறனும் உலகினரால் உயர்ந்தேத்தப்படுகின்றன.

அலெக்ஸாண்டரின்வீரம், நெப்போலியனின் தீரம், சேரன் செங்குட்டுவனின் ஆற்றல், அண்ணல் காந்தியடிகளின் தியாகம், கம்பரின் கவித்திறம், அரிஸ்டாட்டலின் அறிவுத்திறன் - என்றும் போற்றுதற்குரியன. இத்தகைய செயல் திறத்தைப் பாராட்டுவது போன்றே, ஒரு சில பெரியோர்களின் வாழ்க்கை நெறிகளும் மக்களின் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுவிடுகின்றன. அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை நெறியும் தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனாரின்வாழ்க்கை நெறியும், கொள்கை அடிப்படையில் அமைந்தவை. தனி மனிதர்களின் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த சீரிய சிந்தனைத் தெளிவில் மலர்ந்த கொள்கை நிலைகள், வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் பரவி, மனித சமுதாயம் ஆராய்ந்து அறியத்தக்கவைகளாய் அமைந்துவிட்டன.

திரு.வி.க.வின் வாழ்வு, அறவழியில் நின்றது; அன்பு ஆட்சி செலுத்தியது; எளிமையும் தூய்மையும் இணைந்து ஏற்றம் கண்டது. வாழ்க்கை என்பது பற்றியும் வாழ்க்கையின் வெற்றி, தோல்வி பற்றியும் பலர் பலவாறு கருத்துக் கொள்கின்றனர். திரு. வி.க. உண்மையான வாழ்க்கையின் குறிக்கோள் பற்றித் தெளிவுபடுத்துகின்றார்.

''வாழ்க்கையில்வெற்றியும்பேசப்படுகிறது. தோல்வியும் பேசப்படுகிறது. வெற்றி வாழ்க்கை எது? தோல்வி வாழ்க்கை எது? பதவி, பொருள் முதலியவற்றில் படிப்படியே இவர்ந்தோர் வாழ்க்கை வெற்றியுடையதென்றும் மற்றவர் வாழ்க்கை தோல்வியுடையதென்றும் பொதுவாகக் கருதப்படுகின்றன. வாழ்க்கையின் வெற்றி, பதவி, பொருள் முதலியவற்றில் விளைவது உண்மையாயின், என்னுடைய வாழ்க்கை முழுத் தோல்வியுடையதென்று தயங்காது சொல்வேன். வாழ்க்கையில் வெற்றி என்பதும் தோல்வி என்பதும் எனக்கு வேறு விதமாகத் தோன்றுகின்றன. எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து, எவ்வுயிரும் பொதுவெனும் தெளிவு தோன்றித் தம் உயிரே பிற உயிரும் என்னும் உணர்வு பொங்கித் தொண்டு செய்யும் அன்புச் செல்வமாகிய அந்தண்மை அமைகிறதோ, அவர் வாழ்க்கை வெற்றியுடையதென்றும் மற்றவர் வாழ்க்கை தோல்வியுடையதென்றும் எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவம் முதலியன எனக்கு உணர்த்துகின்றன''.

வாழ்க்கையின் வெற்றி, பொருளீட்டி வாழ்க்கை நலன்களைப் பெருக்கிக்கொள்வதில்நிலைபெறவில்லையென்பதும் தொண்டு வாழ்க்கை மேற்கொண்டு அந்தண்மை செறிந்த வகையில் பிறருக்காக வாழ்வதிலேயே உள்ளதென்பதும் தெளிவுபடுத்தியதுடன் வாழ்ந்தும் காட்டிய பெருமையுடையவர், திரு.வி.க.

தொண்டு வாழ்க்கையிலும் சிறந்த ஒன்று உலகில் உள்ளதா என்று வினவுகிறார். ''தொண்டே எனது வாழ்க்கை. எனது செல்வம்; எனது ஆருயிர்; எனது சமயம்; எல்லாம்; எல்லாம். விளைவு என்ன ஆயினும் ஆக. என் கடன் பணி செய்து கிடப்பதே''. என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு அளித்தவர் திரு.வி.க. பிறப்பு வேண்டும்; அதுவும் அப்பிறப்பு பயன் கருதாத தொண்டிற்குப் பயன்படுதல் வேண்டும். சாதி, மதம், மொழி, நிறம், நாடு முதலியவற்றைக் கடந்து நிற்கும் பொதுமை அறத்திற்குரிய சன்மார்க்கத் தொண்டுசெய்து பயன்படவேண்டும். இத்தகைய தன்னலம் கருதாத தொண்டு வாழ்க்கையையே வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டு ஒழுகிய சீலர் திரு. வி.க.

திரு.வி.க. பொறுமையில் உறைந்து உறைந்து நின்றமையால் அவரது உள்ளம் சாந்தமாகியது. அவரது நெஞ்சம் தமிழில் ஊறி ஊறி வீரம் செறிந்ததாயிற்று.

திரு.வி.க.வின் வாழ்க்கைநெறி,

பிறப்புவழி உயர்வு தாழ்வு கருதும் பேதமையை வெறுத்தது; மக்களுடன் தீண்டாமை கொண்டொழுகும் சாதிவெறி பிடித்த மக்களைச் சாடியது; பெண்ணை அடிமைப்படுத்தும் இழிதன்மையை முற்றும் விலக்கியது.

தமிழ் மக்களின் துயரைக் கண்டு மனம் வாடியவர். திரு. வி.க. தமிழர்களின் உயர்விற்கும் பல்லாற்றானும் உழைத்திட்டார். தொழிலாளர்களின் துயர் துடைப்பதற்கு வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்டார்.

வாடிய பயிரைக்
கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினா
லிளைத்தே
வீடுதோ றும்சென்
றிரந்து பசியறாத
வெற்றரைக் கண்டுளம்
பதைத்தேன்

என்று மனம் வருந்திய சமரசம் கண்ட வள்ளலாரின் துன்பத்தை போன்றே, தொழிலாளர் துன்பங்களைக் கண்டு உளம் வருந்தினார். அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அயராது உழைத்திட்டார். 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் நேசித்த' பொதுமைப் பண்பாளர் திரு.வி.க.

தமிழ்த்தென்றல் தொல்லைகளிடையே ஆறுதல் அடையும் மருந்தாகக் கொள்கிறார், தமிழ்மொழியை! "தொல்லைநோய்க்கு மருந்துண்டோ? எனக்கொரு மருந்து துணைசெய்து வருகிறது. அஃதென்ன? அஃது எனது தாய்மொழி. அமிழ்தினும் இனிய தாய்மொழி. தொல்காப்பியனார், நக்கீரனார், நல்லந்துவனார், திருவள்ளுவனார், இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர், மாணிக்கவாசகனார், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார் முதலிய தமிழ் மருத்துவர் யான் நூலெழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கின்றனர். அவர் முன்னே தொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?".

தொல்லைதரு நிலைகள், திரு.வி.க. வை அணுகினால் அந்நோய்களுக்கு மருந்தளிக்கத் தமிழ்ச்சுவையை நாடினார். தமிழின் இனிமையை, தமிழின் உயர்வைஉன்னி உன்னி உள்ளம் மகிழ்ந்தார். பிணி தீர்க்கும் மாமருந்தாய்த் தமிழ்ச் சான்றோர்களின் அழியாப் புகழ் செறிந்த நூல்களைக் கருதினார்.

திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி, அவர் சார்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சிறு வேறுபாடுகள் காரணமாகப் பொது நிலையான நாட்டுப்பற்றைக் கைவிடும் தன்மையைப் பெரிதும் சாடியதுடன் அத்தகைய சாதி, சமயப் பூசல்களைக் கைவிட்டுக் காலும் விட்டு தமிழ் உணர்வும் நாட்டுப்பற்றும் கொள்ளத் தூண்டியதாகும். சாதி வேற்றுமையைக் கடலில் அழுத்திவிட்டு எல்லோரும் இந்நாட்டு மக்கள், இந்தியர் என்ற உணர்ச்சியை வளர்த்திடப் பணியாற்றினார். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் முறையைக் கற்றுக்கொண்டு பொதுமைமுயற்சியில் வெற்றி பெறக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தினார். காந்தியடிகளின் சிறந்தகுணங்கள் யாவினும் தலைசிறந்தது விட்டுக்கொடுக்கும் குணமே என்பதைச் சுட்டிக்காட்டி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒற்றுமையை நாட்ட வேண்டுமென்றார். தமிழ்நாட்டின் ஒற்றுமைக்குக் கருவியொன்று உண்டென்றால் அது தமிழ்மொழிதான் என்று வலியுறுத்தினார். அனைவரும் தமிழர்கள் என்ற உணர்ச்சி பெறுவதுடன் தமிழ்மொழியை அண்ணல் காந்தியடிகளும் போற்றியுள்ளார் என்றும் சிறையிலிருக்கும் போது ஒரு மாதம் தமிழ் பயின்றவர் காந்தியடிகள் என்றும் பெருமையடைகின்றார் திரு.வி.க.



பொது வாழ்வில் ஈடுபட்டுப் பொதுத்தொண்டே மூச்சாகக் கருதி உழைத்த திரு.வி.க., வாழ்வில் அன்பையும் அறத்தையும் கவசங்களாகக் கொண்டார்.

"தீங்கெண்ணாதே தீங்கெண்
ணாதே
தீமையைத் தீமையால்
தீர்க்க எண்ணாதே
தீமையை அன்பால் தீர்க்க
விரைக,
பகைவர் தூற்றலைப் பற்றி
வேகாதே

## பொன் மொழிகள்

"பெண்மையினின்று தாய்மையும், தாய்மையினின்றும் இனிமையும் மலர்கின்றன."

"அன்புக்கு உறையுள் பெண்மை. தனித்த ஆண்மையில் அன்பு சுவராது."

"கலப்புமணம் இயற்கையின்பாற்பட்டது. அது பலதிற வேற்றுமைகளைக் களைய வல்லது.

"தாய்மொழிவழிக் கல்வி பயில்வது இயற்கைக்கு அரண் செய்வதாகும். நாட்டுக்கலைகள் நாட்டின் உயிர். இதனை அழியுமாறு இடந்தரும் நாடு இயற்கை இன்பம் நுகர்தல் அரிது."

—திரு.வி.க.

பகைமை இருளில்
அன்பொளி ஏற்றுக'
(''புதுமைவேட்டல்)''

திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி இதுவாகும். பகைமை இருளில் அன்பு எனும் ஒளியை ஏற்றினால், பகைமை நீங்குவதுடன் மனித சமுதாய வளர்ச்சியும் நிகழும் என்ற தத்துவம் கொண்டவர் .திரு.வி.க. 'புதுமை வேட்டலில்' அழகுற மொழிந்த திரு.வி.க.வின் வாழ்க்கை நெறியினை, இன்றைய தமிழ் மாணாக்கர்கள் உன்னி உணர்ந்திட்டு, வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

''பிறர்க்கென வாழ்பிறவிப்
பேறுடைமை வாழ்க்கை;
அறத்து மயமாம்; அடை'',

என்று இயம்பும் திரு.வி.க.,அற வாழ்க்கையை அறிவுறுத்துகின்றார். 'இருளில் ஒளி' என்ற நூலில்

''உற்றுழி என்பும் உதவும்
உளமுடைய
நற்றவ வாழ்க்கையை நாடு.''

என்று அறிவுறுத்தி,

''அன்பிலார் எல்லாம்
தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''

என்ற குறட்பாவின் வாழ்க்கை நெறியினை வலியுறுத்துகின்றார் திரு.வி.க.

சிறு குடிலில் பிறந்து, செல்வ வளமை குன்றிய குடும்பச் சூழலில் வளர்ந்த திரு.வி.க., வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகளைப் பெற்றால் போதுமென்ற கருத்துடையவர். பொருள் வளமை கொழிக்கும் வாழ்வை விரும்பினாரில்லை; அது போன்றே வறுமை வாட்டும் வாழ்வை வெறுத்தார். அளவிற்கு அதிகமான செல்வம் ஒருபக்கம் குவிந்திருப்பதும் மறுபுறம் வறுமையே வாழ்வாகக் கொள்வதும் தவறு என்றார். இத்தகைய நிலையில் ஏழை, எளிய மக்களிடம் ஒழுக்கம், வேதாந்தம் பேசுவதும், பயனில்லாத ஒன்றாகக் கருதினார். பொருளாதாரச் வளர்ச்சி எய்தினால் அன்றி, சமுதாய முன்னேற்றம் என்பது வெறும் கூப்பாடாக முடியுமெனச் செப்பினார். கொள்ளையும் கொல்லலும் பொய்மையும் சமுதாயத்தில் காணக்கிடப்பதைக் கண்டு பொங்கினால் மட்டும் போதாது; அவற்றுக்கான மூலகாரணத்தைத் தெளிவாக உணர்ந்து அதைக் களைய முற்பட வேண்டுமென்பதும் பின்னர் சீலம் தழைக்கும், அருளறம் ஒழுக்கம் செழிக்கும் என்பதும் திரு.வி.க., கண்ட வாழ்க்கை நெறியாம். செல்வச் செருக்கு, ஒழுக்கம் கெடுக்கும்; செல்வமற்ற வறுமையும் ஒழுக்கம் கெடுக்கும் என்பதைப் பல்வாறு இடித்துரைத்த பெருமகனார், திரு.வி.க. ஆகவேதான்,

வறுமையும் அற்ற, வளமும் மிகைப்படாத வாழ்க்கைவேண்டுமென்று விழைகின்றார்;

''வறுமை செல்வம்
இரண்டும் அற்ற
வாழ்க்கை தேவை;
'வாழ்த்துக அதனை!''

என்றுரைக்கின்றார்,

தொழிலாளர் இயக்கத்தில் பங்குகொண்டு கதவடைப்பு, வேலை நிறுத்தம் முதலிய செயல்களில் ஈடுபட்டபோதிலும் புரட்சிச் செய்கை அறவழியில் அமைந்திடல் வேண்டும் என்ற அசையாக் கொள்கை உடையவர். தான் நடத்திய தொழிற்சங்க நடவடிக்கைகள் அனைத்திலும் இந்த அறவழியைக் கடைப்பிடித்தே வந்ததுடன், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் வன்முறையில் சிறிதும் தலைப்படாதவாறு வழிநடத்திச் சென்றார்.

''அறிவுப் புரட்சி
அறவழிச் செய்க
தரும நெறியே
கருமம் ஆற்றுக
வாணிப வாழ்க்கையின்
கோணல் நீங்கும்
பொருந்திய போக்கில்
திருந்தும் உலகம்
நல்ல வாழ்க்கையை
நல்கல் உறுதி''.

அறவழி பொருந்திய வாழ்க்கை நல்வாழ்வை நல்கிடுவது உறுதி.



தமிழ்க் கலை யெல்லாம் வீரம், காதல். இவை யிரண்டும் இல் லாதது கலை யன்று. இரண்டும் தேவை. இரண்டும் வேறுபட்டனவல்ல.

என்றுரைத்த கொள்கைக் கோமான் வாழ்வின் குறிக்கோள் எதுவாக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகிறார்;

''அருளறம் பொலியும்
அந்நல் வாழ்க்கையில்
அருளற வாழ்க்கையில்
பொருளறம் பூக்கும்
சாந்தம் சிந்தை ஏந்திநிற்கும்
தேவை அளவில் மேவும்
நெஞ்சம்
எந்த உயிரையும் சொந்த
உயிராய்க்
கருதும் வாழ்க்கை பெருகும்
பெருகும்;
இதுவே வாழ்க்கைக்
குறிக்கோள் இதுவே!

''நல்லநல்ல எண்ணங்கள்
நல்லுலகைத் தோற்றுவிக்
கும்
அல்லன் வேறாம் அறி.''

''ஒருவனது தீமை
உறுமளவில் நில்லா;
பெருகி உலகரிக்கும் பேய்'',

''தேவைக்கு மேல் நினையாச்
சித்தம் செகமானால்
யாவும் ஒழுங்குபடும் அன்று''

நல்ல எண்ணங்கள் மலரும் சோலையாக உள்ளப் பூங்கா அமைய வேண்டுமென்பதையும் தேவைகளைப் பெருக்கிக் கொள்ளாத மனநிறைவான வாழ்வு மேற்கொள்ளும் நெஞ்சுறுதிபெற்றிட வேண்டுமென்பதையும் வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தார், திரு.வி.க.

''புரட்சியிலே புதுஉலகப்
புரட்சியிலே புகுமின்
புரட்சியிலே பொரொழிக்கும்
புரட்சியிலே புகுமின்
புரட்சியிலே புரட்சிஅறப்
புரட்சியிலே புகுமின்
புனிதப்புது உலகமைக்கும்
புரட்சியிலே புகுமின்

போர் ஒழிக்கும் அமைதிப் புரட்சியை நாடி, நாட்டின் நலன் காத்திடுமாறு அழைக்கிறார், திரு வி.க.

புரட்சியெனில் எரிமலையென்று கருதும் உலகில், புரட்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழ வேண்டுமென்கிறார். ''கொலைப் புரட்சி, அலைப் புரட்சி, கொதிப் புரட்சி வேண்டாம்; குத்துவெட்டு கொள்ளை ரத்தக் கொடும் புரட்சி வேண்டாம்; புலப்புரட்சி, அகப் புரட்சி, புதுப் புரட்சி வேண்டும்; பொதுமை அறப் புரட்சி எங்கும் புகுந்திடுதல் வேண்டும்''. புரட்சி என்ற சொல்லை வைத்து,சமுதாயத்தில் மலர்ந்திட விழையும் மாசறு அறத்தை வலியுறுத்திகின்றார் திரு.வி.க.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ,உரிமை வேட்கை முகிழ்த்து, இந்தியாவெங்கணும் பெருந்தலைவர்கள் தியாக வேள்வியில் குதித்திருந்த நேரத்தில்- தமிழகத்தில்அரசியல்,சமுதாயம், தொழிலாளர் இயக்கம் ஆகிய துறைகளில் இரண்டறக் கலந்து துறவற வாழ்க்கை மேற்கொண்டிருந்த தமிழ் முனிவர்திரு.வி.க., வாழ்க்கையில் அறம் பிறழாது, ஒழுக்கம் தவறாது நற்பண்புகளை ஓம்பிப் போற்றி வந்தார். அவர் ஒரு தனி மனிதராக இயங்காது, அவரே ஒரு நிறுவனமாக இயங்கி வந்ததுடன், நாற்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தின் வரலாற்றில் நிலைத்துவிட்ட அரும்பெரும் செயல்களில் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் அனைத்துத் தலைவர்களும் அவரைப் போற்றினர். இந்திய நாட்டின் வரலாற்றில் இடம் பெற்ற சுதந்தரத் தலைவர்கள் அனைவருடனும் பழகிய பெருமையும், கொண்ட கொள்கை வழிநின்று இறுதிவரை போராடிய திறனும் அவருக்குண்டு. பொதுப் பணிகளில் பல சமயங்களில் புயலாகக் காட்சி தந்த இத்தமிழ் ஆசானின் வாழ்க்கை, அன்பும் அருளும் பண்பும் பாசமும் மிக்க உயரிய தத்துவநிலையில் அமைந்திட்டதாகும். பிறரிடம் உதவியை எதிர்பார்த்து வாழாத அச்சமற்ற உள்ள உரம் பெற்றிருந்தார். அன்பில் தோயும் சிந்தையுடையவர்; அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் அடிபணியாத திட்பம் உடையவர். எளிமையில் திளைத்தார்; செல்வத்தின் செழுமையை வெறுத்தார்.

''உரிமை என் பிறவியின் இயல்பு. உரிமை எனது பிறவிக் கூறாதலின் அது என்னை அடிமைக் குழியில் வீழாதவாறு காத்தே வருகிறது. அடக்கம் எனது உடைமை. அடிமை எனது பகைமை. உடன் பிறந்தவரிடத்தும் நான் அடிமையாயிருக்க ஒருப்படேன். அவர்க்கு உயிரையும் நல்கும் அன்பார்ந்த தொண்டாற்றுவதில் எனக்கு ஆர்வம் உண்டு''.



உரிமை வேட்கைமிக்க அவரது வாழ்வில் பெரிதும் கவர்ந்த தொழிலாளர் இயக்கத்தை நடாத்திய போதும் தன்னலம் கருதாத் தொண்டே மேலோங்கி நின்றது அண்ணல் காந்தியடிகளின் அற. வாழ்வைப் பேணி, அனைத்துக் கட்சியினரின் போற்றுதலையும் பெற்றுப் பொது மனிதராகத் திகழ்ந்தவர். தொழிலாளர்கள் மட்டுமன்றிப் பல திறத்து மக்களையும் ஒன்றுபடுத்த உழைத்திட்ட ஏற்றம் பெற்றவராக விளங்கியவர். சமயப் பொதுமை காண விழைந்த இராமலிங்க அடிகள் போல் சமயங்கள் பலவற்றிலும் காணக்கிட்டும் அடிப்படை அறம் ஒன்றனைக் கண்ட சன்மார்க்க நெறியைப் பரப்பிட்ட பண்பாளராகமிளிர்ந்தவர். எக்காலத்திற்கும் பொருந்தும் அறிவுரைகளை வகுத்துத்தந்த வள்ளுவரைப் போல், உலகம் உய்யத்தக்க வாழ்க்கை நெறிகளை வாழ்ந்துகாட்டி மெய்ப்பித்த பெருமைமிக்கவராக இருந்தவர்.

சொல்லும் செயலும் ஒன்றிக் குறிக்கோளுடன் வாழ்ந்து ,வாழ்வைச் செம்மையுறச் செலவிட்ட செம்மல், இளைஞர்களுக்கு ஒப்பற்ற அறிவுரை நல்கிச் சென்றார். ''தொண்டு ஆற்றுக. உடலையும் போற்றுக ''என்றார். பகலிரவு பாராது உழைத்தமையால் கண்பார்வை இழந்த கொடுமைக்கு ஆளான திரு.வி.க., உடலை ஓம்பவேண்டிய இன்றியமையாத் தன்மையை இளைஞர்கட்கு வலியுறுத்தியுள்ளார். ஒரு சமுதாயத்தின் எதிர்கால ஏற்றம் இளைஞர்கள் வசம் உள்ளதென்ற கருத்தைக் கொண்டிருந்த திரு.வி.க. ,மாணாக்கர்களிடம் அளவிடமுடியாத அன்பும் பற்றும் பாசமும் வைத்திருந்தார். அவர்களுக்குத் தாய்மொழிப் பற்று மிகுந்திடவும் சீரிய வாழ்க்கை முறைகள் அமைந்திடவும் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

திரு.வி.க. கண்ட வாழ்க்கை நெறி அண்ணல் காந்தியடிகளின் அறவாழ்க்கையின் அடிப்படையில் அமைந்தது; ஆன்றோரும் சான்றோரும் சொல்லிப் போந்த அறிவுரைகளின் சாரத்தின்செயல் வடிவமாகத் திகழ்ந்தது. தமிழ் முனிவர் கண்ட வாழ்க்கை நெறியின் குறிக்கோளை அவரே கூறுகின்றார்; கேண்மின்!

''அருகன் அருளறம்
பொருளறம் வேண்டும்
ஆக்கத் தொழிலில்
ஊக்கம் வேண்டும்
இறப்பையும் பிறப்பையும்
மறத்தல் வேண்டும்
ஈரம் சுரக்கும்
வீரம் வேண்டும்
உலகொரு குலமெனும்
உணர்வு வேண்டும்
ஊனக் கொலை புலை
உறங்கல் வேண்டும்
என்றும்பணிநினைந்
தியற்றல் வேண்டும்
ஏசு பொறுமையில்
நேசம் வேண்டும்
ஐயம் அறியா
ஆட்சி வேண்டும்
ஒப்புரவுலகம்
உயர்தல்வேண்டும்
ஓதாதுணர்த்தும்
ஓவியம் வேண்டும்
ஔவை உலவும்
அகிலம் வேண்டும்.
(''பொருளும் அறமும்'')

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் வாழ்க்கை நெறி, உலகளாவிய மனித சமய நெறியாகும். உலகம்அன்பில் தழைத்து உலக மக்கள் ஒரு குலமாக வாழ்ந்து உயர வேண்டும் என்னும் இமயம் போன்ற கொள்கை நெறியாகும்.

''வாழ்க உலகம் அன்பினிலே
வளர்க என்றும் இன்பினிலே''

தமிழ் முனிவரின் இத்தகைய உலகாய வாழ்க்கை நெறி வையத்தில் தழைத்திடுக! மனித இனம் ஏற்றமுறுக!

நன்றி:

**சென்னை வானொலி நிலையம்.**



# திரு.வி.க.வும் பெண்ணுரிமையும்

பேராசிரியர்
பு.பா. இராஜ இராஜேஸ்வரி

"உலகமே துயரமாக இருந்தது. பூந்தோட்டம் குரூரமாகத் தோன்றிற்று. மனிதனோ துறவியாகப் பெருமூச்சு விட்டான். பெண் புன்முறுவல் செய்யும் வரை'' என்று கூறுகிறான் காம்பெல் என்ற அறிஞன். இதையே வேறுவிதமாகச் சொல்கிறான் ஜாக்சன். ''சுவர்க்கத்தில் என் மனைவியைச் சந்திக்காவிட்டால் சுவர்க்கம் எனக்குச் சுவர்க்கமாய் இராது'' என்று கூறும் அவனது கருத்து பெண்மையின் உயர்வுக்கு அணி திரட்டுகின்றது.

இதற்குக் காரணங்களாக அமையும்கருத்துக்களும் சிறப்புடையன. ''துயரங்களிலே அமிழ்ந்து கிடக்கும் ஆணின் மனம் ஒரு பெண்ணைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி விடுகிறது'' என்று 'கேய்' என்ற அறிஞன் கூறுகிறான். ''ஆண் மகனுடைய உயர்ந்த அம்சங்களை எல்லாம் தட்டி எழுப்பவும் அவைகளைக் கவரக்கூடிய ஆற்றல் வாய்ந்தவள் உண்மையான பெண் என்று பெண்மைக்கு இலக்கணம் வகுக்கிறார் தத்துவஞானிடால்ஸ்டாய். ''ஒரு மனைவியினுடைய அன்பான பார்வையிலே பசுமையான தோட்டங்களைப் பார்க்கலாம். அவளுடைய தூய்மையான உள்ளத்திலே ஞான நூல்களை எல்லாம் காணலாம்'' என்று சிந்தனையாளன் 'கௌவி' பெண்மையைப் பாராட்டுகிறார்.

நம் நாட்டுக் கவிஞர் தாகூரும், ''பெண்கள் இயல்பிலேயே இனிமை நிரம்பியவர்கள். இந்தச் சிறப்பினால்தான் இல்வாழ்க்கை பயனடைகிறது'' பெண்ணின் இனிமையை இனிமையாகக்கூறுகிறார். பெண்ணை ''ஆணின் மேம்பாதியாகக்'' குறிப்பார் காந்தியடிகளார். பாரதியும்

''பெண்மை வாழ்கென்று கூத்
திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு
வோமடா''

என்று களி கொண்டாடுகிறார். அவர்வழி வந்த பாவேந்தர் பாரதிதாசனும், 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று பெண்மையின் சிறப்பைச் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார். ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல, மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று பெண் பிறவியின் உயர்வைச் சுட்டிக் காட்டுகிறார் கவிமணி அவர்கள். இவர்கள் வழி வந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களும் ''தன் மனைவியே தனக்குத் திருக்குறளாக விளங்கினாள்'' என்று பெண்மையின் புகழ் பாடுகிறார்.

இவ்வாறு பெண்மையைப் போற்றியவர்களில் திரு.வி.க. அவர்கள் தலையாய இடத்தைப் பெறுகிறார். அவர் நா பெண்மையின் சிறப்பையே வாழ்த்தியது. கைகள் பெண்மையின் இறைமையைப் பக்திப் பரவசத்தோடு வணங்கின; கண்கள் பெண்மையைத் தாய்மைக் கனிவோடு கண்டு களித்தன; தலையோ பெண்மையின் உருவிற்கு வணங்கியது; நெஞ்சமோ பெண்ணின் அடிமை நிலைகண்டு துடித்தது; மூளையோ பெண்மையின் சிறப்பை உயர்த்த வழி கண்டது.

''அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்பரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றே பெண்மை'' என்று பெண்மைக்கே அவர் இலக்கணம் வகுக்கிறார். ''நீல வானத்தில் திங்கள் போலவும், பசுங்கொடியில் மயில் போலவும், விலங்குகளில் மான்போலவும் பெண்மையின் அழகு உலகில் பொலிகிறது'' என்கிறார்.

உலகம் பெண்மக்களாலும் ஆண்மக்களாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. உயர்திணை, அஃறிணை என்னும் இரு உலகிலும் பெண்பால் ஆண்பால் உண்டு. பெண்ணின்றி ஆணுமில்லை, ஆணின்றி பெண்ணுமில்லை. ஓரினத்திற்கு மற்றோர் இனம் இன்றிமையாததாக இருக்கிறது. ஆனால் ஐந்தறிவுடைய உயிர்களில் காணப்படும் பெண்ணுரிமை ஆறறிவுடைய மக்களிடத்தில் இல்லை. புல், செடி, கொடி முதலிய தாவரங்களும், ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன முதலியனவும் தங்கள் பெண்ணினத்தைத் தாழ்வாகக் கருதாத போது, எல்லாப் பிறவிகளிலும் உயர்ந்தாகக் காணப்படுகின்ற மக்கட் பிறவியில் மட்டும் இவ்வுயர்வு தாழ்வுநிலை ஏற்படக் காரணம் என்ன என்று வேதனைப்படுகிறார் திரு.வி.க. அவர்கள் (தமிழ்ச்சோலை-பக்கம்.68).

நாட்டின் இப்போதைய சிறுமைக்கே காரணங்களாகத் திரு.வி.க. அவர்கள் பின்வருவன வற்றைக் கருதுவார்: (1) பெண்ணுரிமை கடிந்தது. (2) பிறப்பால் வகுப்பு வகுத்தது (3) மக்களுள் தீண்டாமை கொண்டது. இவற்றுள் பெண்ணுரிமை கடிந்ததையே தலையாய காரணமாக திரு.வி.க. அவர்கள் கருதுவது குறிப்பிடத்தகுந்தது. பெண்நாட்டின் ஒரு பாதியாதலின் அவள் உரிமை கெட்டால் நாடு எங்ஙனம் நல்வாழ்வு பெறுதல் கூடும்? மனிதனது ஒரு பாதி வாயுவால் இயக்கமின்றி வீழ்ந்தால் அவன் எதற்குப் பயன்படுவன்? பெண்ணுரிமை இல்லா நாடு பக்கவாயு உடையானை ஒத்தது என்று சொல்லத் தேவையில்லை என்று திரு.வி.க.அவர்கள் பெண்ணினை ஒரு நாட்டின் சரிபாதியாகக் குறிப்பிடுவது பெண்மையின் பெருமையைப் புலப்படுத்தும்.

''கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி
காட்சி கெடுத்திடலாமோ''

என்று பாரதியும் இக்கருத்தை இன்னொரு நிலையில் வலியுறுத்துகிறார். ஒரு கண் குத்தி அழிக்கப்படும் போது, இன்னொரு கண்ணும் தானே அழியும் என்ற கருத்தைப் பெற வைக்கிறார்.

பெண்கள் அடிமையானதற்கே காரணம் ஆண்கள்தான் என்பதைத் திரு.வி.க. அவர்கள் ஆணித்தரமாகக் கண்டிக்கிறார். தொடக்கக் காலத்தில் பெண்கள் ஆண்கள் பெற்றிருந்த அத்தனை உரிமைகளையும்பெற்றிருந்தனர். நாளடைவில் ஆண்மக்கள் தங்கள் நலங்கருதிப் பெண்மக்களுக்கு அறியாமை விலங்கிட்டுச் சிறைப்படுத்தினர் என்று ஆணுலகின் குறையைச் சுட்டிக் காட்டுகிறார். (தமிழ்ச்சோலை-பக்கம்.68) முதலாளிகள் தொழிலாளிகளை அடக்கி ஆள்வதுபோல் ஆண்மக்கள் பெண்மக்களை அடக்கி ஆள்கிறார்கள்.

பெண்ணடிமைக்கு இந்து மதமும் ஒரு காரணம் எனத் திரு.வி.க. அவர்கள் வலியுறுத்துகிறார். 'முருகன் அல்லது அழகு' என்னும் அரியதொரு நூலைப் படைத்த திரு.வி.க.வின் நடுவு நிலைமை நெஞ்சம் இந்துமதத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. ''பார்வதி பரமசிவன், இலட்சுமி நாராயணன், வள்ளிமணாளன், சீதாராமன், இராதாகிருஷ்ணன் என்று கடவுளை வாழ்த்தும் இந்து ஆண்மக்கள் தங்கள் பெண் மக்கலை ஏனோ படுகுழியில் தள்ளிப் பாழ்படுத்துகிறார்கள்'' (தமிழ்ச்சோலை-பக்கம்.69) என்று இந்து மதத்தின் தன்மையையும், இம்மதத்தின் பெயரால் இந்துக்கள் பெண்மக்களை ஆடுமாடுகளாக்கிய நிலையையும் அஞ்சாமையுடன் எடுத்துக்கூறுகிறார். ''தெய்வ வடிவாகவும் அன்புக்கு நிலைக்களனாகவும், கடவுளால் படைக்கப்பட்ட பெண்ணைக் கோயிலுக்கென உரிமைப்படுத்தி அவளை ஆடச் செய்தும் பாடச் செய்தும் காமுறுவதா கடவுள் வழிபாடு'' என்று பெண்ணை இழிவு செய்யும் இந்துமதத்தைப்பழிக்கிறார்.

ஆண் பெண்ணை வேலைக்காரியாக நினைக்கிறான், காமக்கிழத்தியாக நினைக்கிறான். சடப்பொருளாக நினைக்கிறான். பெண்களுக்குப் பிறந்தகத்தில் அண்ணன் தம்பியரால் சிறுமை; புகுந்த அகத்தில் புருஷனால் சிறுமை; பெண்மகள் படுந்துன்பம் கண்டுதான் பெண்ணாய்ப் பிறப்பதிலும் மண்ணாய்ப் பிறக்கலாம் என்னும் நோகு நிலை வந்தது'' என்று நெஞ்சம் வெந்து துடிக்கிறார் திரு.வி.க. அவர்கள். பெண் இனத்தைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆள்வதற்கு ஆண்கள் கையாண்ட தந்திரம் பெண் கல்வி மறுப்பாகும் என்று அடிப்படைக் காரணம் காட்டுகிறார். (தமிழ்ச்சோலை-பக்கம் 69)

பெண்ணடிமையின் ஒரு கூறு ஆண்களின் பரத்தமைக் குணம். ஆணுடல் தாங்கிய ஒரே காரணத்தால் ஒருவன் ஒருத்தியோடு வாழாது பல மகளிரொடு வாழ்கிறான். பெண்ணுடல் தாங்கிய ஒரே காரணத்தால் ஒருத்தி ஒருவனுடன் வாழ வேண்டிய நிலல இருக்கிறது. பெண்கற்பு மட்டுமே வற்புறுத்தப்படுகிறது. தன் தாய், தன் மனைவி, தன் மகள், தன் உடன்பிறந்தவள் கற்புடையவளாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் ஆடவர் சமுதாயம், மற்றப் பெண்களை மட்டும் பரத்தையராக, வேசையராகக் காமக் கண்ணோட்டத்தோடு நோக்கும் நிலை இன்றும் காணப்படுகிறது. இந்நிலையைத்திரு.வி.க. அவர்கள், ''சிற்சில இடங்களில் சட்டங்கள் செய்யச் சிலர் முயல்கிறார். சட்டம் செய்யும் ஆண்மகன் எவ்வளவு தூரம் அச்சட்டத்துக்குக் கட்டுப்படுகிறான் என்பது ஆராயற்பாற்று. ஒருபக்கம் பெண்ணுடன் விபசாரம்; மற்றொருபக்கம் விபசாரக் சட்டம்; இன்னொரு பக்கம் தண்டனை; இவைகளை ஆணினத்தார் கொடுமை எனக் கூறாது வேறென் கூறுவது?'' (தமிழ்ச்சோலை-பக்கம் 71) என்று ஆண்களின் நிலையைக் கூறுகிறார்.

வேசையர்கள் என்றே ஓரினம் ஆடவர்களால் படைக்கப்பட்டதை ஆசிரியர் வெறுத்துக் கூறுகின்றார். ''கடவுள் தொண்டுக்கென அர்ப்பணஞ் செய்யப்பட்ட பெண்ணன்பர்களைக் கெடுத்தது யார்? அக்கடவுளைப் பூசிக்கும் ஆண்மகன்; அக்கடவுள் அறம் வளர்க்கப் புகுந்த தர்மகர்த்தன்; அக்கடவுளை வழிபடச் செல்லும் அடியவன்; இவ்வாண்மக்கள் கொடுமையால் தேவடியார்களாக இருந்தவர்கள் வேசையர்களாக மாறிவிட்டார்கள்'' (தமிழ்ச்சோலை - பக்கம் 71) என்று பெண்கள் வேசையர்கள் ஆனதன் காரணத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆண்கள் சமுதாயம் பெண்களுக்கு இழைக்கும் கொடுமைகளில் ஒன்று கைம்மைக்கொடுமை. கைம் பெண்களின் நிலையை நினைக்கும்போது திரு.வி.க.வின் உள்ளம் நெக்குருகுகிறது; உள்ளம் குழைகிறது; ''இப்பாழும் நாட்டில் ஏன் பிறந்தோம் என்று நினைந்து, நினைந்து இரங்குதலும் நேர்கிறது.'' (பெண்ணின் பெருமை-291) என்று கைம்மை



**பம்மல் சம்பந்தனாருடன் திரு.வி.க.**

நிலையில் பெண்மைக்கு இழைக்கப்படும் அநீதிகண்டு இரங்குகிறது. திருமணம் செய்தும் கன்னி வாழ்வு நடாத்தும் பெண் தன் கணவனை இழக்கப் பெற்றால் மீண்டும் மணம் புரிந்து கொள்ளலாம் என்கிறார். நாயகனுடன் கூடிக் குலாவியபிறகு மறுமணம் தேவையில்லை. அவர்களுக்கு அறச்சாலை, கல்விச்சாலை, தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும் என்கிறார். பெண் விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று விதவைத் திருமணத்திற்கு வழிவகுக்கிறார்.

குழந்தை மணக் கொடுமையை எதிர்க்கும் திரு.வி.க. அவர்கள் குழந்தை மணத்திற்குத் துணை

யாக நிற்கும் இந்துமதத்தை, குழந்தைக் கைம்பெண்களைத் தோற்றுவிக்கும் இந்துமதத்தைக் கொலைமதம் என்று பழிக்கிறார் (பெண்ணின் பெருமை பக்கம் 299) அவர் மறுமணத்தையும் வற்புறுத்துகிறார் (பெண்ணின் பெருமை-பக்கம் 381).

சமூகச் சீர்திருத்தவாதியான திரு.வி.க. அவர்கள் காதல் திருமணம்தான் - கலப்புத் திருமணம் தான் சாதிமத வேற்றுமையைக் களைய உதவும். சமூகத்தைச் சீர்திருத்த உதவும்என்று நம்புகிறார் அதனால்தான் பகைவராயினும் காதலுக்காக முடியையே துறந்த வேல்ஸ் இளவரசரை "முடியா காதலா சீர்த்திருத்தமா'' என்ற தம் நூலில் வாழ்த்துகிறார். ''பண்டைக் காலத்தில் காதல் மணம் நிகழ்ந்து வந்தமையால் தீயொழுக்கமும் பெருகவில்லை; பெண்ணுலகுக்குஞ் சிறுமை நேரவில்லை. காதலின்பம் மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தி வந்தது'' என்று காதலுக்குப் பல்லாண்டு பாடுகிறார். (தமிழ்ச் சோலை-பக்கம் 109).

பெண்ணின் புகழ்பாடும்'பெண்ணின் பெருமை' என்னும் சீரிய நூலை திரு.வி.க.வைத் தவிர வேறு யாரும் இவ்வளவு சிறப்பாக எழுதியிருக்க முடியாது. ஆறே ஆண்டுகள் தன் இல்லத் துணைவி கமலா அம்மையாருடன் வாழ்ந்த இவர், மனைவி இறந்த பின்னும் மறுமணம் இல்லாமலே வாழ்நாளைக் கழித்த இவர் பெண்ணின் பெருமை உணர்ந்த அளவிற்கு, பெண்ணின் சிறப்பைப் போற்றிய அளவிற்கு வேறு யாரும் போற்றியிருக்க முடியாது. பெண்மையைத் தாய்மையாய் இறைமையாய்க் கண்டவர் அவர். பெண்மைக்கள் உள்ள நுட்பங்களையெல்லாம் இவ்வுலகம் உணர்ந்து போற்ற வேண்டும் என்பதே திரு.வி.க. வின் உட்கிடக்கையாகும்.

பெண்மையின் பெருமையையும் உரிமையையும் சீர்திருத்தச் செம்மல் தந்தை பெரியார் எடுத்துக் காட்டினார். தேசியக்கவி பாரதியார் தொடுத்துப் பாடினார்; தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டினார். ஆயினும் இம்மூவரும் கண்ட கனவு நனவானதா என்பது இன்றும் வினாக்குறியாகவே இருக்கிறது. பெண்ணின் திருமணத்தின்போது கேட்கப்படும் வரதட்சிணையும் அதை முற்றிலும் தராத நிலையில் அவளை எரிக்கும் கொடுமையும் இன்னும் உலகில் இருக்கிறது. வாய்ச்சொல்லில் வீரர்கள் பெண்ணின் உரிமையை வானளாவப் பேசுகின்றார்கள். ஆனால் ; வீட்டில் பெண்களை அடிமைகளாகவே நடத்துகின்றனர்.

பெண் முதுகெலும்பு இல்லாமலிருப்பதால்தான் இன்னமும் வெயிலில் எறிந்த புழுவாக இருக்கிறாள்; அவள் பேசா மடந்தையாக இருப்பதால்தான் வீசி எறிந்த பூமாலையாக இருக்கிறாள்; அவள் தன் உரிமையை இன்னும் கேட்காமல் இருப்பதால்தான் வாயிற்கடையில் கிடக்கும் மிதியடியாக இருக்கிறாள்; பெண் வீறு கொண்டு எழுந்தால் வீடு விளக்கமுறும், நாடு நலமடையும், உலகமும் உயர்வடையும்.

16-ஆம் பக்கத் தொடர்ச்சி

நாட்டை அலைக்கழித்து வரும் சாதி சமயப் பூசல்கள் அறவே ஒழிக்கப்பட வேண்டும்; தனியொருவர்க்கு ஒரு நீதி எனும் நிலை அகற்றப்பட வேண்டும்; எல்லார்க்கும் எல்லாமும் எனும் பொதுமை மலர வேண்டும் என்பதை

'சாதியெனும் தொழுநோயை ஒழித்தல் வேண்டும்
சமரசமே மண்ணினிடை நிலவல்வேண்டும்
நீதிநெறி யாவர்க்கும் ஒன்றே என்னும்
நிலைதழைக்கப் புரோகிதர்கள் மாய்தல் வேண்டும்'

எனத் திரு.வி.க. அழுத்தந் திருத்தமாக அறிவிக்கின்றார்.

தாழ்நிலை தகர்ந்து உயர்நிலை தானே உருவாகி விடாது. அதற்காகப் போராட வேண்டும். புரட்சி தோன்றவேண்டும். ஆனால் அந்தப் புரட்சி போரொழிந்த அறப்புரட்சியாக, அமைதிப் புரட்சியாக இருக்க வேண்டுமென்பது திரு.வி.க. விருப்பம்.

'புரட்சியிலே புது உலகப் புரட்சியிலே புகுமின்
புரட்சியிலேபோரொழிக்கும்புரட்சியிலே புகுமின்
புரட்சியிலே புரட்சிஅறப் புரட்சியிலே புகுமின்
புன்தப் புது உலகமைக்கும் புரட்சியிலே புகுமின்'

என்பது அவர்தம் புரட்சி வாக்கு. கார்ல் மார்க்சில் காந்தியத்தைப் பிணைத்துப் புரட்சி காண விரும்புகிறது திரு.வி.க. உள்ளம்.

**அடுத்த இதழில்**

**திரு.வி.க. அவர்களின் தமையனார் உலகநாதரின் பெண்மக்கள் 'தமிழரசு' இதழுக்கு அளித்த பேட்டி.**



உரைநடைக்குப் புத்துணர்ச்சியூட்டி மறுமலர்ச்சி கண்ட திரு.வி.க.வை அவர்தம் கவித்திறம் கொண்டு தலைசிறந்த கவிஞராகவும் நாம் கண்டு மகிழலாம்.

**திரு.வி.க.வின் கவிதை நூல்கள்**

- உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல் (1931)
- முருகன் அருள்வேட்டல் (1932)
- திருமால் அருள்வேட்டல் (1938)
- பொதுமை வேட்டல் (1942)
- புதுமை வேட்டல் (1945)
- கிறித்துவின் அருள்வேட்டல் (1945)
- சிவனருள் வேட்டல் (1947)
- கிறித்துமொழிக் குறள் (1948)
- இருளில் ஒளி (1950)
- இருமையும் ஒருமையும் (1950)
- அருகன் அருகே அல்லது விடுதலை வழி (1951)
- பொருளும் அருளும் அல்லது மார்க்கிஸ் காந்தி(1951)
- சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல் (1951)
- முதுமை உளறல் (1951)
- 'வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்

திரு.வி.க.வின் கவிதைகள் அனைத்தும் பொதுமை நாடும் புகழ்க் கவிதைகளாகப் புத்துலகம் காண விரும்பும் புரட்சிப் பூக்கள்!

# திரு.வி.க.பேசுகிறார்

பேச்சு ஒரு சிறந்த கலையாகும். இளைஞர் திறம்படப் பேசப் பழக வேண்டும். முன்னர், பேசப்போவதை எழுதிக் கொண்டு பின் பேசவேண்டும். பிறகு குறிப்பெழுதிக் கொண்டு பேசலாம். பழகிய பின், ஒருமுறை நினைத்துப் பார்த்துக்கொண்டு பேசலாம். தமிழ் மொழியில் அமைந்த கலை இனியது; உயர்ந்தது!

'விவாதக்கலை' வேண்டும். இன்று ரஷ்யா 'Diafectic Materialism' பேசுகின்றது. இது 3,000 ஆண்டுகட்கு முன்னரே காணப்பட்டது. விவாதக் கலையின் மூலமே அது படிப்படியாய் வளர்ந்து, இன்றையநிலையுற்றது. வாதப்போர் என்பது, அறிவுப்போர். அதிலேயே உண்மை காணமுடியும். விவாதம் செய்தல் ஓர் உண்மையான கலை, நிலையான கலை!



நீங்கள் பெரியவர்களானால் 'எப்படி வாழ்வது! (How to live) என்ற ஆங்கில நூலை அவசியம் படிக்கவேண்டும். நாகரிகத்துடன் நாம் அரிசிச் சோறு சாப்பிடுவதாகச் சொல்லப்படுகிறதே, அதில் நாகரிகமே இல்லை எனலாம். தவிட்டைப் போக்கி, வெண்ணிற அரிசியைச் ( Polished Rice ) சாப்பிடுகிறோம். தீட்டிய நல்ல வெள்ளைப் பச்சரிசியை உணவாக்கி, பூனை, நாயிடம் வைத்துப் பாருங்கள். மோப்பம் பிடித்துப்பார்த்து, அவை தொடவே தொடா. பூனையும், நாயும் தொடாத அரிசியைத் தான், இன்று நாம் உண்கிறோம்.

'சேந்தயிர் கண்டம் கண்டமாக' என்று கம்பன் சொல்லுகிறான். இப்போது பலர் தயிர் சாப்பிட்டால் அஜீரணம் வருகிறதென்று சொல்லுகின்றார்கள். அது தவறான கருத்து. எலும்புகளுக்கு நல்ல பலனைத் தருவது, தயிர் ஒன்றே.

கிரீஸ் நாடு ஓவியச் சிறப்போங்கியது. அதனினும் உயர்ந்தது தமிழ் ஓவியக்கலை; ஒப்புயர்வற்றது. தென்காசி, புதுக்கோட்டை, மாமல்லபுரம். இங்குள்ள ஓவியங்கள் இணையற்றவை.

ஜப்பானில் தமிழர் ஓவியம் கலந்துள்ளது. ஓவியத்தின் தாயகம் தமிழகமெனலாம்.

நம் நாடு வாழ விவாதம் வேண்டும். அன்று நாடு நன்றாக வளரும். பேச்சில் அழகும், திறமையும் பண்பும் அமைய வேண்டும். இவ்வகையில் பெண்மக்கள் பெரிதும் பங்கு கொள்ள வேண்டும். அப்போது தான் நம் நாடு நன்னிலையடையும்.

மன்று, மன்றமானது. மன்று என்பது, மரத்தடிக்குப் பெயர். பழைய சரித்திரத்திலே மன்று என்ற பொருளை அதிகமாகக் காணலாம். மன்று என்று நான் குறிப்பிடுகின்ற மரத்தடியிலே, முன்னர், தமிழ்மன்றம் கூடியது.

உலக வரலாற்றை நோக்கினால், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், பல பெரியோர்கள் தோற்றம் புலப்படும். அவருள் குறிக்கத்தக்கவர் மேடம் பிளாவட்ஸ்கி, டால்ஸ்டாய், காரல் மார்க்ஸ், ராஜாராம் மோகன்ராய், தயானந்தர், இராமகிருஷ்ணர் முதலியோர். இதேகாலத்தில் வாழ்ந்தவர் நம் இராமலிங்க அடிகளாகும்.

தமிழர் இயல்பு பாட்டுப் பாடுவது. தமிழர், கவிதையில் திளைத்தனர். வள்ளலார் திருவொற்றியூரிற் கண்ட காட்சியை அழகாக அமைக்கின்றார். அடியார் கூட்டத்தை வருணிக்கும் ஒரு வர்ணனை உய்த்து உணரற்பாலது. 'கவிதைபோல் சாந்தம்' என்று சொல்வது போதாதென்றெண்ணி 'தண்டமிழ்க் கவிதை போல் சாந்தம்' என்றார்.

நல்ல காற்றிலே உலவி, நல்ல தண்ணீரை அருந்தி, சூரியவெளிச்சம் நம் உடலில் நன்கு படியும்படி வாழ்வோமானால், எந்த நோயும் வராது.

தகவல் : கலவை பா. வரதன்

ஆதாரம்: தமிழ்க்கலை

தங்களுக்கென்று வாழாமல், நாட்டு மக்களுக்குகென்று வாழ்பவர்கள் சிலரேனும் இருப்பதால் தான் இந்த உலகம் வாழ்கிறது என்று புறநானூற்றுப்பாடல் ஒன்று சொல்லுகின்றது.

அந்தப்பாடல் இலக்கியத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்தான் தமிழ்த்தென்றல் திரு. வி.க. அவர்கள்!

திரு.வி.க. அவர்களால் தமிழ் வளர்ந்தது; தமிழினம் வளர்ந்தது; தமிழகம் வளர்ந்தது; இந்திய விடுதலை இயக்கம் வளர்ந்தது; உலகம் போற்றும் தமிழ்ப் பண்பாடு வளர்ந்தது.



டாலென்ன, ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது! திரு.வி.க. எனும் ஆறு ''வான்பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலை இய கடற் காவிரியாகத்'' தமிழ்ப்பண்பாட்டின் பயிர் வளர்த்தும் உயிர் வளர்த்தும் ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு தமிழ்த் தென்றலாக வீசிக் கொண்டிருக்கிறது; தமிழ்ச் சோலையாக நிலை பெற்று நலம் தந்துகொண்டிருக்கிறது.

திரு.வி.க. தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள அழியாத் தமிழ்ச் செல்வமாக அவர் தம் நூல்கள் ஐம்பத்தைந்துக்கும் மேலும் உள்ளன.

# திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு

டாக்டர். நா.பாண்டுரங்கன்

திரு.வி.க. எளியவாழ்வு வாழ்ந்தார்; தமிழுக்கோ பெருவாழ்வு தந்தார்; தமிழர்களுக்கோ புது வாழ்வு மலர உழைத்தார்!

நிலவு தன் இருளை நீக்க நினைப்பதில்லை; ஆனால் உலக இருளைப்போக்கவே உழைத்துக் கொண்டிருக்கிறது.

திரு.வி.க. அவர்கள் தமிழ் வானில் மலர்ந்த நிறை நிலவு; அதன் புகழ் குறையாதது; கரையாதது; மறையாதது; குறையில்லாதது!

பணிவாழ்வால் திரு.வி.க. நாடு போற்றும் பெருந்தலைவராக வாழ்ந்தார்; ஆனால் அவர் தனி வாழ்வோ உள்ளம் உருக்குவது. பொதுமைவேட்டல் எனும் அவர் நூலில் அவரே சொல்லுகிறார் அவர் தம் தனிவாழ்வு பற்றி:

செல்வமுமின்றிச்சீர்மனையின்
றிச்சிறக்கு நன்மக்களுமின்றிப்
பல்வளமின்றிப் பணித்தனை
வாழப்
பரமனே அதனுளங் காண
வல்லமையுண்டோ வாழ்க்கையை
வகுக்கும்
வள்ளல்நீ, அதன்படி ஒழுகிச்
செல்வதென் கடமை ....

அறநூல் மனிதன் தன்வாழ்வில் கைக்கொள்ள வேண்டிய அறம்பற்றி எடுத்துக் கூறுவது. ஆனால் அந்த அறநூலே ஒரு மனிதராக, மாமனிதராக உருவெடுத்ததுபோல் வாழ்ந்தவர் தாம் திரு.வி.க. அவர்கள்!

டாக்டர் மு.வ. அவர்களின் விளக்கம் இதற்குச் சான்று பகரும். ''திரு.வி.க.வின் தனி வாழ்க்கை திருக்குறளின் அறத்துப்பாலுக்கு ஒருவிளக்கம் எனலாம். அவ்வாழ்க்கையில் பாயிரம் உண்டு; இல்லறம் உண்டு; துறவறம் உண்டு; ஊழ்வலியும் உண்டு. திரு.வி.க. இல்லறத்தின் சிறப்பை உணர்ந்தவர்; துறவறத்தின் தூய்மையைப் பெற்றவர். அன்பு அருளாய்க் கனிந்த வாழ்வு அவர்தம் வாழ்வு!'' என்பார் டாக்டர் மு.வ. அவர்கள்.

திரு.வி.க.வின் வாழ்வு முழுவதும் தொண்டு வாழ்வாகவே தொடங்கித் தொண்டு வாழ்வாகவே நிறைவு பெற்று நிற்கிறது. அவர்தம் தொண்டுவாழ்வு நான்கு பெரும் தலைப்புகளில் அடங்கும். தமிழ்த்தொண்டு; தாய்நாட்டுத் தொண்டு; சமுதாயத் தொண்டு; தொழிலாளர் தொண்டு என்பவையே அவை!

திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு ஒரு தமிழ் மழை எனலாம்; புது மழை எனலாம்.

திரு.வி.க. எனும் அடைமழை நின்றுவிட்டது; மழை நின்று விட்

திரு.வி.க.வின் நூல்கள் தமிழ்ச் செல்வமாக உள்ளன. அவை தமிழ்ச்செல்வம் மட்டும் அல்ல; தமிழ்க் கழனி; தமிழ் மழை; தமிழ்க் கதிர்; தமிழ்க் கடல் எனலாம்!

திரு.வி.க.வின் நூல்கள் அவர் தம் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் கொண்டு நிற்பன. பேச்சு, உரை, உரை விளக்கம், பாடல், தனித்தலைப்பு நூல், கட்டுரைகள், நாளிதழ்க் கிழமை இதழ்க் கட்டுரைகள், பாடல்கள் இவை அவர் நூல்களாக உள்ளன.

திரு.வி.க.வின் காலத்தில் மேடைப்பேச்சில் ஆங்கிலம் அரசோச்சிக் கொண்டிருந்தது. ''எங்கும் தமிழ்'' ''எதிலும் தமிழ்'' என்ற இன்றையத் தமிழ் புரட்சிக்குத் தம் தமிழ் மேடைப் பேச்சால் அன்று வித்திட்ட தமிழ்ப் புரட்சியின் தலைநாயகர் திரு.வி.க. அவர்கள்!

மணித் தமிழ்ப் பேச்சால் மக்கள் உள்ளம் கவர்ந்த மாபெரும் பேச்சாளர் திரு.வி.க.

புலமைத் தமிழால் புத்துணர்வூட்டிப் புதுத் தமிழ் வளர்த்த மதுத் தமிழ்ப் பேச்சாளர் திரு. வி.க.!

தமிழ் முனிவரின் வாழ்வுத் தொண்டில், தமிழ்த் தொண்டு

பெற்ற இடம் பெரிது. அவர் காலத்து அறிஞர்கள் தலைவர்கள் வாய்மொழிகளே இதற்கு எடுத்துக்காட்டாய் அமையும்.

தந்தை பெரியார் அவர்கள் திரு.வி.க.வின் தமிழ்ப் பேச்சுப் பற்றிச் சொல்லும் மதிப்பீடு இது:

''திரு.வி.க.வின் பேச்சு மிகவும் சக்தி வாய்ந்தது. அந்தக் காலத்தில் அவர் பேசுகிறார் என்றால்தான் கூட்டம் வரும். நாடெங்கும் சுற்றிச்சுற்றிச் பிரச்சாரம் செய்தார். அந்தக் காலத்தில் தமிழில் பேசுவதற்கு ஆளே கிடையாது. திரு.வி.க. அவர்கள் தான் தமிழில் மிக அருமையாகப் பேசுவார். அவரை முன்மாதிரியாக வைத்து அவருடைய நடையில் பலர் பேச வேண்டும் என்கிற அளவுக்கு அவர் பேச்சால் மக்களுக்கு உணர்ச்சி உண்டாயிற்று!''

தேசபக்தி தெய்வ பக்திக்கு ஈடாகத் தமிழ்ப் பக்தி கொண்டவர் திரு.வி.க. என்பது பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கருத்து.

''திரு.வி.க. அவர்கள் சிறந்த தேசத் தலைவராகவும், தெய்வ பக்தராகவும், தமிழ்பக்தராகவும் சிறந்து விளங்கியவர்.

தமிழ்நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையாகவும், தாயாகவும் விளங்கியவர். காந்தியடிகளின் அகிம்சை, எளிமை, சத்தியம் ஆகியவைகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்'' என்று காமராசர் கூறியுள்ளார்.

'பண்டித மணி' கதிரேசனார் திரு.வி.க.வின் தொழிலாளர் உலகத் தொண்டு எவ்வாறு தமிழ்த் தொண்டாகவும் ஏற்றம் பெற்றது என்று கூறுகிறார் பாரீர்:

''திரு.வி.க. யாரோடும் இகலின்றி அன்போடு பழகும் குணமுடையவர். தம் கல்வியின் பயனாகத் தமிழ்நாட்டு ஏழைகளாகிய தொழிலாளர் நலங்களைப் பாதுகாப்பதில் இடையறாது உழைத்துவந்தார். அதனால் தமிழுலகம் எய்திய பயன்மிகவாகும். இந்த நூற்றாண்டில் பலவகையாலும் தமிழ்நாட்டிற்கு அருந்தொண்டு ஆற்றியவர்களுள் இவர் தலைசிறந்தவர் என்னலாம்''

'கதைமன்னர்' கல்கி அவர்கள் திரு.வி.க.வின் பண்புநலம் பற்றிப் படம்பிடிக்கிறார். அதில் திரு.வி.கவின் தமிழ்த் தொண்டே முதலில் அமைகிறது.

கல்கி கூறுவது இது:

## தீந்தமிழ்க் களஞ்சியம்

## திரு. வி. க.



பேரதிர்ச்சி அடைந்திட்டோம் கல்யாண
சுந்தரனின் பிரிவி னாலே
ஆரதிர்ச்சி அடையரதார்? அருந்தமிழே
உருவான அறிவு வள்ளால்!
காரதிர்ச்சி கொண்டுபெரு மழையென்னும்
கண்ணீரை நினது மேனி
ஊர்வலத்தில் பொழிந்ததொரு விந்தையினை
எண்ணிமனம் உருகி னோமே



காந்தீயம் மார்க்சீயம் இரண்டினையும்
தமிழ்த்தேனில் கலந்து தந்தோய்!
சாந்தியினைச் சமரசசன் மார்க்கத்தை
மக்களெலாம் தழுவ வேண்டிச்
சாந்துணையும் பணியாற்றிக் கட்சிமதத்
தடையெல்லாம் தகர்த்து நின்றோய்!
தீந்தமிழ்நற் களஞ்சியமே! திரு.வி.க.
நின்மறைவால் திகைக்கின் றோமே!

இலக்கியப்பூந் தென்றலினை எல்லார்க்கும்
ஈந்து தமிழ் இன்பம் கண்டோய்!
கலக்கமறத் தொழிலாளர் இயக்கத்தைப்
புயலாக்கிக் காத்த வீரா!
மலைக்காமல் தமிழ்உணர்ச்சி மருந்தூட்டி
மாசற்ற தமிழர் உள்ளம்
துலக்கினையே கல்யாண சுந்தர! நீ
மறைந்ததுயர் துடைப்பார் யாரே!



முருகனையே அழகாகக் கண்டதமிழ்
முனிவரனே! பெண்ணி னத்தின்
பெருமையினை மாந்தரின உரிமையினைப்
பேணும்எழில் நூல்க ளாக்கித்
தரமுயரும் தமிழ்நடையால் புதியதொரு
சகாப்தத்தைச் சமைத்த நின்றன்
கரமலரை எரியுண்ணக் கண்டந்தோ
கையற்றோம்! கலங்கி னோமே

(தினமணி, 20.9.1953)

**தணிகுர் புத்தனேரி சுப்பிரமணியம்**



**திரு. வி. க. ஆசிரியர் பணிபுரிந்த வெஸ்லி கல்லூரி**

''தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர் குலத்துக்கும் தந்தையாக இருந்தார்; தொழிலாளர் குலத்துக்குத் தாயாக' விளங்குகிறார். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய திறத்தினால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்தார். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற திருவாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார்; அன்பே சிவம் என்ற உண்மையில் வாழ்க்கையெல்லாம் திளைத்திருந்தார்!''

திரு.வி.க. அவர்களின் தமிழ் நடை தமிழ் உலகில் முதல் முதல் புகுந்த தனிநடை; கனிநடை; மணிநடை; பணிநடை; மக்கள் தொண்டுக்கோ உணர்வூட்டும், அறிவூட்டும் புதுப்படை!

ஆய்வியல் உரைத் தமிழ்ப் பேராசிரியர், உயர்தமிழ்ப் புலவர் அவ்வை துரைசாமி அவர்கள் திரு.வி.க.வின் தமிழ்நடை பற்றிக் கூறுவது இது:

''தமிழ் இலக்கிய உலகில் நம் திரு.வி.க. சிறுசிறு வாக்கியங்களால் திருந்திய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக எழுதும் புதுமுறை எழுத்து நடைகண்டவர். எழுத்து நடையில் திரு.வி.க. நடையென்ற ஒரு சிறப்பு நடையும் நிலவுகிறது. ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' பெண்ணின் பெருமை'' ''முருகன் அல்லது அழகு'' முதலிய நூல்கள் பயிலுந்தோறும் இன்பவொளி வீசி நிற்கின்றன.

கம்பரின் கவிதை நலனும், இளங்கோவின் கலை நலனும், வள்ளுவரின் பண்பு நலனும் அறிவு நலனும் ஒன்று கலந்து ஒருருவான சீர்சால் செந்தமிழ் நடையே திரு.வி.க.வின் தமிழ் நடையாகும்.

இவ்வகையில் திரு.வி.க.வை உரைநடைக் கம்பர்; உரைநடை இளங்கோ; உரைநடை வள்ளுவர் எனலாம்!

செந்தாமரையின் அழகும், செங்கரும்பின் சுவையும், செந்நெல்லின் பயனும் திரு.வி.க.வின் தீந்தமிழ் ஆகும்.

திரு.வி.க.வின் தமிழ்த்தொண்டு வியத்தகு ஆற்றல் விளைவிப்பது-ஓர் எடுத்துக்காட்டு. திரு.வி.க. அவர்கள் 1927 ஆம் ஆண்டு ''பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை'' எனும் நூல் எழுதி வெளியிட்டார்கள்.

1949 ஆண்டு அதன் ஏழாம் பதிப்பு வெளிவந்தது. அப்பெரு நூல் - திருநூல் ஆற்றிய தொண்டின் மதிப்பு அளவில் அடங்காதது.

''பெண்ணின் பெருமை'' பெண்ணுலகுக்கும் அதன் வழி மக்கள் உலகுக்கும் விளைவித்த நலன் வியப்புக்குரியது.

திரு.வி.க.அவர்கள் இந்நூற் பயனை இயம்புகின்றார்கள்:

''முதற்பதிப்பு வெளிவந்த போது தமிழ்நாட்டில் பெண்ணுலகின்நிலை எப்படி இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? இடையில் நேர்ந்த மாறுதல்கள் மகிழ்ச்சிக்குரியன.

''முதற்பதிப்புத் தலைகாட்டிய போது எதிர்ப்புப் பெரிதும் எழுந்தது; இப்பொழுது எதிர்ப்பு மறைந்துவிட்டதென்று கூறலாம். இந்நூல் வெளிவந்த பின்னைத் தென்னாட்டில் பெண்ணுரிமைக்கெனத் தோன்றிய இயக்கங்கள் பல; சங்கங்கள் பல; முயற்சிகள் பல; மேலும் கலப்பு மணங்களும், கைம்மையர் மணங்களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன; சட்டங்கள் செய்யவும் நாடு முனைந்து நிற்கிறது; இளைஞருள் ஒருவிதப் புத்துணர்வு தோன்றியிருக்கிறது; மூலை முடுக்குகளிலும் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. பெண்ணுலகம் விழித்துக் கொண்டது என்று சுருங்கச் சொல்லலாம். இந்நூல் இன்னும் பல நலன்களைச் செய்யும் என்றே நம்புகின்றேன்''.

''பெண்ணின் பெருமை'' எனும் ஒரு நூல் ஆற்றியுள்ள தொண்டு இது என்ன், திரு.வி.க.வின் ஒவ்வொரு நூலும் ஆற்றியுள்ள தொண்டு எவ்வளவு? கணக்கிட்டால் அதுவே ஓர் ஆய்வுக் கட்டுரையாகும்.!


திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டு, தமிழ்த் தொண்டு மட்டுமோ? அன்று அன்று!

அது பெண்ணுலகின் பெருந்தொண்டு; தனி மனிதனைச் சமுதாய மனிதனாக்கும் அருந்தொண்டு; நாட்டுப்பற்றை வளர்க்கும் நாட்டுத் தொண்டு; அறிவுச் சமயத்தை வளர்க்கும் சமயத் தொண்டு; அன்பு வளர்க்கும் அறத்தொண்டு; புத்தறிவை வளர்க்கும் அறிவுத் தொண்டு; தொழிலாளர் நலன் வளர்க்கும் பாட்டாளித் தொண்டு; சமத்துவச் சமுதாயம் அமைக்கும் சமதர்மத் தொண்டு!

பாவேந்தர் திரு.வி.க.வின் தமிழ்த்தொண்டின் திறம் பற்றிக் கூறுகிறார்.

''திரு.வி.கலியாணசுந்தரனாரின்
செந்தமிழ்க் கட்டுரைகள்என்னும்
அருவிகளில் ஆடியநல்லறிஞர்களும்
அறிவுபெற்றார்; இளைய சிட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
குதித்தனவே; வடசொல்லின் கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
கண்டுகளித்தனவே யன்றோ?

திரு.வி.க.வின் தமிழ் உள்ளம் இறுதியாகக் கருதிய கருத்து அவர் தம் தொண்டு வழி நடப்பார் தொடர்ந்து பணிபுரிய ஒரு பெரும் குறிக்கோள் ஆகும். ''மார்க்சியத்தின் உயிர்நாடி பொருள்; காந்தியத்தின் உயிர்நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று, வருங்காலப் புது உலகத்தை நல்வழியில் அமைக்க வல்லதென்பது எனது கருத்து'' என்று திரு.வி.க. கூறியுள்ளார்! இந்தப் புது உலகம் சமைக்கும் பணியே தமிழ்த்தொண்டர் அனைவரும் ஏற்க வேண்டிய பணியாகும்! அதுவே திரு.வி.க.வுக்குக் காட்டும் நன்றியாகும்!



# திரு.வி.க. நூல்களில் காணப்படும் அறவுணர்வுகள்

டாக்டர் அ. நாகலிங்கம்

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பது முன்னோர் மொழி. உலகில் உள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு அவ்வப் பொழுது பெரியோர் பலர் தோன்றி வழிகாட்டி வருகின்றனர். இவர்கள் வரிசையில் இடம் பெற்றவர் தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார்.

இவர் நூல்களில், மக்கள் அறத்தொடு இயைந்த நேரிய இன்ப வாழ்க்கைக்கான வழிகளைக் காணலாம்.

ஒருவர், வாழ்க்கையில் அறநெறியில் நின்று வாழவேண்டுமென்றால் அவர் 1) மரபுவழிப் பண்புடையவராய் 2) மறநெறியில் சென்று உண்மை உணர்ந்து மனம் திருந்தியவராய் 3) பெரியோர் சேர்க்கையால் அறத்தில் உரம் பெற்றவராய் 4) நன்னூல்கள் பயிற்சியால் அறத்தைத் தெள்ளத் தெளிந்தவராய் இருக்க வேண்டும். திரு.வி.க.வின் அற உணர்வு இவற்றால் உருவானது.

திரு.வி.க.வின் நூல்கள் போராடும் உள்ளங்களுக்கு ஆறுதல் தருபவை. நன்னெறிகளை எடுத்துரைத்து வாழ்க்கையை இன்ப மயமாக்குபவை. இந்நூல்களில் காணப்படும் அறஉணர்வுகள் சிலவற்றை இங்கே காண்போம்.

**கடவுள் வழிபாடு :**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளை வணங்க வேண்டும். கடவுள் வணக்கமே வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாக இருப்பதை முன்னோர் வாழ்க்கையால் அறிகின்றோம். திரு.வி.க. கடவுள் பக்தி உடையவர். முருகனைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். அவருக்கு உகந்த கோயில் திருப்போரூர். கடவுளையும் அவர் நிலைகளையும் அவரை வழிபடும் முறைகளையும் திரு.வி.க. விளக்கும் மாட்சி அறியற்பாலது.

**கடவுள் :**

''கடத்தலையுடையது கடவுள் என்றும் எல்லாவற்றையுங் கடந்து நிற்பது கடவுள் என்றும், உள்ளமாகிய உயிரைக் கடவுவது (செலுத்துவது) கடவுள் என்றும் பலவாறு கூறுப. அவரவர் அறிவாற்றலுக்குத் தக்கவாறு கடவுள் பொருளாகிக் கொண்டே போகும். மெய்யுணர்வு விளங்கியதும் கடவுளின் உண்மைநிலை புலனாகும்.

கடவுளை **அது** என்றும், **அவள்** என்றும், **அவன்** என்றும் சொல்வது உலக வழக்கு. ஊர் பேரில்லா ஒன்றை எப்படிச் சொன்னாலென்ன?

**மூவித நிலை :**

கடவுள் ஒன்றே. அதன் இயல்புகள் பல பல. இயல்புகளைத் திரட்டி மூவகைப் படுத்தலாம். ஒன்று எல்லாவற்றையுங் கடந்து தனித்து நிற்கும் நிலை; மற்றொன்று எல்லாவற்றிலும் நீக்கமறக் கலந்து நிற்கும் நிலை; இன்னொன்று குருவினுள் கூர்ந்து விளங்கும் நிலை. முன்னையது வழிபாட்டுக்குரியதாகாது; பின்னையன வழிபாட்டுக் குரியனவாய்த் துணை புரிவன.

மனமுடைய மக்கள்-வாக்குடைய மக்கள்-எல்லாவற்றையுங் கடந்து நிற்கும் ஒன்றை எப்படி நினைத்தல் கூடும்? எப்படி வாழ்தல் கூடும்?

எல்லாமாயுள்ள நிலை நினைத்தற்குரியது; வாழ்த்தற்குரியது. இதுவே கடவுள் இயற்கையை உடலாக்கொண்ட நிலை, இயற்கை உடல்; கடவுள் உயிர்.

இயற்கையில் இறை நீக்கமறக் கலந்துள்ள நுட்பம், இயற்கை வழிபாட்டாலேயே சிலர்க்கு இயல்பாக விளங்கும். பலர்க்கு அஃது அவ்வழிபாட்டால் விளங்குவதில்லை. இப்பலர்க்குக் குருநாதன் அருள் தேவை. கடவுள் குருநாதன் உள்ளத்தையும் கோயிலாகக்கொண்டு உயிர்கட்கு அருள் செய்தலால் கடவுள் நிலைகளில் குருநாதன் நிலையும் ஒன்றாகும். குருநிலையைத் தனியாகக் கொள்ளாது இயற்கை நிலையுடன் ஒன்ற வைப்பதும் ஒருவகை.'' (திருக்குறள் விரிவுரை-பாயிரம்)

இங்குச் சொல்லப்படும் குருவைக் கருத்தில் கொண்டு நோக்கின் ஒவ்வொரு சமயத்திலே உள்ள கடவுளரை (நாம் கடவுளாக நினைப்பவரை) குருமாராகக் கொள்வர். திரு.வி.க. ''சன்மார்க்க போதமும் திறவும்'' நூலில் விளக்கம் காண்க.

**புலால் உண்ணாமை:**

நாட்டில் புலால் உண்போர் தொகை நாளுக்குநாள் பெருகி வருகிறதேதவிரக் குறையவில்லை. மனிதன் தொடக்கத்தில் பொருந்திய உணவான மரக்கறி உணவையும் பின்னர்ப் பொருந்தா உணவான அசைவ உணவையும் உண்ணலானான். இன்று வரை அசைவ உணவை அவனால் விட முடியவில்லை. இனியும் அவனால் அதை விடவும் முடியாது. அந்த அளவிற்கு அஃது அவனைச் 'சிக்'கெனப் பற்றிக் கொண்டது. தன் ஊன்பெருக்குவதற்குப் பிற உயிர்களின் ஊனை உண்பவன் எங்ஙனம் உயிர்களிடத்து அன்பைச் செலுத்த முடியும்? 'உயிர்க்கொலை கூடாது' என வற்புறுத்திய புத்த பகவானின் சமயத்தைப் பின்பற்றும் இலங்கை சிங்களவர் மாமிச உணவை உண்பதனால் பெருகிய மூர்க்கம், உடன் வாழ்ந்து வரும் தமிழர்களையே பிணக்குவியல்களாக்கி விட்டது அல்லவா? எனவே, 'புலால் அமைதியை-அன்பை வளர்க்காது' என்பர் திரு.வி.க.

**கள்ளுண்ணாமை:**

திருவள்ளுவர் காலம் முதல் இன்றுவரை கள்ளை-மதுவை

வெறுத்துப்பேசாத சான்றோர் இல்லை. ஆனால், இதில் என்ன வியப்பு எனில் எவ்வளவுக்கு எவ்வளவு சான்றோர் மதுவைப் புறக்கணிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அது பெருகிக்கொண்டு வருகிறது! தீமைக்கு ஆற்றல் அதிகம் போலும்!.

தமிழ் வளர்த்த தந்தை திரு.வி.க. கள் உண்டதில்லை. கள் உண்ணக்கூடாது என்ற கோட்பாடு உடையவர். நாட்டுமக்கள் கள்ளை-சாராயத்தை உண்டு அறிவை இழந்து துன்புறுவதை இவர் விரும்புவதில்லை. மக்கள் அறிவுத் தெளிவுடன் இன்ப வாழ்க்கை வாழவே இவர் விழைந்தார். அவ் இன்ப வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கும் கள்ளை இவர் கடிந்தே வந்தார். பத்திரிகைகளில் எழுதினார். மாநாடுகளில் பேசினார். 5.4.1924ல் குளித்தலை என வழங்கும் குளிர் தண்டலையில் நடந்த திருச்சிராப்பள்ளி மாவட்ட 6வது அரசியல் மாநாட்டுத் தலைமையுரையில் மதுவிலக்குப் பற்றித் திரு.வி.க பேசிய பேச்சு இன்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான உரையாகும்.

"கள், மனிதனது உடல் வளத்தையும் உயிர் நலத்தையும் கெடுப்பது. தென்னை, பனை முதலியன கள்ளுக்காக ஏற்பட்டன வல்ல. மனித வாழ்வுக்கு வேண்டப்படும் பொருள் பல அவற்றில் இருக்கின்றன. மனிதனின், தன் முயற்சியால், கள்ளை அவற்றினின்றும் உண்டு பண்ணுகிறான். கள் இயற்கைப் படைப்பில் விளைவதன்று. இயற்கைப் படைப்பிலில்லாத ஒன்றைக் குடிப்பது வாழ்வைக் குலைக்கு மென்பதில் ஐயமில்லை."

**தீண்டாமை**

'தீண்டாமை ஒரு பேய்' என்றனர் நம் முன்னோர். பேய் பிடித்த ஒருவன் அதன் தாக்குதலால் பன்னாள் துன்புற்று ஒரு நாள் விடுதலை அடைவதுபோல் தீண்டாமையால் நாம் பலகாலம் துன்புற்று வருகிறோம். இனி நாம் அவ் இன்னலினின்றும் மீளுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. இன்று நகரத்தில் அத் தீண்டாமை தெரியவில்லை அதைப்பற்றி எவரும் கவலைப்படுவதில்லை. அஃது இங்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால் கிராமங்களில் அது தலைவிரித்தாடுகிறது. இன்னும் ஆடுகிறது. அதை ஒழிக்க கிராம மக்கள் முன்வர வேண்டும்.

அரசாங்கம் இன்று தீண்டாதாருக்கெனக் கல்வியிலும் வேலை வாய்ப்புக்களிலும் பல சலுகைகளை அளித்துவருகிறது. இதனால் அவ் இனத்தார் பல துறைகளில் பொருளியல் வசதியுடன் முன்னேறி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கதே. அத்தீண்டாமையைத் தமிழகச் சீர்திருத்தச் செம்மல் திரு.வி.க. தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவில்லை. மாநாடுகளின்போது உடன் உறைந்தும் பழகியும் உண்டும் இருக்கிறார். தீண்டாமையை வெறுத்து ஒதுக்கிய அவர் அதை நாட்டிலிருந்து விரட்டவேண்டும் என்று வரலாற்றுப் புகழ்மிக்க காஞ்சி மாநாட்டில் தமிழ் மாகாண காங்கிரசில் (31 வது தமிழ்மாநாட்டில்) 21.11.1925ல் பேசியுள்ளார். அப்பேச்சின் ஒரு பகுதி வருமாறு:

கடவுள் படைப்புக்கு உட்பட்ட மக்களுள் ஒரு கூட்டத்தாரைத் தீண்டாதாரென விலக்கி வருத்துவதினுங் கொடுமை வேறொன்றுண்டோ? இக்கொடுமை, மக்கள் கூட்டத்துக்கே உய்யுநெறி காட்டும் உயர்கொள்கையுடைய ஹிந்துமதத்தைப் பரவாதவாறு தடைந்து சிறைப்படுத்தியிருக்கிறது. ஹிந்து மதத்திலுள்ள இக்கொடுமை அம்மதத்தை மாத்திரமா சிறைப்படுத்தியிருக்கிறது? 'அந்தோ! என்னருமைப் பாரத நாட்டையே அது சிறைப்படுத்தியிருக்கிறது! ஹிந்து மதத்திலுள்ள இக்குறை மற்ற இந்தியரையும், வருத்தி நிற்கிறது. இவ்வேளையில் 'தீண்டாமை இருந்தே தீரல் வேண்டும்.' என்று சில நூல்களைக் காட்டிப் போரிடுவோர் இல்லாமலில்லை. தீண்டாமை வேண்டும் என்னும் நோக்கோடு எழுதப்பட்ட நூல்களில் தீண்டாமை திகழாதிருக்குமோ? உரிமை வடிவான ஆண்டவன் அருள்பெற்ற மெய்யடியார்கள் அருளிய நூல்களில் தீண்டாமை என்னும் நாற்றம் வீசவே வீசாது.

(தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு)

**கலப்பு மணம்**

திரு.வி.க. கமலாம்பிகையை மணந்தார். 6 ஆண்டுகள் இல்வாழ்க்கை வாழ்ந்தார்; மனைமாட்சியின் சிறப்பை உணர்ந்தார். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாட்டில் உறைந்தார். உலகம் ஒருகுலமாகவேண்டுமெனின் அதற்குரிய ஒரே வழி கலப்புமணம் தான் என்ற கொள்கை உடையவர். தம் காலத்தே கலப்பு மணங்கள் பலவற்றை நடத்தியவர். வரவேற்றவர். சான்றாக 'ருக்மணி-அருண்டேல்' திருமணத்தைச் சொல்லலாம். இம் மணம் பற்றிய இவரது கருத்துக்கள் வருமாறு.

"காதல், சாதி மதம் நிறம் நாடு முதலிய கட்டுக்களைக் கடந்தது. ஒருவன் தனக்கு ஒத்த ஒருத்தியையும், அவ்வாறே ஒருத்தி தனக்குத் தக்க ஒருவனையும் தெரிந்தெடுக்கும் உரிமையுடையது கலப்பு மணம். அவ்வுரிமை காதலிலேயே செறியும். ஆகவே கலப்பு மணத்தைத் தவறாக உணரலாகாதென்பது எனது வேண்டுகோள்.

ஒரே குடும்பத்தில் ஒருவர் ஹிந்துவாகவும், இன்னொருவர் ஜைனராகவும், மற்றொருவர் புத்தராகவும், வேறொருவர் கிறிஸ்துவராகவும், பிறிதொருவர் இஸ்லாமியராகவும் இருக்கும் முறையில் உலகம் சீர்திருத்தம் எய்தல் வேண்டுமென்றும், மத மாறாமலே ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரை மணக்கும் உரிமை இருத்தல் வேண்டுமென்றும், அப்பொழுதே உரிமையுணர்வும் சமயப்பொறையும் வளருமென்றும், மதவெறியும் மதவாதமும் இடம்பெறாதொழியுமென்றும் யான் எண்ணுகிறேன்; பேசுகிறேன்; எழுதுகிறேன். இச்சீர்திருத்தத்துக்கும் கலப்பு மணம் தேவை" (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்)

இதுகாறும் கண்டவற்றால், திரு.வி.க். இறை வழிபாடு, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, , தீண்டாமை, கலப்பு மணம் ஆகியவற்றை நாட்டில் பரப்பி மக்கள் நலம்பெறப் பாடுபட்டவர் என்பது போதரும்.




## அனைவரையும் நண்பராக்கிக் கொள்ளும் ஆற்றலர்

**திரு**.வி.க. கடைப்பிடித்து எழுதியும் பேசியும் வந்த அன்பு நெறியானது அவரை அன்புமயமாக்கியது. அவருக்குப் பகைவர் என்பவர் யாருமில்லாமல் செய்தது. அவருடன் பழகியவர்கள் அனைவரும் அவருடைய நண்பர்கள் ஆனார்கள். கடைசி வரையில் நண்பர்களாக இருந்து வந்தார்கள்.

—கல்கி

# ஒருமைப்பாட்டின் திருவுருவம்



சிறுவை நச்சினார்க்கினியன்

1983 ஆம் ஆண்டு இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டினை விளக்கும் ஆண்டு. காரணம் திரு. வி.க. நூற்றாண்டு. திரு.வி.க. தான் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகக் குரல் கொடுத்த விடுதலை வீரர். கல்லூரிப் பேராசிரியராய் விளங்கி, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சபை, சிவனடியார் திருக்கூட்டம் முதலிய நிறுவனங்களில் பங்குபெற்று, சமய நூல்களைப் பதிப்பித்தும், குறிப்புரைகள் எழுதியும் வந்த இவர் 1917 டிசம்பர் 7 ஆம் நாள் ''தேசபக்தன்'' எனும் நாளிதழின் ஆசிரியர் ஆனார். பின்னர் 1920 அக்டோபர் திங்களில் தமக்கென ''நவசக்தி'' எனும் வார இதழினைத் தொடங்கினார்.

திரு.வி.க. ''தேசபக்தன்'', ''நவசக்தி'' ஆகிய இதழ்களின் வாயிலாக நாட்டு விடுதலைப் பணிக்காக மக்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி, சுதந்திர வீரர்களாக, நாட்டு விடுதலைக்குப் போராடும் போர்வீரர்களாக உருவாக்கினார். தாம் கற்ற இலக்கியங்கள் அனைத்தும் இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஊட்டச்சத்தாக மாற்றினார். அரசியல் கருத்துகளைத் தமிழ் மொழியில் சொல்லவும் விளக்கவும் இயலாது என்று நம்பிய காலத்தில் திரு.வி.க. அவர்கள் அரசியல் கருத்துகளைத் தம் எழுத்துகளின் மூலமும், தம் வீர உரைகளின் மூலமும் விளக்கம் செய்தார்கள். அத்துறையில் பல கலைச் சொற்களைப் படைத்தார்கள். தனக்கென ஒரு தனி நடையை அமைத்துக்கொண்டார்கள். இதனைப் பலரும் பின்பற்றவும் செய்தார்கள். இங்ஙனம் தாம் நாட்டின் விடுதலைக்காகப் போராடும்பேச்சிலும் எழுத்திலும் ஒருமைப்பாட்டின் உணர்வுகளை மக்களுக்கு ஊட்டத் தவறினாரில்லை. அதனையே ஒரு இலட்சியமாக மேற்கொண்டார்

தொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்க்கத் தீவிரமாக உழைத்தார். ஆசிய நாட்டிலேயே முதன் முதல் 1918 ஏப்ரல் 27-ல் ''சென்னைத் தொழிலாளர் சங்கம்'' உருவாகியது. பல்வேறு தொழிற் சங்கங்களை இணைத்து 1920 ஜுலையில் ''மத்திய தொழிலாளர் சங்கமும்'' பிறந்தது. தொழிலாளர் சங்கத்திற்குப் பல ஆண்டுகள் தலைவராயும் இருந்தார்கள். ஆனால்இவர்கள் என்றும் தொண்டனாகவே விளங்கினார்கள். தொண்டுதான் சன்மார்க்கத்திற்கும் பொதுமைப் பண்பிற்கும் வழிகோலும் எனக் கண்டார்கள். 'தொண்டு செய்யவே எனக்கு மீண்டும் பிறவி வேண்டும்' என வேண்டி நின்றார்கள். மார்க்சிய கருத்துகளை மகாத்மாவின் கருத்துக்களுடன் இணைத்து, பாலில் தேன் கலந்து தருவதுபோல் மக்கள் சமுதாயத்திற்குப் பொதுமையை விளக்கினார்கள். முதலில் தேவைக்குமேல் பொருள் சேர்த்தலாகாது என,

''தேவை அளவில் திரட்டும் பொருட்செல்வம்
பூவை அறமாக்கும் போக்கு.

தேவைக்கு மேலே திரட்டிச் சமயமென்றும்
தேவென்றும் கூவல் திருட்டு

தேவைக்கு மேலே திரட்டும் இடங்களில்
தாவும் கொலைகளவு சார்ந்து.''

-விளக்கம் கூறி அறிவுறுத்தினார்,

அடுத்து மக்கள் யாவரும் உழைத்து வாழவேண்டும் என

''உற்பத்திக் கென்றுழைத்தால் உண்மைச் சமயமாய்
அற்பில் கிடத்தும் அறம்.

உற்பத்தி செய்ய உழையாத் திமிர்வாழ்க்கை
அற்பத்தில் மாளும் அகன்று''

-வற்புறுத்திக் கூறுகிறார். இங்ஙனம் திரு.வி.க. நாட்டின் பொருளாதாரச் சமன்பாட்டிற்கு, உற்பத்தி உழைப்பு இவைகளை வற்புறுத்தி தேவைக்குமேல் பொருள் சேர்க்கக்கூடாது, அது பொதுமைப் பண்மைப் பாதிக்கும் எனக் கண்டு தம் உரை நடையிலும்,

''பிற உயிர்க்குத் தீங்கு செய்ய நினையாமை தேவைக்குமேல் பொருள் வேண்டாமைக்கு அடிகோல்வதாகும். பிற உயிரை வருந்தித் தேவைக்குமேல் பொருள் சேர்ப்பது கடவுள் நெறி நிற்பதாகாது. அது போலியே ஆகும்.''

-எனவும், பிறிதோர் இடத்தில்,

''தேவைக்குமேல் பொருள் திரட்டாமையை அஹிம்சை என்றும், அதுவே பரமதர்மம் என்றும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விருஷபதேவர் அருளினார்''

-என்று சுட்டிக்காட்டி பொதுமைப் பண்பிற்கு கால்கோள் செய்கிறார்.

இதன்பிறகு அடுத்த படிநிலையாகக் கூட்டுறவு வாழ்வை மேற்கொள்ள வேண்டுமென்பார்,

> ''கூட்டுறவால் மக்கள் கொடுந் தனிமைப் பற்றறுக்கும் நாட்டமுற வாழ்வடைவர் நன்று எல்லோரும் வாழவே எல்லோரும் சேர்ந்துழைப்பர்: கல்லார் இலராவர் காண்.
> பொதுமை உலகிடைப் பொய் களவு சூதுப் பொதியகலும்; நீறாகும்; போற்று''

-இவ்வாறு மனத்தில் ஆழப்பதியும் வண்ணம் கூறிய கருத்துகள் ஏராளம். இப்படிப்பட்ட நல்லறங்களை நாம் எங்கிருந்து பெறலாம் எந்தப் பாலினை அருந்தினால் இப்படிப்பட்ட அறநிலைகளைப் பெற்று மனிதன் மானிடனாய் வாழ்வான் என்பதை,

> ''அறம்விளங்க மாசை அகற்றுவதென்ன? திறம் விளங்க வள்ளுவரைத் தேடு.
> பொருட்பாலோ டின்பப்பால் போந்த அறப்பாலாம் அருட்பால் அருந்துக ஆர்ந்து''

-என்று வள்ளுவத்தை நாடச் சொல்கிறார். ஏன் வள்ளுவரை நாடச் சொல்கிறார் எனின், முதலில் உலகு, உலகு எனக் குரல் கொடுத்துப் பேசியது வள்ளுவம். இதனை அவரே கூறுவார்:

> ''திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கை பிறந்த பெருந்தமிழ்க் குடியில் தோன்றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய சிறுமைக் கட்டுக்களில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகே படிந்து கிடந்தது'' —

-என்று கூறி இதற்கு உரிய மூல காரணத்தையும் கூறுவார்,

> ''பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படிய வில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை; ஒற்றுமையே அவர்களுக்குப் புலனாகியது.

அதுவருமாறு:

> ''யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா. . . . . . . .''

இப்புறப் பாட்டை உற்று நோக்குக; நோக்கி நோக்கி உன்னுக; உன்னி உன்னி அதில் ஒன்றுக; பாட்டுப் பொருளில் வேற்றுமைக்கு இடமுண்டோ? பிணக்குக்கு இடமுண்டோ? எல்லாம் ஒருமை!''

இப்படித் திரு.வி.க. நாட்டு மக்களுக்கு ஒருமைப்பாட்டினை உணர்த்திச் செல்ல மறப்பதில்லை. நாட்டுப் பணிகளில் திளைத்து நின்றபோதும், சமயப் பணிகளில் முனைந்து திறந்த போதும் மொழி வளர்ச்சியால் தனித்தோர் ஊக்கம் செலுத்திய போதும் ஒருமைப்பாடே மேலோங்கி நின்றது.

இப் பொதுமைப் பண்பு (ஒருமைப்பாடு) மேவிட ''மானிடத் தன்மை'' ( humanism ) பெற்றிருத்தல் வேண்டும். மனிதத் தன்மை பிற உணர்வுகளை அன்பினால் நேசித்துஅறவணைப்பது, மனிதத்தன்மை பெறுவதற்குக் கல்வியாளனாக மலர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை. மனிதத் தன்மை மேற்பட்டு இருந்தால் போதும். இதற்கு எடுத்துக்காட்டாக, ஏசுவையும் இராமகிருஷ்ணரையும் கூறுவர். ''இவர்கள் கல்வியாகிய வழியை மேற்கொள்ளாமலே ''மானிடத் தன்மை'' என்ற பயனைப்பெற்று விட்டனர்'' என்பார்கள்.

திரு.வி.க.வோ கல்வியிலும் சிறந்து மானிடத் தன்மையிலும் சிறந்து விளங்கினார்கள்.

ஒவ்வொரு நூலிலும் ஒருமைப்பாடு அதாவது பொதுமைத் தன்மை கோடிட்டுச் செல்லாமல் இருந்ததில்லை; 'பொதுமை வேட்டல்' எனும் தனி நூலும் இயற்றி அருளினார். அந்நூலில் தன் நெஞ்சினைப் பளிங்கு போல் திறந்து காட்டுகிறார். அவரவர் கருத்து அவரவர் இடத்தில் சிறந்தது - உயர்ந்தது - விழுமியது என்பார். அக்கருத்துகள் அனைத்தும் மானிடத் தன்மை அடைந்திட வழிகோலும் தன்மையின என்று விளக்கம் தருவார். திரு.வி.க.வின் நூல்கள் எப்படியோ, அப்படியே அவர்களது வாழ்வும்.

திரு.வி.க. அன்பினாலும் தம் சீரிய பண்பினாலும் ஆயிரம் ஆயிரம் மக்களைத் தன்வசப்படுத்தினார். தொழிலாளர்கள் அவர்கள் சுட்டிக்காட்டிய வழிநடந்து வெற்றிகள் பல பெற்றார்கள். திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப்பில் தாம் பழகிய அன்பர்களின் குண நலன்களைப் பாராட்டி, அவர்கள் தம் வாழ்வில் செய்த சாதனைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாரந்தோறும் வெளிவரும் இதழ்களில் திரு.வி.க.வைத் தாக்கி இழித்தும் பழித்தும் பலர் எழுதினர், பலர் பேசினர். இத்தனைக்கும் திரு.வி.க. ஒரு புன்முறுவல் பூப்பார். அவ்வளவுதான். தன் வாய் அசைத்து அவர்களை ஒன்றும் சொன்னதில்லை. ஆனால் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு மிக நாகரிகமாக அடக்கமான விடைகள் எழுதிய பண்பாளர். இது ஒன்றே மானிடத்தன்மை அவர் முழுமையாகப் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று. காழ்ப்பும் பகையும் அவர் கண்டதில்லை. ஒருவேளை இந்த இரண்டு சொற்களும் அவர் அறியார் போலும்!

## பாச்சுவை பாரதிதாசன்

**திரு.வி.க.**



எல்லாவற்றையும் பாட்டாக நோக்கும் நெஞ்சில் பாட்டு முகிழ்க்கும். அதனை எழுத்தோவியமாக அமைக்கும்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை. தோழர் பாரதிதாசனுக்கு அப்பேறு எளிதில் வாய்த்தது. இது கருவிலுற்ற திருவேயாகும்.

தோழருடன் சிறிது நேரம் பேசினும் அவர்தம் குழந்தை மனம் புலனாகும். குழந்தை மனம் பாட்டுப் புலம் என்பதை விளக்க வேண்டுவதில்லை.

புதுவைத் தமிழ்வைப்பு-சுப்புவினிடத்திருந்து பொங்கி வழிந்த பாமணிகள் பலப்பல. அவற்றுள் கருத்து வேற்றுமை உண்டு. வேற்றுமை என் நெஞ்சைக் கவர்வதில்லை. பாட்டே என் நெஞ்சைக் கவரும். இது சுப்புவின் பாட்டுத்திறம் என்று கூறாது வெறென்ன கூறுவது?

பொதுமைப் பொழில்-புதுமை மலர்-தமிழ்த்தேன்-பாச்சுவை-பாரதிதாசன்.

பொன்னி: 29.4.1951)

# மாநில தலைமைக் கணக்காயர்-I

தமிழ்நாடு, 261, அண்ணா சாலை,
சென்னை-600 018

## அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி
## 1982–83 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள்

மாநில தலைமைக் கணக்காயர், தமிழ்நாடு, அவர்கள், மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (G.P.F) 1982–83 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (Account Slip) அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணி புரிந்தார்களோ, அந்தந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆகவே, தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, தத்தம் கணக்கு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இந்தக் கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப்படு மேயானால், அந்தக் குறைகளை நிவர்த்திக்க, சம்பளப்பட்டியல் விவரங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள். கணக்கு அறிக்கைகள் கிடைக்காவிட்டாலும் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே எழுதவும்.

திரு சு. விசுவநாதன்,
கணக்கு அலுவலர் (F.M.I. பிரிவு),
மாநில தலைமைக் கணக்காயர் அலுவலகம்,
261 அண்ணா சாலை,
சென்னை-600 018.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


# கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள்
# ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும்
# அழகோவிய சேலைகள்...

கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி





இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு தரும் வகையில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் கறுப்புச்சட்டை அணிந்துள்ளனர்.



இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை குறித்து காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத் (தமிழ்நாடு கிளை)தின் ஆதரவில் சென்னையில் 19.8.83 அன்று இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரைநிகழ்த்தினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்களும், மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.







சென்னை அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் இந்து ஆதிதிராவிடர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 43 இணைகளுக்குச் சிறப்புத் திருமணம் 24.8.83 அன்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி இராஜம்மாள் வீரப்பன் அவர்கள் மணமகளுக்குத் திருமாங்கல்யம் வழங்கினார்கள். படத்தில் திருமணத் தம்பதிகளுக்கு அமைச்சர் அவர்கள் பரிசுப் பொருட்கள் வழங்குகிறார்.



